SRI VYASA VIDWAT SADAS

SOUVENIR

" ஏகாம்பரத்தின் கோபுர நிழலில் நாம் உட்கார்ந்துகொண்டிருக்கிறோம்."

துவக்க விழாவில் ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள்.

Souvenir

KANCHEEPURAM

1964

THIRD
VYASA VIDWAT SADAS

HELD AT KANCHEEPURAM

1964

SOUVENIR

1964-ம் ஆண்டில் காஞ்சீபுரத்தில் நடைபெற்ற மூன்ருவது வியாச வித்வத் சதஸ்ஸில் ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் ஆற்றிய பேருரைகளும், ஆகமம், சிற்பம், பாரதம், இசை, நடனம் முதலிய கிராமியக் கலைகள், ஆலய அமைப்பு, வழிபாட்டு முறை, கல்வெட்டு ஆராய்ச்சி ஆகிய விஷயங்களைப்பற்றி பல சாஸ்திர அறிஞர்களும், கலை வல்லுனர்களும் வழங்கிய சொற்பொழிவுகளும் அடங்கிய

தெய்வக்கலை மலர்

சமர்ப்பணம்

சென்ற ஆண்டு காஞ்சீபுரத்தில் நடைபெற்ற மூன்ருவது வியாச வித்வத் சதஸ்ஸில் ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளும், பல சாஸ்திர பேரறிஞர்களும் ஆற்றிய சொற்பொழிவுகளையும், சிவாசாரியர்களும் வைஷ்ணவ பட்டாசாரியர்களும் ஸ்தபதிகளும் நடத்திய சர்ச்சைகளின் சுருக்கங்களையும், இந்த மலரில் அளித்துள்ளோம். விழாவின்போது எடுக்கப்பட்ட பல நிகழ்ச்சிகளின் புகைப்படங்களும் இம்மலரை அலங்கரிக்கின்றன.

இப்பொன் மலரை ஞானுசிரியரான ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸ்வாமிகளின் பொன்னடிகளில் சமர்ப்பிக்கின்ரேும். வியாச வித்வத் சதஸ்ஸின் நோக்கங்களை தமக்கே உரிய எளிய மொழியில் நமது ஆசார்ய ஸ்வாமிகள் கூறியுள்ளதை படித்து பயன் பெறுவோமாக.

சதஸ் கமிட்டியார்.

எல்லோருக்கும் ஆதர்ச புருஷர்களாக இருக்கிறவர்களுடைய உபதேசங்கள் நமக்கு ஸத்சங்கத்தின் பிரயோஜனத்தை உண்டாக்கும். பீஷ்மர் தர்மருக்கு உபதேசம் பண்ணுகிருர். அதை தர்மபுத்திரர் சிரவணம் பண்ணுகிருர். பாரதத்தில் சாந்தி பருவம் முழுவதும் இந்த உபதேசந்தான். அவற்றை யெல்லாம் காதால் கேட்டாலே நம் மனத்தில் சாந்தி பிறக்கும்.

இப்போது இந்தக் கதைகளை யார் யார் சொல்லிக் கொண்டிருக்கிருர்களோ அவர்கள் இதெல்லாம் நம்முடைய தலைமுறையோடு போதும் என்று எண்ணக் கூடாது. யார் யார் ஈசுவர ஆலயத்தில் ஆராதித்துக் கொண்டிருக்கிருர்களோ அவர்களுக்கு "நமக்கு இந்தக் காலத்தில் மதிப்பு மிகவும் குறைந்து விட்டது. இந்த வேலையை தம்மோடு தொலைத்து விடுவோம். நம் பையன் எங்காவது 'டைப்' அடித்து ஜீவனம் செய்யட்டும்" என்று தோன்றக்கூடாது. சிற்பிகள் "ஏதோ சம்பிரதாயமாக வந்ததுடன் கொஞ்சம் மூல சாஸ்திரத்தையும் படித்தோம். இப்போது இவற்றுக்கெல்லாம் பிரயோஜனம் இல்லாமல் போய்விட்டது. நம்முடைய சந்ததிக்கு இதனுல் ஒன்றும் பயன் இல்லை" என்று நினைக்கக் கூடாது. இப்படி அவர்கள் எல்லோரும் எண்ணுமல்

இருக்க நாம் ஒன்று சேர்ந்து அவர்களுக்கு ஆதரவு காட்ட வேண்டும். இந்தத் தலைமுறையில் ஈசுவர ஆராதனை பண்ணு கிறவர்களுக்கும் சிற்ப சாஸ்திரம் தெரிந்தவர்களுக்கும் பாரதப் பிரவசனம் பண்ணுகிறவர்களுக்கும் அதிக பொறுப்பு இருக் கிறது. என்ன சிரமமாக யிருந்தாலும் மற்றவர்கள் பரிகாசம் பண்ணினாலும் அவற்றை யெல்லாம் ஏற்றுக்கொண்டு நம் முடைய மனத்துக்கு ஏற்க நல்லது பண்ணுகிறோம் என்ற நினைவே இருக்கவேண்டும். என்ன கஷ்டப்பட்டாலும் இந்த ப்ராசீனமான தர்மத்தை நழுவவிடக் கூடாது என்ற எண்ணம் வேண்டும். பணம் உள்ளவர்களும் அவர்களுக்கு வேண்டிய சகாயத்தை மற்றவர்களுடன் பண்ண வேண்டும். புத்தி உள்ள வர்கள் அவர்களுடைய காரியங்களுக்கு உதவியாக விஷயத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். இப்படிச் செய்தால் ஈசுவரனு டைய ஞாபகத்தையும் சாந்நித்தியத்தையும் கொடுக்கப் பழைய காலத்தில் கட்டிய கோயில்களை பழைய மாதிரி காப்பாற்றுகிற புண்ணிய முண்டாகும். இந்த விஷயங்களில் மனத்தைச் செலுத்தினால், அசத்தான காரியங்களில் மனம் போகாது. எது நல்ல காரியம் என்பது ஜனங்களுக்குத் தெரிந்து விட்டால், அதில் ருசி ஏற்பட செய்து விட்டால், அப்புறம் இதைவிட மாட்டார்கள்; துர்வாசனையில் மனம் செல்லாது.

சமர்ப்பணம்

சென்ற ஆண்டு காஞ்சீபுரத்தில் நடைபெற்ற மூன்றுவது வியாச வித்வத் சதஸ்ஸில் ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளும், பல சாஸ்திர பேரறிஞர்களும் ஆற்றிய சொற்பொழிவுகளேயும், சிவாசாரியர்களும் வைஷ்ணவ பட்டாசாரியர்களும் ஸ்தபதிகளும் நடத்திய சர்ச்சைகளின் சுருக்கங்களேயும், இந்த மலரில் அளித்துள்ளோம். விழாவின்போது எடுக்கப்பட்ட பல நிகழ்ச்சிகளின் புகைப்படங்களும் இம்மலரை அலங்கரிக்கின்றன.

இப்பொன் மலரை ஞானுசிரியரான ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸ்வாமிகளின் பொன்னடிகளில் சமர்ப்பிக்கின்றேம். வியாச வித்வத் சதஸ்ஸின் நோக்கங்களே தமக்கே உரிய எளிய மொழியில் நமது ஆசார்ய ஸ்வாமிகள் கூறியுள்ளதை படித்து பயன் பெறுவோமாக.

சதஸ் கமிட்டியார்.

எல்லோருக்கும் ஆதர்ச புருஷர்களாக இருக்கிறவர்களுடைய உபதேசங்கள் நமக்கு ஸத்சங்கத்தின் பிரயோஜனத்தை உண்டாக்கும். பீஷ்மர் தர்மருக்கு உபதேசம் பண்ணுகிருர். அதை தர்மபுத்திரர் சிரவணம் பண்ணுகிருர். பாரதத்தில் சாந்தி பருவம் முழுவதும் இந்த உபதேசந்தான். அவற்றை யெல்லாம் காதால் கேட்டாலே நம் மனத்தில் சாந்தி பிறக்கும்.

இப்போது இந்தக் கதைகளே யார் யார் சொல்லிக் கொண்டிருக்கிருர்களோ அவர்கள் இதெல்லாம் நம்முடைய தலைமுறையோடு போதும் என்று எண்ணக் கூடாது. யார் யார் ஈசுவர ஆலயத்தில் ஆராதித்துக் கொண்டிருக்கிருர்களோ அவர்களுக்கு "நமக்கு இந்தக் காலத்தில் மதிப்பு மிகவும் குறைந்து விட்டது. இந்த வேலையை தம்மோடு தொலைத்து விடுவோம். நம் பையன் எங்காவது 'டைப்' அடித்து ஜீவனம் செய்யட்டும்" என்று தோன்றக்கூடாது. சிற்பிகள் "ஏதோ சம்பிரதாயமாக வந்ததுடன் கொஞ்சம் மூல சாஸ்திரத்தையும் படித்தோம். இப்போது இவற்றுக்கெல்லாம் பிரயோஜனம் இல்லாமல் போய்விட்டது. நம்முடைய சந்ததிக்கு இதனல் ஒன்றும் பயன் இல்லை" என்று நினைக்கக் கூடாது. இப்படி அவர்கள் எல்லோரும் எண்ணுமல்

இருக்க நாம் ஒன்று சேர்ந்து அவர்களுக்கு ஆதரவு காட்ட வேண்டும். இந்தத் தலைமுறையில் ஈசுவர ஆராதனை பண்ணு கிறவர்களுக்கும் சிற்ப சாஸ்திரம் தெரிந்தவர்களுக்கும் பாரதப் பிரவசனம் பண்ணுகிறவர்களுக்கும் அதிக பொறுப்பு இருக் கிறது. என்ன சிரமமாக யிருந்தாலும் மற்றவர்கள் பரிகாசம் பண்ணினாலும் அவற்றை யெல்லாம் ஏற்றுக்கொண்டு நம் முடைய மனத்துக்கு ஏற்க நல்லது பண்ணுகிறோம் என்ற நினைவே இருக்கவேண்டும். என்ன கஷ்டப்பட்டாலும் இந்த ப்ராசீனமான தர்மத்தை நழுவவிடக் கூடாது என்ற எண்ணம் வேண்டும். பணம் உள்ளவர்களும் அவர்களுக்கு வேண்டிய சகாயத்தை மற்றவர்களுடன் பண்ண வேண்டும். புத்தி உள்ள வர்கள் அவர்களுடைய காரியங்களுக்கு உதவியாக விஷயத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். இப்படிச் செய்தால் ஈசுவரனு டைய ஞாபகத்தையும் சாந்நித்தியத்தையும் கொடுக்கப் பழைய காலத்தில் கட்டிய கோயில்களை பழைய மாதிரி காப்பாற்றுகிற புண்ணிய முண்டாகும். இந்த விஷயங்களில் மனத்தைச் செலுத்தினால், அசத்தான காரியங்களில் மனம் போகாது. எது நல்ல காரியம் என்பது ஜனங்களுக்குத் தெரிந்து விட்டால், அதில் ருசி ஏற்பட செய்து விட்டால், அப்புறம் இதைவிட மாட்டார்கள்; துர்வாசனையில் மனம் செல்லாது.

காம கோடிநற் பீடத்தை யாளுங்

காசி னிக்கொரு குருவென வந்தோய்!

நேம மோடுசந் திரமவு லீசர்

நெடிய மேருவின் பூஜையெ லாஞ்செய்

ஏம மார்பெரு கிதயங்கொள் நல்லோய்

இலகுஞ் **சந்திர சேகரேந்திர**ரென்

நாம மேவிய **சரச்சுதி** யே! நின்

நாட்டம் எம்மை நற்கதிக்கழைத் திடுமே

—அருட் புகழ்

स्तुतिपञ्चरत्नम्

मुक्तिप्रदासु नगरीषु ललामभूताम्
काञ्चीपुरीमधिवसन्तमनर्घशीलम् ।
श्रीकामकोटिपरपीठमुपेयिवांसम्
श्रीचन्द्रशेखरयतीन्द्र गुरुन्नमामि ॥

कामाक्षी कुशलं करोतु सततं भक्तार्त्तिविध्वंसिनी
काञ्चीमण्डलवासिनी भगवता श्रीशंकरेणार्चिता ।
अस्माकं समुपस्थितां कृशतरीं वृत्तिं निरस्यादरात्
राजन्यान् सुगुणान्विधाय जगतां क्षेमाय बद्धादरान् ॥

देवो नः शुभमातनोतु भगवान् कारुण्यवारां निधिः
पुण्ये वेगवतीतटे करिगिरौ यः पुण्यकोट्यां स्थितः ।
आविर्भूय महाध्वरे विधिकृते हव्यं वहन् सादरम्
भक्ताभीष्टफलप्रदाननिपुणः संदृश्यते सर्वदा ॥

शृण्वन्त्विदं बुधजनाः कुशलं जनानां
वैखानसे जनिमतां वरभूसुराणाम् ।
श्रीशार्चनप्रणयिनां वरभूमिभागान्
शुल्कादिकल्करहितानददुर्महीशाः ॥

देवेशपूजनपराः सुखमीशमूर्तीः
भक्त्यार्चयन्तु सततं जगतां विभूत्यै
इत्यादरेण लिखितं विधिमद्य गूढम्
शुल्कादि हन्त परिगृह्य निपीडयन्ति ॥

श्रीशार्चनप्रणयिना नरसिंह नाम्ना
वैखानसेन रचितं स्तुतिपञ्चरत्नम् ।
संश्रुत्य साधु महनीयगुणाभिरामाः
कुर्वन्तु भव्यनिवहं रसिकाः सदस्याः ॥

त्वत्पूजकाश्च नियमेन गुरूपदिष्ट-
मार्गेण मन्त्रमखिलं समुदीर्य नित्यम् ।
आराध्य भक्तिभरिताः करुणाकर त्वाम्
संप्राप्नुवन्तु सकलां पुरुषार्थसिद्धिम् ॥

प्रतिमालक्षणम्

अथ वक्ष्ये विशेषेण प्रतिमालक्षणं शृणु ।
अचलंच चलंचैव चलाचलमिति त्रिधा ॥
मृण्मयं शर्करं चैव सौयजं वर्णमाचलं ।
शैलजं दारुजं चैव धातुजं रत्नजं तथा ॥
चलाचलमिति ख्यातं चलमेवंतु लोहजं ।
अर्धचित्रंच चित्रंच चित्राभासमिति त्रिधा ॥
अर्धाङ्गादर्धदं बिम्बं अर्धचित्रमिति स्मृतम् ।
सर्वावयवसंदृष्टं तौ यत्र चित्रमिदीष्यते ॥
निम्नोन्नते पटे भित्तौ बिम्बत्वाभासमुच्यते ।
अर्धचित्रंतु सुधया अन्यचित्रवशार्धकम् ॥
आभासं धातुभिः कुर्यात् चित्रं चित्रार्धमेवच ।
चित्राभासंतु देवानां फलं श्रेष्टांतराधमम् ॥
इष्टिकाभिः परं पीठं पीठादाभासकं परम् ।
आभासार्धं तु तस्माद्वै मृण्मयं परं परं ॥
मृण्मयं दारुजं श्रेष्टं दारुजाच्चैलजं वरम् ।
शैलजाल्लोहजं श्रेष्टं कर्तृणां तु फलं तथा ॥
लोहजं तूत्तमं स्वर्णं मध्यमं राजतं भवेत् ।
ताम्रजं कन्यसं ख्यातं तेषु तेषु फलं तथा ॥
बिम्बमानं च द्रव्यं च श्रेष्टमध्याधमं भवेत् ।
सर्वद्रव्येषु देवत्वं सममेवंतु विद्यते ॥
समंचेत् दिव्यं देवेषु फलं श्रेष्टाधिकं कथं ।
स्थलभेदेन वृक्षाणां भेदः क्षेत्रेषु विद्यते ॥
तथा दिव्ये फले तुल्यं दिव्यभेदफलप्रदं ।
तस्मादेत्तु यथालाभं द्रव्येण सकलं कुरु ॥
योनरः कृत्वा भूमौ पुत्रमित्रकळत्रयम् ।
यथेष्टविषयोऽपेतः वित्तादि विषयं सुखं ॥
ज्ञेचक्रमतो विप्रशालोक्यादि फलाश्रितं ।
मनसा कर्मणा वाचा योनरः स्तंभकारिणा ॥
सोऽपि कर्माणुसारेणसत्कृत्स्नफलानुभाक् ।
तस्मादव्येन कर्तव्यं सकलं तु शिवात्मकम् ॥
सुखासनं स्थितं बिम्बं उमास्कंद समं द्विज ।
तृतीयं चंद्रमूर्तिं तु चतुर्थं वृषवाहनं ॥
पञ्चमं नृत्तमूर्तिं तु गंगाधरमनंतरम् ।
सप्तमं त्रिपुरारिं चाष्टमं कल्याणसुन्दरम् ॥
नवमं सार्धनारीतु दशमम् गजहारिणम् ।
तथा पाशुपतं विद्यात्कङ्कालकं द्वादशंस्मृतम् ॥
त्रयोदशं हरं विद्याद्भिक्षाटनं चतुर्दशम् ।
चण्डेश्वरप्रसादंतु पंचदशमुदाहृतम् ॥
षोडशं दक्षिणामूर्तिं तत.कालारुणं भवेत् ।

श्री वैखानसभगवच्छास्त्रे प्रथमं आलयनिर्माणप्रकरणे
तरुणालयप्रतिष्ठार्चनादिः

वैखानसः नरसिंहभट्टाचार्यः

प्रथमं आलयं निर्मिमित्सुः यजमानः आदौ भूपरीक्षादि सर्वकार्योपदेशकं श्री वैखानससूत्रिणं आचार्यं वरयेत् इत्युपक्रम्य आलयनिर्माणं द्विविधं उपदिश्यते सादृकं, हारकमिति । तत्र सादृकं यथा - प्रथमं भूपरीक्षा - ततः कर्षणम् - ततो बीजावापः - ततो गोगणनिवेदनम् - ततस्तरुणालयकल्पनम् । तत्र भगवद्बिम्बं प्रतिष्ठाप्य अर्चयन्नेत्र विमानं कुर्यात् ।

तथा चात्रेये समूर्तार्चनाधिकारः—

बालालये अर्चनं कुर्वन् विमानं कारयेत् बुधः ।
एतत्सादृतमित्युक्तं शक्तस्सादृतमाचरेत् ॥
बालालयं विना पूर्वं आलयारंभनं तु यत् ।
तत्तु हारकमित्युक्तं अशक्तानामिदं स्मृतम् ॥

तथाच भागवते एकादश स्कंन्धे २८ अध्याये भगवान् उद्धवाय सादृत विधानं उपदिशति—

मदर्चनं प्रतिष्ठाप्य मन्दिरं कारयेद्दृढम् ॥ इति आचार्यादि वरणं तेषां च प्रतिकल्पनं उच्यते ।

तत्प्रकारश्च—

ऋत्विग्युक्तगुणैर्युक्तान् अर्चकान् परिचारकान् ।
प्रधानाचार्य पूर्वं तु वरयित्वा च तान् क्रमात् ॥
प्रतिष्ठान्ते प्रभृत्यैव भक्त्या यत्नात् स्वशक्तितः ।
नित्यार्चनं अविच्छिन्नं कारयेत्तु विधानतः ॥
नित्यार्चने तु विच्छिन्ने यजमानो विनश्यति ।
आचार्यस्थापकादीनां अर्चा हीने महद्भयम् ।
आद्योऽर्चकोऽथ पुत्रादि तन्नियोक्ताथवार्चयेत् ।
अविच्छिन्नो यथा पूजा विधानास्संप्रवर्तते ॥
तथा प्रकल्पयेद्विद्वान् भूमिभागेन वैस्थितम् ।
अर्चकस्यार्चनार्थं च कुटुम्बार्थं च यत्नतः ॥
अत्यन्तपुष्कलां भूमिं बहुसस्योचितां तथा ।
करग्रहादि रहितां अर्चनाय समर्पयेत् ॥
ततश्च ताम्रपट्टादौ लेख्य सीमा विनिश्चयम् ।
देवनाम्नैव तां भूमिं दद्यादर्चक जीविकाम् ॥
इदमग्रे प्रकुर्वीत तदधीना हरेः स्थितिः ।
पिता हरिस्तु भगवान् अर्चकः पुत्र उच्यते ॥
पुत्रस्य न लिखेन्नाम सन्निधाने पितुः क्रमात् ।
अर्चक सुप्रसन्नोत्वा हरिरेव हि केवलम् ॥
अथवा विलिखेद्विद्वान् नाम्ना वा पूजकस्य च ।
अक्लेशेन यथा जीवेत् अर्चकः सुसमाहितः ॥
यावचन्द्र दिवानाथं तथा कुर्यात् प्रयत्नतः ।

इत्यादि भगवत् शास्त्रवचनं प्रमाणी कृत्य पूर्वं आलय निर्माणकारिणः धार्मिकाः राजानः सर्वेषां आलयानां अविच्छिन्नेन पूजा कैंकर्यनिर्वाहार्थं प्रथमतरुणालयप्रतिष्ठा-मारभ्य अविच्छेदनभगवदाराधनकारिभ्यः पूजक-जनेभ्यः शासनमूलेन करग्रहादि विहीनतया विलिख्य देवसन्निधौ दानरुपेण प्रदत्तान् भूमिभागान् इदानीं कलिमहिम्ना शासनपराः अन्यथाकुर्वन्ति । करग्रहादीनि विधाय हरन्ति च ।

एतादृशीमवस्थां परिहर्तुं अशक्नुवानाः वयं भगवन्तमेव प्रार्थयामः

सुप्रभेदे अङ्गुलीलक्षणविधि पटलः

मु. अय्यामणिशिवम्, तिरुवाढानै

अथातस्संप्रवक्ष्यामि अङ्गुलीनांतु लक्षणम् ।
मानाङ्गुलं तु प्रथमं मात्राङ्गुलं द्वितीयकम् ॥ 1

देहलब्धप्रमाणं तु तृतीयं अङ्गुलं स्मृतं ।
यस्मात्परमाणुर्नास्ति परमाणुस्तदुच्यते ॥ 2

परमाणुरथश्चैव पिचकेशाग्र एव च ।
रीक्षायूकायवास्तत्र क्रमशोऽष्टगुणैर्मतम् ॥ 3

मनाङ्गुलमिति प्रोक्तं ततो मात्राङ्गुलं श्रृणु ।
आचार्यदक्षिणेहस्ते मध्यमाङ्गुलि मध्यमे ॥ 4

पर्वमात्राङ्गुलं ज्ञेयं देहलब्दाङ्गुलं श्रृणु ।
प्रतिमायास्तथोत्सेधे तालगण्येन भाजिते ॥ 5

तेष्वेकं भगवन्मानं देहलब्धाङ्गुलं स्मृतम् ।
प्रासादमण्टपांश्चैव प्रकारान् गोपुरानपि ॥ 6

ग्रामाध्वक्षेत्रगण्येषु मानाङ्गुलविधानत: ।
आचार्यदक्षाङ्गुलिभिर्मितेर्व्यासमिधादिकै: ॥ 7

कूर्चे पवित्रके चैव स्रुवे स्रुक्भिरथान्यकै: ।
यागे प्रयोजितानीह मात्राङ्गुलविधिश्चरेत् ॥ 8

अथ मानाङ्गुलैर्वापि कारयेद्यागकर्मणि ।
देहलब्धाङ्गुलेनैव प्रतिमां कारयेद्बुध: ॥ 9

एकाङ्गुलस्य संज्ञास्यात् बैन्दुमोक्षोक्तमात्रकम् ।
कलाकोलकपद्माक्षि चाश्विनीद्व्यङ्गुलस्य तु ॥ 10

रुद्राक्षाग्निगुणाश्चैव शूलविद्यात्रियङ्गुलम् ।
युगभागंच वेदंच तुरीयं चतुरङ्गुलं ॥ 11

रुद्राननेन्द्रियं भूतबाणं पञ्चाङ्गुलस्य तु ।
कर्माङ्गमयनश्चैव रसश्चैव षडङ्गुलम् ॥ 12

पाताळमुनिधातूंश्च आब्धि सप्ताङ्गुलस्य तु ।
वसुलोकेशमूर्तिश्च ततो अष्टांगुलसंज्ञका: ॥ 13

द्वारं सूत्रं ग्रहं शक्तिं नवाङ्गुलमिति स्मृतम् ।
दिशानाडयायुधं चैव प्रादुर्भावं दशाङ्गुलम् ॥ 14

त्रिषु विष्कूश्च विम्शश्च गतित्रिम्शतिरुच्यते ।
त्रिजगत् चत्वारिम्शत् पञ्चाशच्छक्करीति च ॥ 15

अतिशक्करिश्च षष्टिस्तु यष्टिसप्ततिरुच्यते ।
अत्यष्टयशीतिकं विद्धि नवती धृतिरेवच ॥ 16

अतिधृतिश्शताङ्गुल्यं इति सम्ज्ञाप्रकीर्तिता: ।
एकं दशं शतश्चैव सहस्रं अयुतं पुन: ॥ 17

नियुतं प्रयुतं चैव कोटिश्चैयथार्बुदम् ।
बृन्दं खर्वं निखर्वश्च शङ्खं पद्ममत: परम् । 18

समुद्रमध्यन्ताराख्यं पराख्यमपरं तथा ।
परार्धमेवमाख्यातं दशवृत्युत्तरोत्तरम् ॥ 19

एवमेतानि चोक्तानि संख्यास्थानानि विम्शति: ।
तालं यमं त्रिभागं च षट्कलाश्च वितस्तिकम् ॥ 20

षट्कोलकं मुखश्चैव द्वादशाङ्गुलसंज्ञकम् ।
अङ्गुष्ठतर्जनीयुक्तं प्रादेशमितिकीर्तितम् ॥ 21

मध्यमाङ्गुष्ठसम्युक्तं तालमानमितिस्मृतम् ।
अङ्गुष्ठानामिकायुक्तं वितस्तिरितिचोच्यते ॥ 22

कनिष्ठाङ्गुष्ठयोर्युक्तं गोकर्णमितिसम्ज्ञिकम् ।
प्रादेशश्च वितस्तिश्च गोकर्णश्च इमे त्रय: ॥ 23

यज्ञादिके प्रयोक्तव्या: प्रसादादौ न मापयेत् ।
रत्निस्संवृतमुष्टिस्यात् अरत्निप्रसृताङ्गुलि: ॥ 24

किष्कुश्च प्राजापत्यश्च धनुर्मुष्टिधनुग्रहौ ।
अङ्गुलेस्तु चतुर्विम्शत् किष्कुरित्युच्यते बुधै: 25

पञ्चविम्शतिभिश्चैव प्राजापत्यमुदाहृतं ।
षड्विम्शतिधनुर्मुष्टि: सप्तविम्शद्धनुग्रह: ॥ 26

किष्कुहस्तादि चत्वारि मानाङ्गुलवशात्तम ।
एभिर्हस्तप्रमाणैस्तु प्रासादादीनि कारयेत् ॥ 27

शयनं चासनश्चैव किष्कुमानवशात्कुरु ।
लिङ्गश्च पिण्डिकाश्चैव प्रासादं गोपुरं तथा ॥ 28

प्राकारमण्टपं चैव प्राजापत्यकरेण तु ।
धनुग्रहश्चतुष्कं यद्दण्डमानं प्रकीर्तितम् ॥ 29
सहस्रदण्डमानेन क्रोशमात्रं विधीयते ।
गव्यूतिर्द्विगुणं ज्ञेयं तद्द्विगुणं तु घातकम् ॥ 30
घातकस्य चतुष्कं तु योजना परिकीर्तिता ।
प्रतिमायास्तदुत्सेधम् तालदण्डेण भाजयेत् ॥ 31
चतुर्विंशश्छतं चैव उत्तमं दशतालकं ।
विम्शश्छतं च मध्यंतु कन्यसं षोडशाधिकं ॥ 32
द्वादशाधिकमेवं यत् नवतालोत्तमं भवेत् ।
अष्टौशतं चतुश्शतं मध्यमं कन्यसं तथा ॥ 33
शतं षण्णवतिश्चैव नवत्युत्तरकरद्वयं ।
अष्टतालमिदं प्रोक्तं त्रिविधं पूर्वपद्धतिः 34

इत्येवं भागहीनं स्यात् एकतालान्तमेवहि ।
त्रयोदशार्धं मुखज्येष्ठं त्रयोदशन्तु मध्यमम् ॥ 35
तत् द्वादशार्धमधममुत्तमन्दशतालके ।
नवतालोत्तमेचैव मुखं वै द्वादशाङ्गुलम् ॥ 36
अर्धार्धाङ्गुलहीनेन मध्यमाधममुच्यते ।
त्रिविधा दशतालेन त्रिमूर्तीनां तु कीर्तिता ॥ 37
त्रिविधं नवतालेन देवानां योषितामपि ।
अष्टतालेन मर्त्यानां सप्ततालेन रक्षसाम् ॥ 38
षट्तालेन तु गन्धर्वान् पञ्चतालो गणाधिपः ।
वामनस्य तथैव स्यात् चतुस्तालास्तु भूतकाः ॥ 39
त्रितालं किन्नराणां तु मत्स्यानां तु द्वितालकं ।
अनुजानां तथैकं स्यात् पिशाचानां तु विंशतिः ॥ 40
अङ्गुल्यस्सम्यगाख्याताः प्रासादलक्षणं शृणु ॥ 41

சுப்ரபேதம் என்ற சிவாகமத்தில் கூறியுள்ளபடி அளவைகளின் விபரம்

முதலாவது மானாங்குலம். இரண்டாவது மாத்ராங்குலம். மூன்றாவது தேஹலப்தாங்குலம் என்று அங்குலம் மூவகைப்படும். மிகச் சிறியதான பரமாணு என்பதிலிருந்து அணு என்பது பெறப்படும். திருச்யாதிருச்யமான தூளியானது பரமாணு என்று சொல்லப்படுகிறது. அது வளர்ச்சி அடைந்து (பிசம்) ரேணு (கேசாக்ரம்) மயிர் நுனி, கலீக்ஷுகா-யூகம் (யவம்) தான்யம் என்ற முறையில் எட்டின் பெருக்கத்தால் யவம் என்ற தான்யத்தின் குறுக்களவாகிறது. அதாவது,

பரமாணு 8 ஒரு ரேணு. ரேணுக்கள் 8 ஒரு மயிர் நுனி. மயிர் நுனி 8 ஒரு கலீக்ஷுகா. ரீக்ஷா 8 ஒரு யூகம். யூகம் 8 ஒரு யவம் எனக் கணக்கிடப்படுகிறது. யவதான்யத்தின் குறுக்களவு 8 கொண்டது ஒரு அங்குலம். இது மானாங்குலம் எனப்பெறும்.

ஆசாரியனுடைய வலது கையில் நடுவிரலில் உள்ள நடுரேகையின் அளவு "மாத்ராங்குலம்" எனப்பெறும். விக்ரகங்களின் உயரத்தை தாலமானம் என்ற கணக்கினால் பிரித்தால் "தேகலப்தாங்குலம்" என்பது தெளிவாகும்.

கோயில் கர்பகிருஹம் அர்த்தமண்டபம் பிரகாரங்கள் கோபுரங்கள் முதலியன மானாங்குலக் கணக்கினால் செய்தல் வேண்டும். யாகத்திற்குறிய சமித்து கூர்ச்சம் தர்பமுஷ்டி சிருக் ச்ரவங்கள் முதலியன மாத்ராங்குலக் கணக்கினால் செய்தல் வேண்டும். விக்ரஹங்கள் பிரதிமைகள் முதலியன "தேகலப்தாங்குலம்" என்ற கணக்கினால் செய்யப் பெறுதல் வேண்டும்.

ஒன்று முதலிய அங்குல கணக்குகள் கீழே கொடுக்கப் பட்டுள்ள பரிபாஷைச் சொற்களால் சிவாகமங்களில் கையாளப்படுகிறது.

ஒன்று—பிந்து, மோக்ஷம், மாத்திரை, எனவும்

இரண்டு—கலா, கோலகம், பத்மாக்ஷி, அஸ்விநௌ எனவும்

மூன்று—ருத்ராக்ஷி, அக்னி, குணம், சூலம் எனவும்

நான்கு—யுகங்கள், வேதம், துரீயம் எனவும்

ஐந்து—ருத்ராநனம், இந்திரியம், பூதம், பாணம் எனவும்

ஆறு—கர்மம், அங்கம், அயனம் (ருதுக்கள்) ரஸம் எனவும்

ஏழு—பாதாளம், முனி, தாது, அப்தி எனவும்

எட்டு—பசு, லோகேசாள், மூர்த்தி எனவும்

ஒன்பது—துவாரம், சூத்திரம், கிரஹம், சக்திகள் எனவும்

பத்து—திசை, நாடி, ஆயுதம் எனவும்

இருபது—த்ருஷீ, விஷ்கு எனவும் முப்பது—கதி எனவும் நாற்பது திரிஜகத் 50. சக்வரி 60. அதிசக்வரி 70. எஷ்ட்டி 80. அத்யஷ்ட்டி 90. திருதி 100 அதிதிருதி என்ற மாற்றுப் பெயர்களால் அங்குலங்கள் பேசப்படுகிறது.

மேலும் எண்ணிக்கைகளின் கணக்கு ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், அயுதம் நியுதம், ப்ரயுதம், கோடி, அற்புதம், ப்ருந்தம், கர்வம், நிகர்வம், சங்கம், பத்மம், சமுத்திரம், அந்த்தராக்கியம், பராக்கியம், பரம், பரார்த்தம் என பத்தின் பெருக்கத்தினுல் இருபது வகைகளாகப் பேசப்படுகிறது.

இனி தாலம், யமம், த்ரிபாகம், ஷட்கலா, விதஸ்தி, ஷட்கோலகம், முகம் என்ற பெயர்களால் பன்னிரண்டு அங்குல அளவுள்ள அளவை (அதாவது ஒரு சாண்) சொல்லப்படுகிறது.

மேலும் அங்குஷ்ட்ட தர்ஜனியின் நீளம் "ப்ராதேசம்" எனவும் அங்குஷ்ட்ட மத்யமையின் நீளம் "தாலம்" எனவும் அங்குஷ்ட்ட அனுமிகையின் நீளம் "விதஸ்தி" எனவும் அங்குஷ்ட்ட கனிஷ்ட்டிகையின் நீளம் "கோகர்ணம்" எனவும் கூறப்படும். இந்த அளவைகள் யாகாதி காரியங்களில் உபயோகிக்கப் பெறும். இனி ரத்னி (விரல்களை மடக்கிய கை) அரத்னி (நீட்டிய விரல்களுடன் கூடிய கை) கிஷ்கு, ப்ராஜாபத்தியம், தனுர் முஷ்ட்டி, தனுர்கிரஹம் என்றும் அளவைகள் சொல்லப்படுகின்றன. மேலே சொல்லிய மானங்குலத்தால் 24 அங்குலம் கொண்டது கிஷ்கு ஹஸ்த்தம். 25 அங்குலம் கொண்டது ப்ராஜாபத்திய ஹஸ்த்தம். 26 அங்குலம் கொண்டது தனுர் முஷ்ட்டி, 27 அங்குலம் கொண்டது தனுர் கிரஹம் என ஹஸ்தமானங்கள் நான்கு வகைப்படும்.

இந்த அளவைகளால் மஞ்சம், பீடம், வாகனம் முதலியன கிஷ்கு அளவையாலும், லிங்கம், ஆவுடையார், விமானம், கோபுரம், பிரஹாரம் மண்டபம் இவைகள் ப்ராஜாபத்தியம் என்ற அளவையாலும் செய்தல் வேண்டும்.

தனுர்கிரஹம் நான்கு கொண்டது ஒரு தண்டம் என்ற அளவாகும். தண்டம் ஆயிரம் கொண்டது ஒரு குரோஸம். இரண்டாயிரம் தண்டம் ஒரு கவ்யூதி. நான்காயிரம் தண்டம் ஒரு காதம். நான்கு காதங்கள் ஒகு யோஜனை தூரமாகும். இதன் பின்னர் விக்ரஹத்தின் தாலமான கணக்குகள் இன்னென்ன தாலமானத்தால் இன்னென்ன விக்ரஹங்கள் செய்தல் வேண்டும் என்ற விபரமும் கூறப்பட்டுள்ளது.

குறிப்பு :—தண்டம் என்ற அளவு தற்போதைய ஆங்கிலேய ஸ்கேல் அளவின்படி சுமார் 6 அடி நீளம் ஆகிறது.

நித்ய பூஜை

S. சுவாமிநாத சிவாசாரியார், தருமபுரம்

உஷ : காலம்

नमश्शिवाभ्यां नवयौवनाभ्यां परस्पराश्लिष्टवपुर्धराभ्याम् ।
नगेन्द्र कन्या वृषकेतनाभ्यां नमो नमःशंकर पार्वतीभ्यां ॥

உஷ : கால பூஜையானது சூரியன் உதயமாவதற்கு மூன்றே முக்கால் நாழிகைக்குமுன் ஆரம்பித்துச் செய்ய வேண்டிய பூஜை.

"भास्करोदयात्पूर्वं त्रिपादेन त्रिनाडिका ।
उषःकालमितिप्रोक्तं"

என்று காரணகமம் கூறுகிறது. இவ்வாறு மூன்றே முக்கால் நாழிகைக்கு ஆரம்பம் செய்து அந்தப் பூஜையின் முடிவு சூரிய உதயத்துடன் நிற்கவேண்டும். அதாவது "पूजान्ते-भास्करोदयं" சூரியனுடைய உதயத்துடன் பூஜை முடிவடைய வேண்டும்.

ஆசாரியன் ஸ்நானம் முதலியவற்றை முறைப்படி செய்து கையில் புஷ்பம் எடுத்துக்கொண்டு, ஆலயத்திற்குள் நுழைந்து கையில் கொண்டு வந்த புஷ்பத்தை த்வஜஸ்தம்பத்திற்கு அருகில் சிவனுடைய சன்னதியில் போட்டு இறைவனை நமஸ்கரிக்கவேண்டும்.

स्नानं कृत्वा यथोक्तं तु रवेरर्घ्यं प्रदापयेत् ।
पूजकः पुष्पपाणिस्तु प्रविशेदालयं प्रति ।
प्रक्षिप्य कुसुमं चाग्रे प्रणम्य शिवमादरात् ॥

—ஸுப்ரபேதாகமம்

சூரிய உதயத்திற்கு மூன்றே முக்கால் நாழிகைக்கு முன் ஆசாரியன் ஆலயத்திற்குப் போகவேண்டியதன் நிமித்தம், பஞ்சபஞ்சஉஷ : காலத்தில் எழுந்து நதி முதலியவைகளுக்குச் சென்று ஸ்நானம் முதலிய காலைக்கடன்களை முடித்துக்கொள்ளவேண்டும்.

प्रभातात् पूर्वतः न्यूनं घटिका पञ्चकोद्धितः ।
उत्थाय देवदेवेशं ध्यात्वा स्तोत्रं पठेन्नरः ।

அதாவது உதயத்திற்கு முன் ஐந்து நாழிகை அளவில் எழுந்து தேவதேவேசனை இறைவனை தியானித்து, துதித்து மங்களத் திரவியங்களையும் தரிசித்து வெளியிற் கிளம்ப வேண்டும்.

மங்களத் திரவியங்களாவன.

लोकेऽस्मिन्मंगलान्यष्टौ ब्राह्मणो गौर्हुताशनः ।
हिरण्यं सर्पिरादित्यः आपो राजा तथाऽष्टमः ॥

என்றபடி அந்தணன், பசு, அக்னி, காஞ்சனம், நெய், சூரியன், ஜலம், அரசன், என்பவை எட்டு மங்களத் திரவியங்கள். இவைகளில் ஏதாவதொன்றை தூங்கிவிழித்தவுடன் தரிசிக்கவேண்டும். அல்லது, தனது கையையாவது தரிசனம் செய்ய வேண்டும். கரதரிசனம் விசேஷமாக கூறப்படுகிறது.

कराग्रे वसते लक्ष्मीः करमध्ये सरस्वती ।
करमूले च गोविन्दः प्रभाते करदर्शनं ॥

என்பதால் இது அறியப்படுகிறது. அல்லது

रोचनां नन्दनं गन्धान् मृदंगं दर्पणं मणिं ।
गुरुमग्निं रविं पश्येत् नमस्येत्प्रातरेव हि ॥

கோரோதனை, சந்தனம், மிருதங்கம், கண்ணாடி, ரத்னம், ஆசாரியன், அக்னி,

சூரியன் முதலியவைகளை காலையில் தரிசித்து வணங்க வேண்டும், என்றும் காணப்படுவதால் அப்போது கிடைக்கும் வஸ்துவை தரிசிக்க வேண்டும்.

இவ்வாறு தரிசித்து வெளியில் சென்று அவசியமான காரியங்களை முடித்து விதி வழுவாது ஜலஸ்நானம், பஸ்மஸ்நானம் செய்து, தாத்காலிகமான அனுஷ்டானம் முதலியவை முடித்து, பஞ்சமுத்ராங்கதரராய் பஞ்சாங்க பூஷிதராய் ஆலயத்திற்குச் செல்லவேண்டும்.

रुद्राक्षमुपवीतं च उष्णीषं चोत्तरीयकं ।
भस्मचैवादि शैवानां पञ्चमुद्राः प्रकीर्त्तिताः ।
हेमांगुळीयं कटकं केयूरं कुण्डलं तथा ।
हेमयज्ञोपवीतं च पञ्चांङ्गभूषणं तथा ॥

ருத்ராக்ஷம், சுவர்ண யக்ஞோபவீதம், உஷ்ணீஷம், உத்தரீயம், விபூதி, இவைகள் பஞ்சமுத்திரைகளாகும். மோதிரம் கடகம், கேயூரம், குண்டலம், தங்கப் பூணூல் இவைகள் ஐந்தும் பஞ்சாங்க பூஷணமாகும். இவ்வாறு பஞ்சாங்க பூஷிதராய் ஆலயத்திற்குச் சென்று உஷ:கால பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

ஆலயத்தினுள் நுழைந்தவுடன் அதிகாரநந்தி தேவரையும் துவார பாலர்களையும் வணங்கி, 'க்ஷேத்ரபாலனையும் பூஜித்து, வணங்கி முத்ரா தண்டம் பெற்று, அங்கிருந்து கைமணியையும் எடுத்துக்கொண்டு சயனாலயத்திற்குச் செல்லவேண்டும்.

போக சக்தி வீற்றிருக்கும் அந்தப் பள்ளியறைக்கு மூன்று நாழிகை முன்பு சென்று இறைவனுக்கு பாவனஸ்நானம் செய்வித்து அஷ்டபுஷ்பம் சாத்தி, நைவேத்ய தூபதீபம் முதலிய உபசாரங்கள் செய்து இறைவனைப் பாதுகையில் ஆரோகணம் செய்வித்து, ப்ரதக்ஷிணக் கிரமமாக மூலலிங்கத்தின் அருகில் கொண்டுபோய் அந்தப் பாதுகாரோஹணராய் வரும் இறைவனை மூலலிங்கத்தில் சேர்த்துவிட்டு உடன் அபிஷேகம் செய்யவேண்டும்.

அஷ்டபுஷ்பம் என்பவை எட்டு மந்திரங்கள். குருமுகமாக அறிந்துகொள்ள வேண்டியது.

விபவத்திற்குத் தக்கவாறு ஸ்னபனம் செய்து பஞ்சகவ்ய பஞ்சாமிருதங்கள் முதலிய அபிஷேகத் திரவியங்களைத் தயார் செய்துகொண்டு, மெதுவாக கர்ப்பக் கிரஹம் சென்று முதலில் நிர்மால்ய விஸர்ஜனம் செய்யவேண்டும். நிர்மால்ய விஸர்ஜனம் செய்யும்போது புதியதான வேறு ஒரு புஷ்பத்தை இறைவனின் சிரசில் வைக்கவேண்டும். இறைவனின் சிரசு ஒருபோதும் சூன்யமாக இருக்கக் கூடாது.

न शून्यमस्तकं लिङ्गं कुर्यात्तत्र कदाचन

என்றும்.

कनिष्ठानामिका मध्ये नवपुष्पं तु संग्रहेत् ।
अंगुष्ठ तर्जनीभ्यां च निर्माल्यं च विसर्जयेत् ।
विसर्जनस्य तत्काले पुष्पं मूर्ध्नि च विन्यसेत् ॥

ஒருபோதும் சிவலிங்கத்தின் மஸ்தகம் சூன்யமாக புஷ்பமில்லாமல் இருக்கக் கூடாது. ஆதலால் சுட்டுவிரல் மோதிர விரல் இரண்டையும் சேர்த்து அதன் இடையில் புதிய புஷ்பத்தை வைத்துக் கொண்டு, ஆட்காட்டிவிரலையும் பெருவிரலையும் சேர்த்து பழைய புஷ்பத்தை எடுத்து அப்போதே முன்பு கூறியபடி யுள்ள புதுப் புஷ்பத்தை இறைவனின் சிரஸில் வைக்கவேண்டும் என்று சூக்ஷ்மாகமம் கூறுகிறது.

அஸ்திர மந்திரத்தினால் லிங்கம், பீடம் இரண்டையும் நன்றாக சோதித்

துப் பிறகு அபிஷேகம் செய்ய வேண்டும். அஸ்திர மந்திரம் என்பது प्रभुश्वधन्वन: என்ற மந்திரத்துடன் சிவாஸ்திர மந்திரம் ஆகும். முன்பு தயார் செய்து வைக்கப்பட்ட பஞ்சகவ்யம் முதலிய அபிஷேகத் திரவியங்களை முறைப்படி அபிஷேகம் செய்யவேண்டும். அபிஷேக முறையாவது:

तैलै: पिष्ट रसादिभिस्त्रिभिगुणरसैर्गव्येन पञ्चामृतै: ।
आज्येनाथ पयोदधि मधु द्रव्यैस्सदिक्षूत्भवै: ।
कुर्यात्पञ्च एलै: पुन: फलरसैस्सन्नालिकेरोद्भवै अन्नै:
भस्म सुगन्ध कुम्भ सलिलैरर्घैश्च संसेचनं ॥

எள், எண்ணெ, மாப்பொடி, மஞ்சள் பொடி, நெல்லி முள்ளிப்பொடி, பஞ்சகவ்யம், பஞ்சாமிருதம், நெய், பால், தயிர், தேன், கருப்பஞ்சாரு, பழங்களின் ஐந்து, பழரஸங்கள், இளநீர், அன்னம், விபூதி, சந்தனம் குல்பைல்கும்பஜலம்: விசேஷார்க்ய தீர்த்தம் என்று வரிசையாக அபிஷேகம் செய்யவேண்டும். (பொதுவாக இது அபிஷேக முறையாகும்) அபிஷேகமானவுடன் திருவொற்றுடை போட்டுப் பிறகு வெண்மையான வஸ்திரம் சாத்தி சந்தன புஷ்பங்களால் அலங்கரித்து இஞ்சி சேர்ந்த தயிரன்னமும் எலிமிச்சம்பழ ரஸத்தில் சிறிது நெய்விட்டு ஏலக்காய திரசம் போட்டு மந்தோஷ்ணமாக பக்குவம் செய்து நிவேதனம் செய்ய வேண்டும். மற்றும் பால், நெய், பசுவின் தயிர், வெல்லம், கரும்பு முதலியவைகளும் நிவேதனம் செய்து பஞ்சோபசாரத்துடன் கற்பூர ஆரத்தி செய்து தேவியின் ஆலயத்திற்கும் சென்று இவ்வாறு பூஜை செய்து நிவேதனம் செய்ய வேண்டும். மற்றபடி விநாயகர் முதலிய பரிவாரங்களுக்கு பூஜை செய்யக் கூடாது.

महेश्वरादि बेराणां परिवारार्चनं विना ।
गजानन वृषस्कन्द दक्षिणो कमला रवि: ।
वटुको मातरश्चण्ड: ते वर्ज्या स्युर्गुहोषसि ॥

—कारणागमम्,

அதாவது விநாயகர், விருஷபதேவர், ஸ்கந்தன், குருமூர்த்தி, லக்ஷ்மி, சூரியன், பைரவர், சப்தமாதாக்கள், சண்டேசன் முதலியவர்கள் உஷ: கால பூஜையினின்றும் விலக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு ஆசாரியரும் பூஜாரம்பத்தில் ஆன்மசுத்தி முதலியதும் செய்து கொள்ள வேண்டியது இல்லை.

பஞ்சமஹா சப்தங்களுடன் பூஜையைத் துவக்கவேண்டும். அதாவது தாருஜம்; சங்கஜம், லோஹஜம், வம்சஜம், கேயம் என்ற இந்த ஐந்து இசை முழகத்துடன் பூஜையை ஆரம்பிக்க வேண்டும். இவ்வாறு வாத்திய கோஷங்களால் அசுபம் நிவர்த்தியாகும். முக்கியமாக வாத்திய விசேஷத்தில் உஷ: காலத்தில் அந்தக் காலத்திற்குறிய ராகத்தை வாசிக்கவேண்டும். மலைய மாருதம், பூபாளம், பிலஹரி முதலியன

उष:कालोपसन्ध्यायां कालरागं प्रशस्यते ।

என்ற ஆகமவிதியால் உணரப்படுகிறது. குறிப்பாக தாளத்தில் கொட்டரீயதாளமும், வாத்யத்தில் சிம்மநந்தமும் ந்ருத்தத்தில் ஸந்தியா நிருத்தமும் விசேஷமாகக் கூறப்பட்டிருக்கிறது.

இறைவனுக்கு உஷ: காலத்தில் அர்ச்சிக்கவேண்டிய புஷ்பம் ஸ்ரீயாவர்த்தமும் பத்திரத்தில் வில்வமுமே உயர்ந்தது.

அபிஷேகம் செய்யும்போது ருத்ரம் சமகம் முதலிய மந்திரங்களைச் சொல்லி மெதுவாக அபிஷேகம் செய்யவேண்டும் என்று ஆகமத்தாலறியப்படுகிறது.

அதாவது காரணம் அர்சனாங்க விதி படலத்தில்

श्रीरुद्रं चमकं चैव त्र्यंबकं पञ्चशान्तिकं ।

हिरण्यं पूरुषं सूक्तं जातवेदं त्रियक्षरं ।

पृथक् पृथक् सकृज्जप्त्वा अभिषेकं शनैश्शनैः ।

— कारणागमम्

இவ்வாறு மந்திரங்களைச் சொல்லி அபிஷேகம் செய்து கூர்ச்சத்தினால், இலிங்கத்தையும் பீடத்தையும் அஸ்திர மந்திரம் சொல்லி சோதித்து அபிஷேகம் செய்த திரவியங்கள் லிங்கம் பீடங்களில் ஒட்டியில்லாமல் செய்யவேண்டும்

தீர்த்தாபிஷேகத்தினால் இறைவன் 10 அபராதத்தையும், பால் அபிஷேகத்தினால் 100 அபராதத்தையும் தயிர் அபிஷேகத்தினால் 1000 அபராதத்தையும், தேன் அபிஷேகத்தினால் பதினாயிரம் அபராதத்தையும், சந்தனத்தினால் எண்ணிரந்த அபராதங்களையும் போக்குகிறார் என்று விதி காணப்படுகிறது.

இறைவனுக்கு அபிஷேகம் நிவேதனம் உபசாரம் முதலியன செய்யுங் காலத்தில் சேவார்த்திகள் ப்ரதக்ஷிணம் நமஸ்காரம் ஜபம், தியானம் இவைகளைச் செய்யக்கூடாது. இவ்வாறு உஷ: காலபூஜா முறை கூறப்பட்டது.

இனி, காலசந்திபூஜை சிந்திக்கப்படுகிறது.

கால சந்தி

भास्करोदयमारभ्य सार्धसप्तक नाडिका ।

प्रात: कालमितिप्रोक्तं संगव: पञ्चनाडिका ।

(अन्यत्र) सूर्योदयं समारभ्य यावद्यामंतु याकृता ।

पूर्व सन्ध्येति साप्रोक्ता महासन्ध्या च सा भवेत् ।

சூரிய உதயம் தொடங்கி ஏழரை நாழிகைக்குள் செய்யவேண்டிய பூஜை, கால சந்தி என்று பெயர். இது மஹாசந்தி பூஜையைச் சேர்ந்தது.

இந்தப் பூஜை ஆரம்பம் செய்வதற்கு முன் தீர்த்த சங்கிரஹணம் செய்ய வேண்டும். அதாவது நதிக்குச் சென்று அநேகவித வாத்ய கோஷங்களுடன் நதீ ஜலத்தை குடத்தில் நிரப்பி உபசாரத்துடன ஆலயத்திற்குக் கொண்டு வந்து அந்த ஜலத்தை பலிபீடத்தில் விடவேண்டும். இதற்கு கங்காஹரணம் என்று பெயர். முதல் தினம் அர்த்த யாம காலத்தில் சயனாலயத்திற்குச் சிவபெருமான் சென்றபோது அங்குள்ள மனோன்மனி சக்தியைப் பார்த்த கங்கை அங்கிருந்து தனது இருப்பிடமான நதிக்குச் சென்றாள் என்றும், உதயத்தில் அவ்வாறு சென்றகங்கையை மீண்டும் அழைத்து இறைவனுடன் சேர்த்தல் என்ற ஐதிஹ்யம். ஆலயத்தில் நுழைந்ததும் அந்தக் கும்பத்திலிருக்கும் கங்கை இறைவனின் ஜடையில் சேர்ந்து விடுகிறாள். ஆதலால் அத்த பாவனமான தீர்த்தத்தை பத்ரபீடத்தில் விடவேண்டும் என்பதும் முறை. இவ்வாறு செய்வதினால், கிராமத்திற்கும் அரசருக்கும் வளர்ச்சி உண்டாகும், கால சந்தியில் முதலாவது சூரியனைப் பூஜித்துப் பிறகு விநாயகரையும் பூஜித்து பரிவார தேவர்களுக்கு அபிஷேகம் செய்து சந்தன புஷ்பம் சாத்தி மூல லிங்கத்திற்கும் தேவிக்கும் அபிஷேகம் செய்து கணேசருக்கு நிவேதம் செய்து உடன் மூல லிங்கத்திற்கு நிவேதனம் செய்து அதன் பிறகு நடராஜர், சோமாஸ்கந்தர், தக்ஷிணாமூர்த்தி, சுப்பிரமண்யர் முதலிய பரிவாரங்களுக்கு நிவேதனம் செய்து கௌரிக்கு நிவேதனம் முதலிய உபசாரம் பிறகு செய்து பலி போட்டு, நித்யாக்னி காரியம்செய்து நித்யோத்ஸவம் செய்து, சண்டீச பூஜையுடன் முடிக்க வேண்டும்.

இது காரணாகமத்தில்

प्रात: काले यजेत्सूर्यं गणेशं पूजयेत्तत: ।
महेश्वरादि बेराणां पूजनीयं यथाक्रमं ।
परिवारादि देवानां अभिषेकोप्यलंकृति: ॥
मूललिङ्गे विशेषेण पूजाकर्म समाचरेत् ।
पूर्वं गणेश नैवेद्यं मूलबेरस्य तत्परं ।
महेशानां निवेद्याऽथ अन्येषां च निवेदयेत् ।
पश्चान्निवेद्य गौर्याश्च उपचारान्यथाक्रमं ॥
धूपदीपादिकं दत्वा बलिं कृत्वा तत: परं ।
हुताशनं समभ्यर्च्य नित्योत्सवमत: परं ।
चण्डेश यजनं पश्चात् प्रात: काले विधीयते ॥

என்று கூறப்படுகிறது. இவ்வாறு சாங்கோபாங்கமாக பூஜை செய்ய வேண்டும்.

வெண்மையான வஸ்திரம் சாத்தி, நந்தியாவர்த்த புஷ்பம், துளசீ இவைகள் கலந்த புஷ்பம் சாத்தி தயிரன்னம் நிவேதனம் செய்யவேண்டும்.

வராபீ ராகத்துடன் நவதாளம் சச்சபுடவாத்யம், புஜங்கத்ராச நிருத்தம் இன்றியமையாதது. கால சந்தி பூஜையின் முறை கூறப்பட்டு இனி உச்சிக் கால பூஜை கூறப்படுகிறது.

உச்சிகால பூஜை :

காலசந்தி பூஜைமுடித்து ஐந்து நாழிகை சங்கம காலம் தாண்டி அதாவது 12½ நாழிகைக்குமேல் மாத்தியான்னிக பூஜை தொடங்கவேண்டும்

मध्याह्नसमये प्राप्ते स्नपनं पञ्चगव्यकं ।
द्वारपूजां प्रकल्प्याऽथ वास्तुनाथं प्रपूजयेत् ।
लिङ्गशुद्धिं तत: कृत्वा गन्धपुष्पैरलंकृतं ।
भोगाङ्गं पूजयेत्पश्चात् नैवेद्येह्युपचारकं ।
गौरीपूजां तत: कृत्वा चण्डांतं पूजयेत्तत: ॥

ஆசாரியன் ஸ்னபனபூஜை செய்துகொண்டு த்வாரபூஜை செய்து லிங்கசுத்தி செய்து அபிஷேகம் அலங்காரம் நைவேத்யம் முதலிய உபசாரத்துடன் போகாங்க பூஜை செய்து தேவிக்கும் பூஜை செய்து முடித்து சண்டிகேசருக்கும் நிவேதனம் செய்யவேண்டும்.

ஸ்னபனம் என்பது ஒன்பது விதம். ஒன்பது சலசஸ்னபனம், 17 கலச ஸ்னபனம், 25 கலசஸ்னபனம், அதமத்ரயம். என்றும் 49 கலசஸ்னபனம், 81 கலச ஸ்னபனம், 108 சலசஸ்னபனம் மத்திய மத்ரயம். என்றும் 200 கலச ஸ்னபனம் 409 கலச ஸ்னபனம், 1008 கலச ஸ்னபனம்என்பவை உத்தமத்ரயம். என்றும் கூறப்படும் ஏதாவதொரு ஸ்பைனம் வைத்துப்பூஜை செய்யவேண்டும். ஸ்னபனத்திற்கு முன் சுத்தி, புண்யாகம், பஞ்சகவ்யம், பஞ்சசுத்தி முதலியதை ஆசாரியன் செய்துகொண்டு ஸ்னபனம் பூஜித்து அக்னிகாரியம் செய்து பிறகு துவார பூஜையுடன் வாஸ்துப் பிரமன் பூஜைசெய்துகொண்டு கருப்பக் கிரஹம் சென்று லிங்கசுத்தியுடன் அபிஷேகம் செய்ய வேண்டும். இறைவனுக்கு அபிஷேகத்திற்கு வைத்திருக்கும் திருமஞ்சன தீர்த்தத்தில், பாதரி நைதல் பத்மம் கஸ்தூரி அரளி புஷ்பங்களைப் போட்டிருக்க வேண்டும்.

पाटलोत्पलपद्मानि करवीराणि सर्वदा ।
स्नानतोयेन योज्यानि स्निग्धानि सुरभीणि च ।

—சுப்ரபேதாகமம்

கோச்ருங்காக்ர ப்ரமாணமாக தீர்த்தத்தை இலிங்கத்தின் சிரசில் 4 அங்குலத்திற்கு மேலிருந்து மெள்ள மெள்ள மூலமந்திரத்தை அனுஸ்மரணம் செய்துகொண்டு அபிஷேகம் செய்யவேண்டும்.

गोश्रिंगाग्र प्रमाणेन लिङ्गाग्रे चतुरङ्गुलं ।
अभिषेकं शनै: कुर्यान्मूलमंत्रमनुस्मरन् ॥

அபிஷேகம் செய்யும் காலத்தில் ஆசாரியன் தாய் போன்ற பாவனையில் அபிஷேகம் செய்ய வேண்டும். அதாவது,

आवाहनादि कालेषु आचार्यो गुरुरूपधृत् ।
अभिषेकाद्यलंकारे त्वाचार्यो मातृरूपवत् ।
नैवेद्य धूपदीपादौ आचार्यो मंत्ररूपवान् ।
स्तोत्रप्रदक्षिणे कोल त्वाचार्यो भक्तरूपवान् ॥

ஆவாஹனம் செய்யும் காலம் முதலியவைகளில் ஆசாரியன் குருரூபமாகவும், அபிஷேகம் அலங்காரம் முதலிய காலங்களில் ஆசாரியன் தாய் வடிவிலும் தூப, தீப, நைவேத்ய காலங்களில் மந்திர வடிவமுடையவனாகவும், தோத்திரம் ப்ரதக்ஷிணம் முதலிய காலங்களில் ஆசாரியன் பக்த வடிவமுடயவனாகவும் விளங்கவேண்டும் என்று ஆகமவிதி கூறுகிறது.

இவ்வாறு மாத்தியான்ஹிக கால பூஜையை முடிக்கவேண்டும்

வெண்தாமரை, அரளி, பொசம் புஷ்பம், துளசீ, நைதல், வில்வம், சங்க புஷ்பம், (வெள்ளைக்காரட்டை) மருதாணிப்பூ இவைகள் மாத்தியான்ஹிக பூஜைக்கு இன்றியமையாதவை.

இதுபோல் பைரவி ராகம், வாத்யமும் பஞ்சமம், கொட்டரீயதாளம், லளித நிருத்தம் முதலியவைகளும் சிறந்தது.

இந்தப் பூஜையும் மஹாசந்தி பூஜை எனப்படும்.

உத்தரமேரூர் :
சுந்தர வரதப்பெருமாள் கோயில் :

ஹௌத்ரம் மாதவரங்கநாத பட்டாசார் சூலமங்கலம்

நம் முன்னோர் செய்த தவப்பயனுய், இருட்டில் ஜோதிருபமாய் காட்சி தரும் மூர்த்திகளைப்போல் எந்த நேரத்தில் ஆகம, சித்தாந்தங்கள் பாழடைந்து விடுமோ எனபீதி அடைந்த சமயத்தில் ஆகமங்கள் அழியாது. ஆனுலும் நீங்கள் உங்கள் கடமைகளை உணர்ந்து வழி பாடு செய்யுங்கள் எனக்கூறி தக்க சமயத்தில் தீபம் ஏற்றி இருளை அகற்றிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரியவாளுக்கு அர்ச்சக சமூகம் தன் நன்றியை அறிவித்து கொள்வதோடு மட்டுமின்றி ஆஸ்திகர்கள் உள்ளத்திலும் அறநிலைய துரையினர் உள்ளங்களிலும் விழிப்பு உணர்ச்சியை ஊக்குவித்ததற்கு அவர்களின் சார்பாகவும் என் மனப்பூர்வமான ப்ரணாமங்களை செலுத்த அடியேன் கடமைப்பட்டு உள்ளேன்.

ஸ்ரீ பரமாசார்யாள் மூன்ருவது சதஸ்ஸில் கூறியதுபோல் இதுநாள்வரை கோவில்களை தங்கள் சொத்தாக, கருவூலமாக, பட்டினியும் பழிப்பிற்கும் ஆளானதோடு இன்றி கட்ட வேஷ்டி இன்றியும் இருக்க இடமின்றியும், கஷ்டத்தோடு இன்றுவரை காப்பாற்றி கொடுத்து இருக்கும் ஒரு ஏழை அர்ச்சகனுக்கு பொன்னுடை போற்றப்பட்டோ, உருவச்சிலை அமைத்தோ கவனிக்க ஒருவரும் இல்லை. அதே சமயத்தில் உலகில் அநேக தியாகிகள் கிளம்பிவிட்டார்கள். இந்த தியாகிகளை நாம் தான் கவனிக்கவேண்டும் என்று "சுவாமிகள்" இயம்பினுர்கள். அது முக்காலும் உண்மை என்பதை உலகம் உணரும் என்னே தியாகம்! என்னே கடமை உணர்ச்சி. அவனை கவனித்து இருந்தால் மமதையினுல் ஒரு சமயம் கடமை தவறி விடுவான் என்று பேசாமல் விட்டு விட்டார்கள் போலும்!.

மேற்படி சதஸுக்கு அடியேனுக்கு மூன்று வருஷங்களாக சென்று "நல்லாரைக் காண்பதும் நன்றே எனும் மூதுரைப்படியும் ஸத்சங்கத்வே நிஸ்ஸங்கத்வம்" என்பதற் கிணங்கியும் பரமாசார்யரை தரிசிக்கவும் முன் செய்த வினைப்பயனுல் கருணைக்கும் பாக்யம் கிடைத்தது.

நான் ஏழை அர்ச்சகன். அதோடு நிறைவு இல்லா படிப்பினன். இருந்தும் "பூவோடு சேர்ந்த நாறும்" என்பதற் கிணங்க என்னை ஸ்ரீ பரமாசார்யார் கருணைப் பார்வையால் உயர்த்தி எனக்கும் "அவைக் களத்தில்" ஒரு வாய்ப்பு கொடுத்தார். அதோடு ஏழையின் "சிறு நூலை ("ஸ்ரீ வைகாநஸ நித்யார்ச்சா விதாநம்") ஊக்குவித்ததோடும் அதற்கு ரூபாய் நூற்றி ஐம்பது அச்சு கூலிக்கு உதவினுர்கள். காரைக்குடி ப்ரம்மஸ்ரீ ராமனுத சிரௌதிகளிடம் (ஸ்ரீ வித்யா உபாசி) அனுப்பி காயத்ரீ முத்திரைகளை அறியவும் ஒரு வாய்ப்பு கொடுத்தார்கள். அவைகளை அறிந்து தெளிந்தேன். இவ்வருஷம் "அவை" காஞ்சியில் நடந்தது அதற்கும் அடியேன் சென்றபோது சமீபத்தில் உள்ள திரு உத்தர மேரூரை பார்க்க சென்றேன். போன வருஷம்

மதுரை நாராயணபுரத்தில் உத்தர மேரூரைப் பற்றி வைகாநஸ ஆகமத்தில் விசேஷமாக கட்டப்பட்டது என்று ஸ்ரீ அலங்கார பட்டாசாரியார் சதஸில் சொல்லி இருந்ததை ஞாபகப்படுத்து கிறேன். ஸ்ரீ ஆசார்யாள் அருள் இன்றேல் அவையில் கலந்துகொள்ளவோ மேற்படி ஊரை தரிசிக்கவோ முடியாது.

இந்தியாவில் உத்தர மேரூரைப் போன்ற கோவில் இல்லை எனலாம். இது வைகாநஸ ஆகமத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு. அதோடு மட்டுமல்ல சில்ப சாஸ்திரத்திற்கும், ஜனநாயகத் திற்கும் எப்படி ஆட்சி முறை வகுக்கப் படவேண்டும் என்பதற்கும் தேர்வு முறை எவ்விதம் செய்யவேண்டும் என்ப தற்கும், சோஷகால ஆட்சிமுறை வகுத்த திட்டங்களையும் கல்வெட்டு களில் காணக் கிடக்கின்றது. இது ஒரு சரித்திர பிரசித்திபெற்ற கோவிலோடு கூட ஆகம விசேஷமுறையில் கட்டு வித்த கோவிலாகும்.

இந்த கோவில் ஒன்பது மூலஸ் தான மூர்த்திகளை உடைய ஒரு கோவில். ஒரே கோபுரம் முதலிய விசேஷ கவனத் தோடு கட்டப்பட்டதாகும். இதற்கு ஆக மத்தில் "நவமூர்த்தி விதாநம்" என்று பெயர். இதைப்பற்றி மரீசி மகரிஷி "விமாநார்ச்சன கல்பத்தில்" ஐந்தாவது அதிகாரத்தில் சொல்லப்பட்டு இருப் பதை கீழே விளக்கப்பட்டு இருக்கிறது.

மேரூ என்றால் உயர்ந்தது என்று பொருள். ஸ்ரீ வித்யா உபாசிகள் ஸ்ரீ தேவியை மேருவில் வைத்துத்தான் பூஜிப்பார்கள். அந்த மேருவைப் போன்ற தோற்றமுள்ளதான கருவரை கள் உள்ளது இக்கோவில். மேருவுக்கு மூன்று ஆவரணம் உண்டு. அதுபோல் இவ்விடம் கோவில் விமானத்துக்கும் மூன்று ஆவரணம் உள்ளது.

அதில் 1. விஷ்ணு 2. புருஷன் 3. சத்யன் 4. அச்சுதன் 5. அநிருத்தன் 6 நரநாராயணன் 7. வராஹன் 8. நரசிம்மன் 9. ஆதிமூர்த்தி ஆக ஒன்பது மூர்த்திகளும் மூன்று ஆவரணத்திலும் படுத்தும், உட்கார்ந்தும், நின்று கொண்டும் இருக்கிறது ஒன்பது விதமான மூல பேரங்கள் தனித்தனியாக கர்பக்ருஹ, அர்த்த மண்டபமாக கட்டப்பட்டும் ப்ரம்மா, ஈசானன் முதலியவர்களோடும் துவார பாலகர்களோடும் அதி ஆச்சர்ய மாக சேவை சாதிக்கிறார். விமானம் மூன்று அந்தஸ்துகளோடும் மலை ஏறுவது போல் படிக்கட்டுகளோடும் இருக்கிறது.

முதலில் வாசலில் வட்டவடிவமான அழகிய முகப்பு கோபுரம் உள்ளது. அதற்கு முன்பு ப்ராகாரத்தில் ஒரு ராஜ கோபுரம் கட்டப்படாத நிலையில் உள்ளது. உள்ளே சென்றால் கரு வரைக்கு முன்பு துவார பாலர்கள் இரு வரும் இரண்டு கைகளோடும் ஐந்து தலை நாகசர்ப முடியோடும் காக்ஷி தருவது இங்குதான். அதோடு கருவரையில் இரண்டு தூண்கள் இருப்பதும் நோக் கத்தக்கது. பெருமாள் ஸ்ரீ பூமி, சகிதம் ஸ்ரீ சுந்தரவரத பெருமாள் சேவை பார்த்து புளகாங்கிதம் அடைகிறோம். அதன்பிறகு பிராகாரத்தில் தென் அந்த ராளத்தில் தெற்கு நோக்கி நின்ற திருக் கோலத்தில் உபயநாச்சியிரோடு சேவை சாதிப்பவர் ஸத்யமூர்த்தி (சத்யவரதன்)

மேல்புறம் அந்தராளத்தில் மேற்கு நோக்கி நின்றதிருக்கோலத்தில் சேவை சாதிப்பவர் அச்சுதமூர்த்தி (அச்சுத வரதன்)

வடபுறம் அந்தராளத்தில் வடக்கு நோக்கி உட்கார்ந்து திருக்கோலத்தில் உபயநாச்சியரோடு சேவை சாதிப்பவர் அநிருத்த மூர்த்தி.

அதின்பிறகு படிவழியாக மேலே ஏறிச் சென்ருல் அவ்விடம் கருவரையில் கிழக்கு முகமாக உட்கார்ந்த திருக் கோலத்தில் ஸ்ரீ விஷ்ணு மூர்த்தி உபய நாச்சியாரோடும், பாம்புமுடியோடு கூடியது துவார பாலகருடனும் சேவை சாதிக்கிருர்.

அடுத்த தெற்கு அலிந்தரத்தில் நர நாராயணர் (கிருஷ்ணனும் அர்ச்சுன னும்) உட்கார்ந்த திருக்கோலத்தில் பார்க்கலாம்.

அடுத்த மேற்கு அலிந்தரத்தில் யோக நரசிம்மன் உட்கார்ந்த கோலத் காக்ஷி தருவார்.

அடுத்த வடக்கு அலிந்தரத்தில் உட்கார்ந்த திருக்கோலத்தில் பூவராஹ பெருமாள் சேவை சாதிக்கிருர்.

அதனடுத்த ஆவரணத்திற்கு சென் ருல் அவ்விடம் ஆதிசேஷன் மேல் பள்ளிகொண்ட பெருமாள் மார்க்கண் டேயருக்கு அபயம், கால்மாட்டில் கீழே பூமிதேவி, மதுகைடபாள், சதுர்முக பிரம்மா, ஈசானன் பிரம்மாவோடும் துவாரபாலகர் ஸ்திரி தேவதை கங்கா யமுனு இவைகளை தரிசிக்கலாம்.

இது விஷயமாக ஆகமத்தில் கீழ்க்கண்ட குறிப்பு காணப்படுகிறது

உத்தேசித்த இடத்தில் அதனுடைய ப்ராகாரத்திற்கு வெளியே ஒன்பது ஹஸ்த, நீளமுள்ளதாக தருணாலயம் செய்யவேண்டும். அந்த இடத்தை எண்பத்து ஒன்று பாகமாக பிறித்து கொள்ளவும். அதின் மத்தியில் ஒன்பது பாகம் கர்பாகாரம். அதற்கு வெளியில் பதினறு பாகம் அப்யந்தரவாசல். அதற்கு வெளியில் இருபத்து நாலு பாகம் அலிந்தம். அதற்கு வெளியில் முப்பத்துரெண்டு பாகம் பாஹ்யபித்தி (வெளிவாயில்) அந்த வெளியில் நாலு பக்கமும் நாலுவாசல் உள்ளதாயும் அல்லது ஒருவாசல் உள்ளதாயும் அல்லது ஜன்னலோடு கூடியதாயும், முகமண்டபம் த்ரிபாதமாகவோ, பாதி யாகவோ முக மண்டபம் இருக்க வேண்டும்.

கர்ப்பக்ருஹம் ஏழு ஏழு பாகமாக செய்து அதில் ப்ராம்மே-விஷ்ணுமூர்த் திம் கிழக்கு முகமாகவும். அதற்கு மேற் கில் மானுஷபாகத்தில் மூன்ருவது தளத்தில் சௌதுகத்துனுடைய இரண்டடு பக்கமும் ஸ்ரீ தேவிக்கு பீடம் அமைக்கவும்.

அலிந்திரத்தில் துவாரத்திற்கு தென் பக்கத்தில் புருஷமூர்த்தி கிழக்கு முகம். அலிந்தரத்தில் தெற்குமுகமாக சத்ய மூர்த்தி. மேற்கு முகமாக மேற்கே அச் சுதமூர்த்தி. வடக்கில் வடக்குமுகமாக அநிருத்த மூர்த்தி. அதனுடைய அலிந் தரத்தில் அநிருத்த மூர்த்திக்கு இடது பக்கம் இரண்டாவது தலத்தில் வரா ஹம். வடக்குமுகம் அச்சுத மூர்த்திக்கு வடக்குபுரத்தில் மேற்குமுகமாக நார சிம்மம். சத்யமூர்த்தியினுடைய வலது புரத்தில் தெற்குமுகமாக நரநாராயணர். இவ்விதமாக பிரதிஷ்டை செய்வது நவ மூர்த்திவிதாநம் எனப்படும்.

இப்படி சொல்லப்பட்ட விதமாக மூல பேரர்களை நிருமாணித்து ஒவ்வொன் றிற்கும் கண் திறந்தும் வாசனு திரவியங் களால் அலங்கரித்தும் ஆதிமூர்த்தியான

மகாவிஷ்ணுவை யாகசாலையின் முன் பக்கத்திலும், அதற்கு கிழக்கே புருஷ மூர்த்திக்கும் அதற்கு கிழக்கே த்ருதீய தலத்தில் களதுகத்துடைய ஸ்ரீ தேவி, பூதேவிகளை பிரதிஷ்டை செய்ய வேண்டும்.

ஆலயத்திற்கு தெற்கே சத்ய மூர்த்தி யினுடைய யாகசாலையும் இருக்க வேண்டும். அதற்கு தெற்கில் நரநாரா யணனுடைய யாகசாலை இருக்க வேண்டும். ஆலயத்திற்கு மேற்கே அச்சுத மூர்த்தியினுடைய யாகசாலை யும், அதற்கு மேற்கே நரசிம்மனுடைய யாகசாலை இருக்கவேண்டும்-

ஆலயத்திற்கு வடக்கே அநிருத்த மூர்த்திக்கு யாகசாலை இருக்கவேண்டும்.

யாகசாலைகள் பதினறு-பனிரெண்டு-எட்டு-நாலு கால்கள் உடையதாய் நிர் மாணிக்கவேண்டும். தனித்தனி தோர ணங்கள் பூர்ண கும்ப, விதான, துவஜ தர்ப பலங்களினல் அலங்கரித்து மத்தி யில் சய்யாவேதி நாலு-மூன்று-இரண்டு-ஹஸ்த விஸ்தாரமுடையதாய் தனித் தனியாக யாகசாலை நிர்மாணிக்கவும்.

ஆதிமூர்த்திக்கு பஞ்சாக்நியும் - பௌண் டரீக அக்னியும், நிர்மாணிக்கவும். அநந்த சயனனுக்கு பஞ்சாக்நி மட்டும். புருஷ மூர்த்திக்கு ஆஹவநீயம். ஸத் யனுக்கு அன்வாஹார்யம். அநிருத்த மூர்த்திக்கு ஆவசத்யம். வராஹ மூர்த் திக்கும் நாரசிம்மத்திற்கும் கார்ஹபத் யம். நரநாராயணனுக்கு பௌண்டரீகம் இவ்விதமாக அக்நி நிர்மாணம்.

ஆதிமூர்த்தி சயனமாய் இருந்தால் தனியாக சப்யாக்நி மட்டும் நிர்மாணிக் கவும். அந்த அந்த யாகசாலையில் ஸ்நபந அலங்காரங்களைச் செய்யவும். ஆலயத்திற்கு வடக்கில் வாஸ்து ஹோமம் ஒன்று மட்டும் செய்யவும். காரியக்ரமத்தில் பர்யக்நி பஞ்ச கவ்ய சுத்தி செய்து புண்யாக வாசகம் செய்து சர்வ அக்நி குண்டங்களையும் சுத்தி செய்து ஆகாரம் செய்து ஆசார்யன் அந்த அந்த பேரசுபமுகமாக பிரதிஷ் டையில் சொன்ன பிரகாரம் கும்ப பூஜை முடித்து, ஆவாஹநம் செய்து ஏழு கல சங்களால் ஸ்நபன அபிஷேகம் செய்து, அந்த அந்த வேதியில் ஐந்துவிதமான சயநங்களால் சயநாதி வாசம் செய்து, அந்த அந்த திக்கில் வைத்து ஹளத்ர செய்து முடித்து மூர்த்தி மந்திரத்தின லும் ஸ்வாஹாகார ஜுஷ்டாகாரங்களி னல் ஹோமம் செய்து இரவு கழித்து அதிகாலையில் ஸ்நாநம் செய்து ஆசார் யர்களுக்கு தக்ஷிணாதானம் முடித்து எல்லா தேவதைகளையும் எழுந்தருளச் செய்து அந்த அந்த இடத்தில் பிரதிஷ்டை செய்யவும். புண்யாகவாசன அபிஷேகம் செய்து நித்யார்ச்சனை விதிப் படி பூஜித்து நிவேதனம் செய்து சர்வ ஜனங்களுக்கும் தர்சனம் செய்து வைக்க வும் இவ்விதமாக மரீசி மகரிஷி விமானர்ச்சன கல்பத்தில் சொல்லி இருக்கிறர்.

ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகளின் அருளுரை

நம் நாட்டில் மகாராஜாக்கள் கலைகளைப் பரிபூரணமாக வளர்த்திருக்கிறார்கள். இன்றும் நம் நாட்டில் பல கலைகள் இருந்து வருகின்றதென்றால், அதற்கு இப்படிப்பட்ட மகா சக்கரவர்த்திகளின் ஆதரவே காரணம். அந்தக் காலத்தில் விஜய நகர ராஜாக்களின் பரம்பரையில் வந்த மைசூர் மகாராஜாக்கள் நம் கலைகளை விசேஷமாக ஆதரித்திருக்கிறார்கள். தமிழ் நாடு, ஆந்திரப் பிரதேசம் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் வேதம், சாஸ்திரம், சங்கீதம் போன்ற கலைகளில் தேர்ச்சி பெற்ற வித்வான்கள் மைசூர் மகாராஜாக்களிடம் சென்று அவர்களுடைய ஆதரவையும் அவர்களிடமிருந்து சம்பாவனையும் பெற்று வந்திருக்கிறார்கள். இப்போது நம் நாட்டில் சுதேச சமஸ்தானங்களில்லை. எல்லாம் இந்திய யூனியனுடன் சேர்ந்துவிட்டன. இதனால் சிலருக்கு மனக்குறை இருக்கலாம். பழைய மகாராஜாக்கள் வெள்ளைக்காரர்களின் சைன்ய பலத்தினால் ராஜ்ய பாரம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். ஏதோ அவர்களால் சில சௌகரியங்களும் செய்ய முடிந்தது. ஆனால் அவர்களுக்குப் பின்னால் இருந்த பலம் வெள்ளைக்காரச் சைன்யம்தான். அப்படி வெள்ளைக்காரர்களின் ஆதரவுடன் ராஜ்ய பரிபாலனம் செய்துகொண்டு, ராஜா என்று இருப்பதைக் காட்டிலும், நம் தேசத்திற்கு ஸ்வாதந்திரியம் வந்து சகல ஜனங்களுடைய அனுமதியின் பேரில் ராஜ்ய பரிபாலனம் செய்வது மிகவும் உயர்வானது என்று நினைக்கிறேன். அதனாலே இந்தக் கர்நாடக சிம்மாசனத்திலே இருந்து இந்த மகாராஜா எவ்வளவு கலைகளையும் சாஸ்திரங்களையும் வேதங்களையும் அபிவிருத்தி பண்ணி ஆதரவு கொடுத்தாரோ அவ்வளவுக்கும் இங்கு வந்து இந்தச் சதஸை ஆரம்பித்த தன் மூலம் ஆதரவு கொடுத்திருக்கிறார்.

இதைத் தவிரத் தமிழ்த் தேசத்திற்கு இன்னொரு விசேஷம் உண்டு. இங்கே காஞ்சீபுரம், சென்னை, வாலஜாபேட்டை முதலிய இடங்களில் ஆட்சி செலுத்திய நவாபுக்கு 'நவாப் ஆப் கர்நாடிக்; என்ற ஒரு பெயர் உண்டு. 'கர்நாடிக்' என்ற பெயர் இருந்ததே யொழிய இங்கே கர்நாடக ராஜா இருந்ததில்லை. இப்போது கர்நாடக ராஜாவே வந்து விட்டார். நம் கலைகளை ஆதரிக்கும் பாரமும் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. இப்போது அவர் நமக்கு உண்மையாகவே மகா ராஜா ஆகிவிட்டார்.

காஞ்சியைக் 'கச்சி மூதூர்' என்று திருநாவுக்கரசு ஸ்வாமிகளும், சம்பந்த மூர்த்தி ஸ்வாமிகளும் குறிப்பிட்டிருப்பதிலிருந்து இது அவர்கள் காலத்திலேயே மிகப் பழமையான ஊராகக் கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது என்பது தெரிகிறது. 'கல்வி கரையிலாத காஞ்சி' என்று சொல்லப்பட்டிருப்பதால் ஒரு காலத்தில் இங்கே கரையிலாத கல்வி கற்றவர்கள் ஏராளமாக இருந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. இப்போதும் எங்கேயாவது ஒரு மூலையில் நிறையப் படித்தவர்கள் இருக்கலாம். கரையிலாத கல்வி உள்ள இந்த மண்ணிலேயாவது, கல்வி பயின்றவர்களை யெல்லாம் சேர்த்து இந்தச் சதஸை நடத்துவோம் என்று மதுரையிலிருந்து ஓடோடி வந்தேன். நம் சொந்த ஊராகவும் இருக்கிறது. இந்த ஊர்ப் பொது

மக்களிடத்தில் என் எண்ணத்தை சொன்ன போது அவர்கள் எல்லோரும் என்னைக் காட்டிலும் அதிக உற்சாகமாக எல்லாப் பொறுப்பும் ஏற்று எதையும் குறைக்கக் கூடாது என்று பெரிய அளவில் ஏற்பாடு செய்து விட்டார்கள். மடத்திலுள்ளவர்களுக் குக் கூட அவர்கள் அவ்வளவு சிரமம் கொடுக்கவில்லை. நம் பக்தவத்ஸலத்தை ஏகாம்பரநாதரே இன்றைக்கு இங்கே கொண்டுவந்து விட்டிருக்கிறார். இன்றைக்கு அவர் ஜன்ம நக்ஷத்ரதினமும் கூட.

நம் நாட்டில் படிக்காத பாமரர்களிடம் நிறைய ஒழுக்கம் காணப்படுகிறது. கிராமப் புறங்களில் ஸ்திரீகள்கூட, "அக்கிரமம் பண்ணாதே.கண் அவிழ்ந்து போய்விடும்" என்று சொல்லுவதைக் கேட்டிருக்கிறோம், இப்படி நல்ல பண்புகளை யெல்லாம் ஜனங் கள் மனத்தில் பதிய வைப்பதற்கு அந்தக் காலத்தில் சில முறைகளைக் கைக்கொண்டி ருந்தார்கள். அதெல்லாம் என்னவென்று நான் தேட ஆரம்பித்தேன். உதாரணமாக, நம் நாட்டில் பொம்மலாட்டத்தின் மூலமாக நல்ல தத்துவங்களை உணர்த்தியிக்கிறார்கள். அரிச்சந்திரன் நாடகத்தைப் போட்டு, என்ன கஷ்டம் வந்தாலும் சத்தியத்தைக் கைவிடவே கூடாது என்ற உயர்ந்த கருத்து எல்லோர் மனதிலும் ஊறும்படி செய்திருக் கிறார்கள். அதே போல் தான் கோயில்களில் பாரதப் பிரவசனம் செய்து பக்தியையும் நல்ல ஒழுக்கங்களையும் பரப்பி யிருக்கிறார் கள். அதெல்லாம் இப்போது குறைந்துவிட் டது. பொய்யும் புரட்டும் சூதும் வாதும் அதிகமாகிவிட்டன. லஞ்சம் வாங்குவதைப் பற்றியும், உணவில் கலப்படம் செய்வதைப் பற்றியும் இப்போதெல்லாம் கேள்விப்படுகி றோம். அவமானப்படுவதோடு நம்நாடு இந் தக் கதிக்கு வந்து விட்டதே என்று மன வருத் தம் அடைகிறோம்.

அதற்காகத்தான் மனிதர்களை நல்லவர்க ளாகப் பண்ணக்கூடிய பழைய கலைகளை ஆதரிக்க வேண்டும் என்று சொல்லு கிறேன். "நம்மையும் கவனிப்பவர்கள் இருக்கிறார்கள்; நமக்கும் மதிப்பு இருக்கிறது" என்று தெரிந்தால் அவர்கள் உற்சாகமாகத் தங்கள் கலைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவார்கள். நாம் கவனிக்காததனால்தான் ஜீவனத்திற்காக அவர்கள் பக்தி சம்பந்தமில் லாத காரியங்களுக்குத் தங்கள் கலையை உபயோகிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். இதை மாற்ற வேண்டும். இல்லாவிட்டால் எல்லா நற்கலைகளும் இந்தத் தலை முறை யோடு அழிந்துவிடும்.

நம் நாட்டில் பொம்மலாட்டம், வில்லுப் பாட்டு என்று இருக்கின்றன. ஆந்திரத்தில் புர்ரகதா, கர்நாடகத்தில் யக்ஷகானம், ஒரிஸ் ஸாவில் 'பாலகதா', வங்காளத்தில் 'கதகதா' மகாராஷ்டிரத்தில் 'போவாடா' என்று இம் மாதிரி ஒவ்வொரு பிரதேசத்திலே ஒவ்வொரு முறையிலே பண்பையும் நெறியையும் வளர்த்திருக்கிறார்கள். அவைகளைக் காப் பாற்ற வேண்டியது நம் கடமை. இல்லாவிட் டால் இதெல்லாம் கெட்ட வழிக்கு உபயோ கப்படுத்தப்பட்டு வீணாகிவிடும். இப் போதும் ஜனங்களின் மனசிலே நல்லவர் களாக இருக்கவேண்டும் என்ற ஆசை இருக்கிறது. பொய் சொல்லக் கூடாது, திரு டக் கூடாது, மற்றவர்களை ஏமாற்றக்கூடாது என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இப்போது இருக்கிற சூழ்நிலையில் பழக்கம் மாறிப் போய்க் கோணல் வழிக்குப் போய் விடுகிறார்கள். நான் சொன்ன பழைய முறைகளை அழியாமல் காப்பாற்றினால் இந் தப் பழக்கத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைக்கலாம்.

அதேமாதிரி கோயிலில் அர்ச்சனை செய் கிறவர்களும், சிற்பிகளும் உற்சாகம் இழந்து,

'நம்மை யார் கவனிக்கப் போகிறார்கள்?' என்று இருக்கிறார்கள். அவர்களுக்கும் நாம் தைரியம் கொடுக்கவேண்டும்.

அடுத்தபடி தேர் உத்ஸவம். அந்த ஓர் உத்ஸவத்தில்தான் மேல் ஜாதி-கீழ் ஜாதி, ஏழை-பணக்காரன், வயதானவன்-சிறுவன் என்ற வித்தியசாமில்லாமல் எல்லோரும் தெய்வத்துக்கு முன்சமம் என்பதை காட்டு வதற்காக ஒன்று சேர்ந்து தேர் இழுப்பார் கள். என்ன அசுத்தமானாலும் தேர் இழுத்த பிறகு ஸ்நானம் செய்யக்கூடாது என்று சாஸ்திரமே கூறுகிறது. அதுவும் இப்போது குறைந்து விட்டது. ஜனங்கள் இழுக்க வரா ததனால் யந்திரம் வைத்து இழுக்கலாமா, மாடு வைத்து இழுக்கலாமா என்று யோசித் துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்ய விடாமல் நாமே இழுக்க வேண்டும். சின்னச் சட்டத்தேரையோ, சப்பரத்தையோ, இழுப் பது என்ற ஒரு வழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அதுதான் எனக்கு எல்லாவற் றையும் விடப்பெரிய கலையாக, செல்வ மாகத் தோன்றுகிறது.

நம் நாட்டில் உள்ள பழைய கலைகளில் தெருக்கூத்தும் ஒரு நல்ல கலைதான். அதே போல் நாடகமும் ஒரு கலைதான். நாடகத் தைத்தான் படப் பிடித்துச் சினிமா என் கிறார்கள். ஆகவே, சினிமாவையும் ஒரு கலை என்றுதான் நாம் கொள்ள வேண்டும்.



ஆகவே, நாடகமும் சினிமாவும் இருப்பது தவறு அல்ல. ஆனால் அவை எந்த முறையில் காட்டப்படுகின்றன என்பதுதான் முக்கியம். 'பவபூதி என்று ஒரு கவிஞன் இருந்தான். அவன் நாடகத்தை உத்ஸவத்தின் போது நடத்தியதாகப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறான். இன்னொருவர் தம் நாடகத்தை யக்ஞசாலையில் நடத்தியதாகக் கூறியிருக்கிறார். ஆகவே, நாடகங்கள் நல்ல முறையில் அமைந்து, நல்ல பண்புகளை வளர்க்க உபயோகிக்கப்பட்டால் அதனால் ஜனங்களும் பயனடைவார்களே என்ற ஆசை எனக்கு. நாடகங்கள் நன்றாக இருந்தால் சினிமாவும் சீராகிவிடும்.

ஆகவே, எல்லாக் கலைகளும் அபிவிருத்தியடைந்து, இதனால் வருங்காலத் தலைமுறைகளெல்லாம் க்ஷேமமாக இருக்கவேண்டும் என்று காமாக்ஷி தேவியிடம் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.



சதஸில் சில்ப, ந்யாய சாஸ்திர வகுப்புக்கள் ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளின் முன்னிலையில் துவக்கி வைக்கப்பட்டன

சென்னை முதலமைச்சர்
ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்களின் உரை

நகரில் சிறந்தது காஞ்சி என்று நம் முன்னோர்கள் காஞ்சீபுரத்தைச் சிறப்பித்திருக்கிறார்கள். இந்த நகரம் புராதனமானது. 'நகரேஷு காஞ்சி' என்ற சுலோகத்தை நாம் எல்லோரும் அறிவோம். இந்நகரில் ஒப்புயர்வற்ற கலைகளெல்லாம் வளர்ந்தன. இங்கே பிரசித்தமான பல்லவ முறையைப் போன்ற சிறப்பான கோயில் கட்டும் முறைகளை நாம் அஜந்தாவில் காண்கிறோம். வட நாட்டில் இன்னும் பல இடங்களில் இக்கலை பரவியுள்ளது. இப்படித் தமிழ் நாட்டிலே வளர்ந்துள்ள எல்லாக் கலைகளைப் பற்றியும் நாம் விசேஷப் பெருமை கொள்கிறோம்.

சிற்பக் கலை, ஆகம சாஸ்திரங்கள் போன்ற புராதனக் கலைகளைப்பற்றி ஆராய்வதற்காகத்தான் இந்தச் சதஸை ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகள் இங்கே கூட்டியிருக்கிறார்கள். இந்தக் கலைகளெல்லாம் நம் புராதனமான கோயில்களில் தான் வளர்ந்துள்ளன என்பதை நாம் மறந்து விடக்கூடாது.



ஆகவே, இவற்றை நாம் பாதுகாக்க வேண்டுமென்றாலும், நன்கு உணர்ந்து அநுபவிக்க வேண்டுமென்றாலும் நம் கோயில்களை நாம் பாதுகாத்தாக வேண்டும். கோயில்களைப் பாதுகாக்கவேண்டுமென்றால் அங்கே 'சாந்நித்யம்' நிலவச் செய்ய வேண்டும். இறைவன் வழிபாடு ஒழுங்காக நடைபெற வேண்டும். இறைவன் வழிபாட்டு முறையைப் போதிப்பது தான் ஆகமம்.

செல்வத்தில் மிதக்கும் அமெரிக்காவிலுள்ளவர்கள் கூட, ஆகமம், சிற்பம் போன்ற சாஸ்திரங்களிலெல்லாம் அக்கறை காட்டுகிறார்கள் என்றால், அவற்றின் பெருமையை நாம் உணர்ந்து கொள்ளலாம். நம்முடைய பேரதிருஷ்டத்தின் காரணமாக நம் கலாசாரத்தின் சின்னங்களான நம் கோயில்கள் இன்னும் அப்படியே இருக்கின்றன. நம் தலைவர் நேருஜி தமிழ் நாட்டுக்கு வரும்போதெல்லாம், 'தென்னகத்தில்தான் பாரதநாட்டைக் காண்கிறேன்' என்று பெருமையுடன் கூறுவது வழக்கம்.

இந்தக் கலைப் பொக்கிஷங்களெல்லாம் இன்னும் இருக்கின்றன. இவைகளை நாம் கவனிக்கவில்லை யென்றால், இவைகள் சிதைந்து, மறைந்து போகலாம். இதை உணர்ந்துதான் பெருங்

கருணையுடனும், தீர்க்க தரிசனத்துடனும் ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகள் இவைகளுக்கு ஒரு புத்துயிர் அளிக்கவேண்டும். இவைகளில் நாம் புதிதாக கவனம் செலுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த மூன்றுண்டுகளாக இந்தச் சதஸைக் கூட்டி நமக்கெல்லாம் ஓர் ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருகின்றுர்கள். அவர்களுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக நம் புராதனக் கலைகள் இருக்கின்றன. அவைகளில் பல மறைந்து இருக்கின்றன. இத்தகைய கலைகளின்றி நமக்கு வாழ்க்கையில்லை. இந்தக் கலைகளின் அருமையை நாம் உணர்ந்து மட்டுமல்லாமல், மக்கள் அனைவரையும் உணர்ந்து பலன் பெறச் செய்யவேண்டியவர்களாக இருக்கின்றோம். அதற்காகவும் இந்தச் சதஸ் கூட்டப்பட்டிருக்கிறது.

'இதெல்லாம் நமக்கு வேண்டுமா ?' என்று நாலு பேர் கேட்கலாம். 'நமக்கு வேண்டியது என்ன ? அரிசிதானே' என்று கேட்கலாம். உண்மைதான். யாரும் பட்டினியாக இருந்து இந்தச் சதஸை நடத்தி இந்த கலைகளையே நாம் உணவாக உண்ணவேண்டும் என்று சொல்லவில்லை. நமக்குப் பொருள் அவசியந்தான். 'பொருளிலார்கு இவ்வுலகமில்லை' என்பது வள்ளுவரின் வாக்கு ஆனல் பொருள் மட்டும் போதாது; அறிவும் வேண்டும். அமெரிக்கா போன்ற நாடுகள் ஐசுவரியத்தினுலே மூழ்கியிருக்கின்ற நாடுகள். அதே சமயத்திலே அறிவிலும் ஆராய்ச்சியிலும் மிகவும் முன்னேறி யிருக்கிறுர்கள் அந்த மக்கள். இத்தனை இருந்தும் அவர்களுக்கு வாழ்க்கையில் நிம்மதியிருக்கிறதா? 'இல்லை' என்று அவர்களே கூறுவார்கள். இன்பகரமான வாழ்க்கை இல்லாவிட்டால் அதை நிறைவான வாழ்க்கை என்று எவ்வாறு கூற முடியும் ? அந்த நிறைவை அவர்கள் காணமுடியவில்லை. ஏதோ ஒன்று குறைவாக இருக்கிறதே என்று மட்டும் உணர்கிறுர்கள். அந்த நிலையிலேதான் நம் ஆசாரியசுவாமிகள், "இதோ இருக்கிறது அந்த நிறைவு. இதை வைத்துக் கொள்ளுங்கள். வாழ்க்கையிலே நிறைவைக் காண்பீர்கள்'' என்கிறுர்கள். 'நாம் வேண்டுவது நிம்மதி பெற்ற வாழ்க்கை. அதற்குத் தேவையானவை இங்கே இருக்கின்றன. இவைகளைப் பற்றிச் சிந்தியுங்கள்' என்றவகையிலே நமக்கெல்லாம் ஒரு சிறந்த வழி காட்டியிருக்கிறுர்கள் நம் ஆசாரிய சுவாமிகள்.

ஆகவே, இந்தச் சதஸ் மிகச் சிறப்பு வாய்ந்த சதஸ். பல அறிஞர்கள் பல பண்டிதர்கள், பல கலைஞர்கள் எல்லோரும் இங்கே கூடியிருக்கிறீர்கள். இங்கே ஒரு பொருட்காட்சியும் அமைக்கப்பட்டிருக்கிறது. கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கலைகளில் ஊறிய நம் கவர்னர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு நம் ஆசாரிய ஸ்வாமிகளின் முன்னிலையில் நடைபெறும் இந்தச் சதஸ் சீராகநடைபெற்று மக்கள் அனைவருக்கும் ஒரு சிறந்த வழி காட்டும் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

இவ்வளவு சிறந்த சதஸிலே கலந்து கொள்வதே கிடைக்கப் பெறுத ஒரு வாய்ப்பு. இதில் பேரன்புடன் நீங்கள் என்னையும் இரண்டு வார்த்தை பேசவேண்டும் என்று அழைத்ததற்கு நான் பெரிதும் நன்றியுடையவனுக இருக்கிறேன். ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகளுக்கு எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மைசூர் மகாராஜா துவக்க உரை

[வித்வத்சதஸில், சென்னை கவர்னர் மைசூர் மகாராஜா ஸ்ரீ ஜயசாம ராஜேந்த்ர உடையார் அவர்கள் ஆங்கிலத்தில் நிகழ்த்திய துவக்க உரையின் தமிழாக்கம்]

இவ்வருஷத்திய ஸ்ரீ வ்யாஸ வித்வத் சதஸ் நடவடிக்கைகளைத் துவக்கி வைப்பதில் மிகுந்த சந்தோஷம் அடைகிறேன். தெய்விகம் பொருந்திய காஞ்சியில் இந்த மகாநாடு கூடுவதில் மிகுந்த பொருத்தம் உண்டு. இந்தியக் கலாசாரத்தையும் பண்பையும் வளர்ப்பதான, அறிவாளிகள் நிறைந்த இந்தச் சதஸில் நானும் கலந்து கொள்ளும்படி அழைக்கப்பட்டதை ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன்.

இந்தியக் கலாசாரம், பண்புக்கெல்லாம் மூலம் ரிக், யஜுஸ், ஸாம, அதர்வணம் என்ற நான்கு வேதங்கள் இத்தப் புனித இலக்கியங்களைத் தவிரப் புராதனமான முக்கிய அறிவு நூல்கள் நம் நாட்டில் இருக்கின்றன. அவை ஆகமங்கள் எனப்படும். இந்தியக் கலாசாரப் பண்புகளை அறிந்து கொள்ளவும் அவற்றைப் பாதுகாக்கவும் உபயோகத்தையும் வேதங்களைப் போன்று இந்த ஆகமங்களும் முக்கியமானவை. ஆகமங்களின் சிறப்பையும் நன்கு உணர்ந்து ஆகமங்களை ஆழ்ந்து படித்து அவற்றில் காணப்படும் அரிய தத்துவங்களைப் பரப்பும் தெளிவான லக்ஷியம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் உள்ளத்தில் உதித்துள்ளது.

இந்திய ஆன்மிக தத்துவம், கலாசாரப் பண்பாடு இவைகளைப் பற்றிய இப்பகுதியில் நம் கவனத்தைத் திருப்பி விட்டதற்கு ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு நம் நன்றியுடன் கூடிய வந்தனங்கள் உரித்தாகும்.

ஆகமங்கள்

ஆகமங்கள் மதாசாரத்தைப் பற்றியவை. நம் கோயில்களிலும் வீடுகளிலும் தெய்விக மூர்த்தி பூஜை நடத்தும் முறைகளை அவை போதிக்கின்றன. வேதங்கள் பகவானுடைய மூச்சுக் காற்று என்று சொல்லப்படுவதுபோல் ஆகமங்கள் பகவானுடைய வார்த்தைகள் எனப்படும். இவை இரண்டும் ஒன்றையொன்று சேர்ந்து பூர்த்தி செய்பவை. இவை இரண்டும் சேர்ந்து நம் இந்திய தத்துவங்களைக் காப்பாற்றும் இலக்கிய சாதனங்களில் ஒரு பெரும் பிரிவாகும்

'வேதம்' என்ற சப்தம் 'வேதயதீதிவத;' என்றும், 'ஆகமம்' என்பது 'ஆஸமந்தாத் கமயதீதி ஆகம:' என்றும் விவரிக்கப்படுகின்

றன. இவ்விரண்டிற்கும் ஒரு பரஸ்பர இணைப்புக் காணப்படுகிறது. ஆகமங்கள் வேதத்தின் சாரமாக எல்லோராலும் கருதப் படுகின்றன-'வேதஸ்ார : சிவாகம:'

ஆகமங்கள் சுருக்கமாக, சைவ, வைகர ஸஸ, பாஞ்சராத்திரம் என்ற மூன்று வகை களாக வகுக்கப்பட்டுள்ளன. இவைகளில் முதலாவது ஆகமம், சிவ ஆராதனையை யும் மற்ற இரண்டும் விஷ்ணு ஆதாரனை யையும் விவரிக்கின்றன.

பொதுவாகப் பார்க்குமிடத்து இந்த மூன்று ஆகமங்களும் ஒத்திருக்கின்றன. வித்தியா சங்கள் மிகக் குறைவே.

முக்கியமான தெய்வ வழிபாட்டு முறை களை இந்த ஆகமங்கள் விதிப்பதுடன், கோயில்களில் தெய்விக விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வது, கோயில்களை அமைக்கும் முறை, கோயில்களை நிர்மாணிப் பதற்கான தகுந்த இடத்தை நிர்ணயிருப்பது போன்ற எல்லாவற்றையும் இவை விளக்கு கின்றன. விக்கிரகங்கள் எந்த அளவில் இருக்கவேண்டும். அநாசாரங்கள் கலவாது எப்படிப் பாதுகாப்பது, நல்லமுறையில் பூஜை முதலிய காரியங்களை எப்படிச் செய் வது, செய்வனவற்றைத் தகுந்த காலத்தில் செய்வது இவற்றையும் ஆகமங்கள் விளக் குகின்றன. தெய்வ ஆராதனை அல்லது பூஜை விதிகள் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு கோயில்கள், விக்கிரகங்கள் இவற்றின் அழகிய அமைப்புத் தோற்றமும் முக்கியமாகும்.

சில்ப சாஸ்திரம்

ஆகமங்களைப் போன்று புராதனமாயுள்ள மற்றொரு சாஸ்திரம் சிற்பம் கட்டட அமைப்பு, சித்திர வேலைகள் போன்றவை களை இது போதிக்கிறது. ராஜதானி, நகரம், கோயில், வீடு முதலியவற்றின் அமைப்பு முறையைக் கூறும் வாஸ்து சாஸ்திரம் அல்லது வாஸ்து வித்யையுடன் இணைப்புக் கொண்ட சிற்ப சாஸ்திரம் தன்னிறைவுள்ள ஒரு தனிப்பட்ட சாஸ்திரம். சந்தர்ப்பம் ஏற் படும் போது வான சாஸ்திரம், ஜோதிஷம். மந்திர யந்திர சாஸ்திரங்களைப் பற்றியும் இதில் பிரஸ்தாபம் செய்யப்படுகிறது. ஆனால் சிற்ப சாஸ்திரத்தின் ஸாரதமமான பாகம், தெய்வங்களின் விக்கிரகங்களை அமைப்பது, அவைகளின் சக்திகளை விளக் கும் தியான முறைகள் இவையே யாகும்.

நாடகம் முதலிய கலைகள்

நம் நாட்டில் உத்ஸவங்களின் போது நாடகங்கள் நடத்துவதென்று ஒரு பழக்கம் வளர்ச்சியடைந்திருந்தது. பவபூதி என்ற மகாகவி, காலப்ரியநாதர் உத்ஸவத்தில் தம் நாடகங்களை நடத்தியிருக்கிறார் என்று நாம் அறிகிறோம். தெய்வ ஆராதனைகளை நடத்தும்போதும் உத்ஸவங்களிலும் இதி ஹாஸங்களிலிருந்து சில பகுதிகள் பிரவ சனம் செய்யப்பட்டு வந்தன. இன்றும் கோயில்களில் மகாபாரத, ராமாயண பாகங்கள் பாராயணம் செய்யப்படுகின் றன. இந்த கலாசார முறைகள் நாட்டுமக் களின் கலைகளை வளர்க்கப் பலம் ஊட்டின.

இப்படியாக ஆகமங்கள் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் இந்தியக் கலாசாரத்தை யும், பாரம்பரிய சம்பிரதாயங்களையும் வளர்த்திருப்பதில் பெரும்பங்கு கொண்டுள் ளன. மேலே கூறிய புராதன, கிராமியக் கலைகள் இந்திய சமூக வாழ்க்கையிலுள்ள பல்வேறு பிரிவுகளும் ஒன்றுபட உதவியிருக் கின்றன.

நமது கடமை

ஆகம சில்ப சாஸ்திரங்களின் சிறப்பை நாம் உணர்ந்திருப்பதால் இவற்றைப்பற்றிய அறிவைப் பெருக்க நாம் சில கடமைகளைப் புரியவேண்டும். ஆகம சாஸ்திரச் சுவடிகளையெல்லாம் தீவிரமாகத் தேடிப்பிடித்து, விமர்சன பூர்வமாக அவற்றை வெளியிட வேண்டும். கோயில்களின் ஸ்தல புராணங்களை யெல்லாம் சேகரித்துப் பல்வேறு கோயில்களின் சிறப்பையும் விசேஷ அம்சங்களையும் விளக்கிக் கூறவேண்டும். கோயில் பூஜைகளுக்காக நியமிக்கப்படும் அர்ச்சகர்கள் முதலியோர்களை ஆகமங்களில் நல்ல பயிற்சியுள்ளவர்களாகச் செய்யவேண்டும்.

சிவாசாரியார்களுக்கும், ஸ்தபதிகளுக்கும் நல்ல முறையில் ஊக்கம் அளிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நம் கோயில்களைக் கவனித்து, மிகப் பரிசுத்தமாகவும் புனிதமாகவும் வைத்துக் கொள்ளும்படி நம் மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டும்.



மைசூர் மகாராஜாவின் உரையை ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் மிக கவனமாகக் கேட்கிறார்கள்.

அறநிலை பாதுகாப்பு ஆணையாளர்

திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியாரின் உரை

ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளுக்கும், சிவாசார்யார்கள், பட்டாசார்யார்கள், மற்றுமுள்ள பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும் எனது பணிவு கலந்த வணக்கங்கள்.

சென்ற வருடம் நாராயணபுரத்தில் நடைபெற்ற சதஸில், ஆலய நிர்வாக அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். அதனால் தாங்கள் பெரிதும் பயனடைந்ததாக அவர்கள் கருதினார்கள். திருச்சி, தஞ்சை, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களைச் சேர்ந்த அந்த நிர்வாக அதிகாரிகள் இந்த சதஸிலும் கலந்துகொண்டு புராதனக் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பதோடு, இங்கு நடைபெறும் ஆகம சம்பந்தமான சர்ச்சைகளிலிருந்து தங்களுடைய கடமைகளையும் செய்ய வேண்டிய பணிகளையும் நன்றாகத் தெரிந்துகொள்ள வசதியாக யிருக்கும் என்றே அவர்களை மீண்டும் வரவழைத்தோம்.

நிர்வாக அதிகாரிகளுக்கு முதலில் நிர்வாகத்தைப் பற்றிய பிரச்னைகள்தான் முக்கியம். இந்த இலாகாவிற்கு H. R- & E. Administration Department என்றுதான் பெயர்.

டாக்டர் சி. பி. ராமசுவாமி ஐயர் அவர்களின் தலைமையில் நடந்த கமிஷன் சம்பந்தமாக இத்தியாவிலுள்ள எல்லா கமிஷனர்களையும் (ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு பெயர் உண்டு) டில்லியில் கூட்டி விவாதித்தார்கள். அந்தக் கூட்டம் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. இங்கே உள்ளதுபோன்ற அற நிலை இலாகாவோ, சட்டமோ பிற மாநிலங்களில் கிடையாது. தேசம் முழுவதும் ஒரே விதமான சட்டம் இயற்றுவதற்கு எதிர்ப்பு இருந்தது.

ஆனால், பொது மக்களும் அரசாங்கமும் கூடிய விரைவில் இந்த மாதிரிச் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். குஜராத், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் வெறும் நிர்வாகத்தை மட்டும்தான் சிந்திக்கிறார்கள். ஏனென்றால், அவர்களுடைய அதிகாரத்தின் கீழ் இந்து மத ஸ்தாபனங்கள் மட்டுமின்றி, கிறிஸ்துவ மத ஸ்தாபனங்கள், பார்ஸி மத ஸ்தாபனங்கள் எல்லாம் இருக்கின்றன. எனவே, அவர்கள் "உங்கள் மாகாணத்திலே செய்யக்கூடிய அளவுக்கு நாங்கள் செய்வதற்கு வாய்ப்பில்லை. எல்லா மத ஸ்தாபதனங்களையும் நாங்கள் ஒரே மாதிரியாக நடத்த வேண்டும். வருகிற கமிஷனர் இந்துவாக இருக்கலாம், அல்லது கிறிஸ்தவராகக்கூட இருக்கலாம்" என்று தங்களுடைய கஷ்டத்தைத் தெரிவித்தார்கள். ஆனால் நமது மாகாணத்திலே அந்தக் கஷ்டம் கிடையாது. இந்தச் சட்டத்திற்கே "Hindu Religious Endowments Act" என்று பெயர்.



இந்த இலாகாவின் நிர்வாகம் நன்ருக நடைபெறவேண்டும் என்று சொன்னுல் அதற்கு அடிப்படையாக சில பிரச்னைகள் இருக்கின்றன. ஆலயங்கள் செவ்வனே பராமரிக்க வேண்டும். நித்திய பூஜைகள், உற்சவங்கள் எல்லாம் சரிவர நடைபெற வேண்டும். ஆலய கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் நலனில் அக்கரை செலுத்த வேண்டும். ஆலய தரிசனத்திற்கு வரும் பக்த கோடிகளின் சௌகரியங்களை கவனித்துக்கொள்ள வேண்டும். இப் பிரச்னைகளெல்லாம் ஒன்ருேடு ஒன்று இணைந்திருக்கின்றன.

சற்று முன்பு சிவாசாரியார்கள், வைகானஸ, பாஞ்சராத்ர பட்டாசாரியார்கள் ஒரே மேடையில் அமர்ந்து விவாதம் நடத்தியதைப் பார்த்தோம். இந்த சதஸுக்கே இது உயிர் போலிருக்கிறது. இந்த சர்ச்சைகள் கேட்பதற்கு சுவாரஸ்யமாக இருந்ததோடு கூட, பல புதுப்புது பிரச்னைகள் முதன் முறையாக நம் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையும் பார்த்தோம்.

இத்த சதஸைத் தொடங்கிவைத்த மகாராஜா அவர்கள் ஆகமங்களைப்பற்றி விவரமாகச் சொன்னுர்கள். நமது ஆகமங்கள் உலகத்தின் கவனத்தையே கவர்ந்திருக்கின்றன என்ருல் அது மிகையாகாது.

நம்முடைய ஆகமத்தைப் படித்து தெரிந்துகொள்வதற்காக, வெளிநாட்டிலிருந்து எத்தனையோ பேர் வந்து, இங்கேயுள்ள சிவாசார்யார்களையும், பட்டாசார்யார்களையும்தான் கேட்கிருர்கள். அவற்றைப்பற்றித் தெரிந்துகொண்டு, புஸ்தகங்களெல்லாம் வெளியிட்டு மிகவும் அக்கறை காட்டுகிருர்கள். ஆனுல் நமது நாட்டில், நமது ஆலயங்களில் சரிவர பூஜை நடக்கிறதா, இல்லையா என்பதில்கூட நாம் அக்கறை காட்டுவதில்லை!

முக்கியமாக பூஜை செய்கின்ற பணியிலே ஈடுபட்டிருப்பவர்கள் அதைப்பற்றி எல்லாம் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். ஆகமங்கள் பற்றிய ஞானம் மட்டும் இருந்தால் போதாது. 'எத்தனைக் கஷ்டங்களிருந்தாலும் எங்களுடைய கடமைகளை சரிவர நிறைவேற்றுவோம்' என்ற விரதத்தை அவர்கள் கடுமையாக அனுஷ்டித்தால் ஆகமத்தைத் தோற்றுவித்த இந்த பாரத பூமி அந்த ஆகமங்களுடைய பலனை முழுமையாக அனுபவிக்க முடியும்.

இதைக் கருத்தில் கொண்டுதான், நமது ஆசார்ய சுவாமிகள் சதஸில் இந்த சர்ச்சைகளை முக்கிய அம்சமாக வைத்திருக்கிருர்கள்.

சாதாரணமாக இப்படியொரு வாய்ப்பு சிவாசார்யார்களுக்கே கிடைப்பதில்லை. அவர்கள் எல்லோரும் எங்கே ஒன்று சேருகிருர்கள்? ஒரு கும்பாபிஷேகம் நடந்தால் நாலு, ஐந்து பேர் சேருகிருர்கள். அவ்வளவுதான். எல்லோரும் ஒன்று சேரும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடையாது. அதே மாதிரிதான், வைகானஸமும், பாஞ்சராத்ரமும். இவர்கள் எல்லோரும் ஒரே மேடையில் சேருவதென்ருல் அது ஒரு பெரிய அதிசயமென்றே சொல்ல வேண்டும்.

எல்லாம் ஆண்டவன் அருளிய ஆகமங்கள். தெய்வத் தன்மை பொருந்திய ஆகமங்கள். இதிலே நாம் ஏன் வித்தியாசம் பாராட்ட வேண்டும். ஆசாரங்கள் மாறவேண்டியதில்லை, அந்தந்த ஆகமப்படி அங்கங்கே பூஜைகள் நடக்கட்டும். ஒன்றுக்கொன்று கலக்கக்கூடாது. கலக்க வேண்டியதுமில்லை.

ஆனுல், வைஷ்ணவாகமத்தைப் பின்பற்றுகின்றவர்கள், சிவாகமத்தைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். இரண்டுக்குமிடையேயுள்ள ஒன்றுமையான அம்சங்கள் நம்

மனசிலே பட வேண்டும். எவ்வளவோ அம்சங்களில் ஒற்றுமை இருக்கிறது என்பதை இன்றைய விவாதத்தின்போது பார்த்தோம். சிற்சில விஷயங்களிலேதான் வேற்றுமை இருக்கிறது. இதைப்போலவே சிவாசார்யார்களும் வைஷ்ணவாகமத்தைப் பற்றி ஆராயவேண்டும். அப்படியிருந்தால் இந்த சிவ–வைஷ்ணவ பேத உணர்ச்சி அடியோடு மறைந்துவிடும்.

பல விஷயங்களைப்பற்றி நமக்கு எவ்வளவோ சந்தேகங்கள் தோன்றுகின்றன. அதிலும் முக்கியமாக இந்த ஆகமத்தைப் பற்றிப் பேச பேச பிரச்னைகள்தான் அதிகமாக ஏற்படுகின்றன, பிரச்னை ஏற்படவேண்டும். பிறகுதான் தெளிவு பிறக்கும். அசிரத்தைப் போய்விடும். ஆகையினுலே நான் நிர்வாக அதிகாரிகளை முக்கியமாக வேண்டிக் கொள்வது என்னவென்ருல், இப்போது ஏதோ மனசுலோ தோன்றும் கேள்விகளைக் கேட்பதோடு நிறுத்திவிடக் கூடாது. அவ்வப்போது தோன்றும் சந்தேகங்களையும், பிரச்னைகளையும் கவனமாகக் குறித்து வைத்துக் கொண்டு ஸ்ரீ மடத்திற்குத் தெரிவிக்க வேண்டும். அவற்றை கேள்வி ரூபமாக எழுதி சிவாசார்யார்ளுக்கும் பட்டாச்சார்யார்களுக்கும் தெரிவிப்பார்கள். அவற்றைப்பற்றி இங்கே சர்ச்சைகள் நடைபெறும். தீவிரமாக ஆராய்ந்து பதில் கூறுவார்கள்.

இந்த சதஸில் கலந்துகொள்வதால் மற்ருெரு முக்கியமான பலன் நமது ஆசாரிய சுவாமிகளின் அருளுரைகளைக் கேட்பது. பல நிர்வாக அதிகாரிகள் ''சுவாமிகளுடைய உரைரை கேட்ட பிறகு நாங்கள் புது மனிதர்களாகவே மாறிவிட்டோம். எங்களுக்கு எங்கள் பணியிலே அதிக சிரத்தை ஏற்பட்டிருக்கிறது'' என்று என்னிடம் தெரிவித்திருக்கிருர்கள்.

மற்ருெரு விஷயமும் கூற விரும்புகிறேன், சம்பளத்தையும் வாங்கிக்கொண்டு தெய்வப் பணிசெய்யும் பாக்கியமும் நமக்குக் கிடைத்திருக்கிறது. இதை முன் பிறவியில் செய்த் புண்ணியத்தால் கிடைத்த பெரும் பேருகக் கருதி நாம் ஆலயத்தில் பணியாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிகம் நான் சொல்ல விரும்பவில்லை. உங்கள் கடமைகளைப் பற்றி பரீட்சை எழுதி பாஸ் செய்திருக்கிறீர்கள். அதைத் தவிர அவ்வப்போது சுற்றறிக்கைகளும் அனுப்பி வைக்கிருேம். அதையெல்லாம் படித்து அதன்படி நடந்தால் போதும். ஒரு கோயிலிலிருந்து மற்ருெரு கோயிலுக்குப் போனுல், அந்தக் கோயிலைப்பற்றி ஏதாவது 'சர்க்குலர்' வந்திருக்கிறதா என்று படித்துப் பார்க்க வேண்டும்.

இதை யெல்லாம் விட முக்கியமானது ஒன்று இருக்கிறது. நீங்கள் எப்போதுமே இறை பணியாளர்கள் அல்ல. நாம் செய்யும் உத்தியோகத்தை மறந்து சில சமயங்களில் கோயிலில் வழிபட வந்த பக்தர்களாக, சாதாரண மக்களாக நம்மை நினைத்துக் கொள்ளவேண்டும்.

காலையில் எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு திருநீருே, நாமமோ அணிந்து, ஆண்டவனை தரிசித்துவிட்டு உங்கள் அலுவல்களைக் கவனிக்கச் செல்லுங்கள். எக்ஸிக்யூடிங் ஆபீசர் நெற்றியிலே சின்னம் இல்லை யென்ருல், நாம் செய்யும் பணிக்கு அது பொருத்தமாக இல்லையென்றே சொல்லவேண்டும். நான் எல்லோரையும் சொல்லவில்லை. அப்படியொரு பழக்கமில்லாதவர்களைப்பற்றித்தான் குறிப்பிடுகிறேன். நாம் ஒழுங்காக இருந்தால் தான் கோயிலுக்கு வருபவர்களும் தூய்மையாக இருப்பார்கள். வெளியே போக வேண்டியிருக்கும் சமயங்கள் தவிர, மற்ற நேரங்களில் கால பூஜைகளிலும் நீங்கள் கலந்து கொள்ளலாம். இப்படியொரு விரதத்தை நீங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் வழிபட பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இதைச் செய்தால், நீங்கள் இன்று சதஸில் கலந்து கொண்டதன் முழுப் பயனையும் பெற்றவர்களாவீர்கள்.

ஆகமம்

இ. க. ஏ.

ஆகமம் என்பதை-ஆ-க-மம் எனப் பிரித்து ஆன்மாக்கள் மோக்ஷமடைய மல நாசஞ் செய்விப்பது எனப் பொருள் கொள்ளல் வேண்டும்.

இந்த ஆகமங்கள் நமக்கு அவசியந்தானு? அப்படி அவசியமாயின் அவை யாரால் எப்படி எதற்காக தோற்றுவிக்கப்பட்டன என்ற விஞக்கள் எழுகின்றன. அவற்றைக் கவனிக்கும் போது நமக்கு ஆகமங்கள் இன்றியமையாதவையாக ஆகின்றன. ஏனென்ருல், இந்த பூவுலகமானது கர்ம பூமி என்று சொல்லப்படுகிறது. ஜீவாத்மா, தன்னிடமுள்ள சிவத்தன்மையானது அக்ஞானத்திஞல் மறைக்கப்பட்டு மல, மயா, கர்ம ஸம்பந்தத்திஞல் தான் செய்த புண்ய பாபத்திற்குத் தகுந்த ஜன்மத்தை அடைகிருன். புல், பூண்டு, செடி, மரம் முதலிய ஸ்தாவரங்களாகவோ, புழு, பக்ஷி, மிருகம் முதலியவைகளாகவோ பிறக்கிருன். மனித ஜன்மமெடுப்பது துர்லபம். அதிலும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கி ஆணுகப் பிறப்பது அரிது. அதிலும் வைதிக தர்ம மார்க்கத்தைப் பின்பற்றி அனுஷ்டிப்பது துர்லபம். அதிலும் வித்வாஞகப் பிறப்பது துர்லபம். அதன் பிறகு ஜீவாத்மாவின் லக்ஷணம், குணம், கிரியை என்ன? பரமாத்மா என்பது என்ன? அதன் லக்ஷண குண விசேஷங்கள் என்ன? என்று விவேசனம் செய்வது துர்லபம். விவேசனம் செய்து "ஸோஹம்" (அந்த பரமாத்மா பிரம்மம் நானே) என அறிந்து ஒன்று கலந்திருப்பது மிகவும் துர்லபம். இப்படி யிருப்பவன் நற்கதியாகிய முக்தியை யடைகிருன். மானிட ஜன்மம் அடைவது முதல் முக்தியடைவது வரையில் அநேக கோடி ஜன்மங்களில் செய்த புண்யத்திஞல் தான் கிடைக்கும். இல்லாவிட்டால் கிடைக்காது. இதை ஆதி சங்கராசாரியாள் 'விவேக சூடாமணி'யில்

जन्तूनां नरजन्मदुर्लभमतः पुंस्त्वं ततो बिप्रता
तस्माद्वैदिक धर्ममार्गपरता विद्वत्वमस्मात्परम् ।
आत्मानात्मविवेचनं स्वनुभवो ब्रह्मात्मना संस्थितिः
मुक्तिर्नो शतकोटि जन्मसुकृतैः पुण्यैर्विना लभ्यते ॥

என்று சொல்லியிருக்கிருர்கள். மேலும், இவ்விதம் பூர்வஜன்ம புண்ணியத்திஞல் கிடைத்தற்கரிய மனுஷ்ய ஜன்மாவை அடைந்து அதிலும் ஆணுகவும் வேத வேதாந்த ஸித்தாந்தக் ஞானத்தை அடைந்தும் ஸம்ஸாரபந்தத்திலேயே கட்டப்பட்டு உழன்று கஷ்டப்படாமல் முக்தியை யடைவதற்கு ப்ரயத்னம் செய்யாமலிருக்கும் மூட புத்தியுள்ளவன் தன்னையே நாசஞ்செய்துக் கொள்கிருன்.

लब्ध्वा कथंचिन्नरजन्मदुर्लभं
तत्रापि पुंस्त्वं श्रुतिपारदर्शनम् ।
यस्त्वात्ममुक्त्यै न यतेत मूढधीः
स आत्महा स्वं विनिहन्त्य सद्ग्रहात् ॥

என்று சொல்லுகிருர். ஆகையால் தான் நற்கதியடைய வேண்டுமானுல் பிரும்மத்தை உபாஸிக்கவேண்டும். 'பிரும்மம் என்பது யாது? என்பதை வேதவேதாந்த ஸித்தாந்தங்கள் நிருபிக்கின்றன. அந்த நிர்ணயத்தை அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் சொல்லுகிருர்கள்.

उच्चावचैः उपनिषद्वचनप्रकाण्डैः
उन्मीलितश्रुतिगणैः उपब्रह्मणैश्च ।
यत्सादरं समुदितं यमिनां उपास्यम्
तत्ब्रह्म शङ्कर भवानिति कीर्तयामः ॥

'ஹே சங்கர! உபநிஷத்துக்களாலேயும் ச்ருதிகளாலேயும் சிவாகமங்களாலேயும் புராணாதிகளாலேயும் யோகிகளுக்கு உபாஸிக்கத் தகுந்தது பிரம்மம் என்று எது ஆதரவுடன் சொல்லபட்டதோ அந்த பிரம்மம் நீரே என்று நிச்சயிக்கிறோம். என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் நற்கதியடைய சிவபெருமானையடைவது தவிர வேறு வழியில்லை. இதை திருமூலநாயனார் அருளிய திருமந்திரத்தில். "சிவனொடொக்குந் தெய்வந் தேடினுமில்லை யவனொடொப் பாரிங்கு யாவருமில்லை, புவனங்கடந்தன்று பொன்னொளி மின்னுந் தவச்சடை முடித் தாமரையானே" என்று பாடியிருக்கிறார்கள். அந்த சிவன் எப்படிப்பட்டவனென்றால், பிறப்பு, இறப்பு இல்லாதவன். நித்யன், நிர்குணன், எங்கும் நிறைந்தவன். "ஸ்வேதாஸ்வதாரத்தில்"

सर्वाननशिरोग्रीवः सर्वभूतगुहाश्रयः ।
सर्वव्यापी स भगवान् तस्मात्सर्वगतः शिवः ॥

என்றும் சிவதர்மோத்தரத்தில்

आदिमध्यान्तनिर्मुक्तः स्वभावविमलः प्रभुः ।
सर्वज्ञः परिपूर्णश्च शिवो ज्ञेय : शिवागमे ॥

என்றும் அதர்வசிகை என்கிற உபநிஷத்தில்

शिव एको ध्येयः शिवंकरः ॥

என்றும் அதாவது—சிவன் ஒருவனே தியானிக்கத் தகுந்தவன். அவன் ஒருவனே யாவருக்கும் மங்களத்தைத் தருபவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வாதுள சுத்தத்தில்

शिवतत्वं महासेन निष्कलं परिकीर्तितम् ॥

ஈச்வர கீதையில்,

आनन्दमजमव्यक्तं निष्कलं तदुदाहृतम् ॥

அதாவது ஆனந்தரூபி, புலப்படாதவன், பிறப்பில்லாதவன், உருவமில்லாதவன், என்று கூறப்பட்டுள்ளது. 'உருவமில்லாதவன் என்று கூறுகிறதே, நாம் உருவமிருப்பதாக வழிபடுகின்றோமே' என்று கேட்டால் அந்த சிவன் லோகத்தை ஸ்ருஷ்டி செய்வதற்காகவும், யோகிகளும், ஞானிகளும், அனைவர்களும் அவனை மனனம் செய்வதற்கும் பூஜிப்பதற்கும், ஜெபிப்பதற்கும் உபகாரமாக ஸகல ரூபத்துடன் தோன்றுகிறான். இது வாதுளசுத்தத்தில்.

सृष्टयर्थं सर्वतत्वानां लोकस्योत्पत्तिकारणात् ।
योगिनामुपकाराय स्वेच्छया गृह्यते तनुम् ॥

என்றும்

तथैव योगिनां चापि ज्ञानिनां मन्त्रिणामपि ।
जपपूजा निमित्ताय निष्कलं सकलं भवेत् ॥

என்று கூறப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட அந்த சிவனை த்யானித்தாலும் பூஜித்தாலும் அவனுடைய மந்திரத்தை ஜபித்தாலும் நற்கதியடையலாம். இதை திருமூலநாயனார். "சிவசிவ வென்கிலர் தீவினையாளர், சிவசிவ வென்றிடத் தீவினைமாளும், சிவசிவ வென்றிடத் தேவருமாவர், சிவசிவ வென்னச் சிவகதிதானே" என்று திருமந்த்ரத்தில் கூறியிருக்கிறார்.

அக்னிஹோத்ராதி கர்மாக்களைக் காட்டிலும் சிவலிங்கார்ச்சனை மிகவும் உயர்ந்தது. இதை

अग्निहोत्राश्च वेदाश्च यज्ञाश्च बहुदक्षिणाः ।
शिवलिङ्गस्यार्चनैते कोटयाशेनापि नो समाः ॥

என்றும் காரணாகமத்தில்

सर्वयज्ञतपोदानतीर्थदेशेषु यत्फलम् ।
तत्फलं कोटिगुणितं शिवलिङ्गार्चनाफलम् ॥

ஸமஸ்தமான யாகம், தபஸ், தீர்த்தாடனம் க்ஷேத்ரவாஸம் முதலியதால் கிடைக்கும் பலனை காட்டிலும் சிவலிங்கார்ச்சனை

யானது கோடி மடங்கு அதிகம் பலனைத் தரவல்லது. ஆகையால் நாம் நற்கதியடைய சிவனை தியானம் செய்வது, பூஜிப்பது, ஜபிப்பது அவசியம் என்று ஆகிறது. இவைகளைச் செய்யும் வழிகளை கூறி யுள்ளது சிவாகமங்கள். ஆகையால் தான் ஸாக்ஷாத் ஸ்ரீ அம்பிகையும் இந்த காஞ்சி மாநகரத்தில் மா விருக்ஷத்தின் கீழ் சிவனை ஆகமப்படி பூஜித்திருக் கிருர்கள். இதைக் காஞ்சி புராணத் தில் "எண்ணிலாகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும், உண்மையாவது பூசனை யென உரைத்தருள, அண்ணலார்தமை அர்ச்சனை புரிந்து ஆதரித்தாள். பெண்ணி னல்லவளாயினப் பெருந்தவக் கொழுந்து" என்றிருப்பதைக் காணலாம். ஆதலால் நமக்கு ஆகமங்கள் அத்யாவசியமானவை என்ருகிறது.

அடுத்தபடி இந்த ஆகமங்கள் யாரால், எதற்காக எப்படி தோற்றுவிக்கப்பட்டன என்பதைப் பார்ப்போம்.

சர்வேச்வரருனவர் சிவதீக்ஷாஸம்பன்னர் களுக்கு சாலோக, சாமீப, ஸாரூப, பதவிகளைக் கொடுக்கின்ற சரியை, கிரியை, யோகம் என மூன்றும் ஸாயுஜ்யத்தைக் கொடுக்கின்ற ஞானபாதம் ஆக நான்கு பாதங்களை அறிவிக்கும் நிமித்தமாகவும், அறம், பொருள், இன்பம், வீடு என்ற சதுர்வித புருஷார்த்தங்கள் சித்தியாவதின் பொருட்டும், நயனம், ஸபர்சம், வாசகம், பாவனை, சாஸ்த்ரம், யோகம், ஔத்ரீ என ஏழுவித தீக்ஷைகள் 'கர்ஷணுதி ப்ரதிஷ்டாந் தம், பிரதிஷ்டாத்யுத்ஸவாந்தம். உத்ஸவாதி ப்ராயச்சித்தாந்தம்,' ஆக இந்த க்ரியைகள் நடைபெறுதற் பொருட்டும் திருவுளம் பற்றிய காமிகாதி சித்தாந்த சாஸ்திரங்களே ஆகமங்கள் எனப்படும்.

ஆகமம் என்பது கௌணமாக சைவா கமம் இருபத்தியெட்டையே குறிக்கும்.

இந் நூல்கள் சிவபெருமானுல் அவரது ஸகளத் திருமேனியாகிய சதாசிவமூர்த்தி யின் வக்த்ரங்களில் நின்றும் 28 ஆகமங்கள் தோன்றின. அவை வருமாறு. "காமிகம், யோகஜம், சிந்த்யம், காரணம், அஜிதம், தீப்தம், ஸூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான் சுப்ரபேதம், விஜயம், நிச்வாஸம், ஸ்வாயம் புவம், அனலம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரக்ஞானம், முகபிம்பம், ப்ரோத்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், ஸர்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம்" என்பன. இவைகளுள் 10 சிவபேத என்றும், 18 ருத்ரபேதம் என்றும் சொல்லப்படும். அதாவது சதாசிவமூர்த்தி யின் வாயிலாக சிவபேதமுடைய ப்ரணவர் முதல் சசி இறுதியாக 30 பேர். காமிகம் முதல் சுப்ரபேதம் வரையில் 10 ஆகமங் களையும், ருத்ரபேதமுடைய அநாதி ருத்ரர் முதல் மஹாகாளர் வரையில் 36 பேர் விஜயாகமம் முதல் வாதுளாகமம் வரையில் 18 ஆகமங்களையும் கேட்டுணர்ந்தனர். ஆக 28 ஆகமங்களையும் 66 பேர் கேட்டுத் தெளிந்துணர்ந்தனர். இதை திருமூல நாயனுர் அருளிய திருமந்திரத்திலும் "அஞ்சனமேனியரிவையோர் பாகத்தன், அஞ்சோடிருபத்துமூன்றுள வாகமம், அஞ்சலி கூப்பி அறுபத்தருவரும்" அஞ்சா முகத்தலரும் பொருள் கேட்டதே, என்று கூறியிருப்பதைக் காணலாம். இதன் உபாகமங்கள் 207 ஆகும்.

ஆகமங்களில் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்கு பாதங்கள் உள்ளன.

அவைகளில் முதலாவ்தான சரியாபாதத் தில் வர்ணுச்ரம தர்மங்களின் அனுஷ் டானம், பூஜா ஸாமக்ரியைகளை ஸம்பாதிக்

கும் வழி, தானம், பரமேச்வரனை பரிசரணை செய்யும் வழி இவைகள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாவதான கிரியா பாதத்தில் சமயம், விசேஷம், முதலிய சிவதீக்ஷைகள். சிவாலயம் கட்டுவது, சிவலிங்கம் நிர்மாணம் செய்வது. பேரம் (தேர்) கட்டுவது முதலிய சில்பங்களின் லக்ஷணங்களும் அவற்றிக்குரிய காலங்களும், பூமியை உழுவது முதல், தேவதா ப்ரதிஷ்டை வரையில், பிரதிஷ்டையிலிருந்து உத்ஸவம் முடிய உத்ஸவத்திலிருந்து ப்ராய்ச்சித்தம் வரையிலுள்ள க்ரியாகலாபங்களும் இதர பல விஷயங்களும் நிருபிக்கப்பட்டிருக்கின்றன.

மூன்றுவதான யோக பாதத்தில் யமம், நியமம் முதலிய அஷ்டாங்க யோகங்களின் லக்ஷணங்கள், ஆத்மாவில் சிவஸ்வரூப ஞானம், சிவபாவனை, சிவயோகம் முதலியவை நிருபிக்கப்பட்டிருக்கின்றன.

நான்காவதான ஞான பாதத்தில்-பதி, பசு, பாசம் என்கிற மூன்று பதார்த்தங்கள் நிருபிக்கப்படுகின்றன. பதி என்றால் பரமசிவன். தனக்கு வேறுபடாத சக்தியுடன் கூடியவர். சகல உலகிற்கும் காரணமானவர். பாசங்கள் ஆணவமலம், மாயா, கர்மம், பிந்து, திரோதாயி என்று ஐந்து விதமானவை. இந்த பாசங்களால் கட்டப்பட்ட ஜீவர்கள சிவஸ்வரூபத்தை அறியாது ஸம்ஸாரத்தில் கஷ்டப்படுகின்றனர். சிவ ப்ரஸாதத்தால்தான் சிவ ஞானத்தை அடைந்து நற்கதியடைய முடியும். ஆகமங்களில் சொல்லியபடி சரியை, கிரியை, யோகம் இவைகளை அனுஷ்டித்தால்தான் சிவபிரஸாதம் கிடைக்கும். ஆகையால் சிவனை பூஜை செய்ய வேண்டியது அவசியம். இந்த பூஜை இரண்டு விதமாக கூறப்பட்டிருக்கிறது. ஒன்றுதான் நற்கதியடைய வேண்டி சிவதீக்ஷை பெற்றுக் கொண்டு' க்ஷணிகலிங்கங்கள், சலலிங்கம், ஸ்தண்டிலம், மண்டலம், இவைகளில் ஏதாவது ஒன்றில் தன்னுடைய பயனைக் கருதி பூஜிப்பது. இது ஆத்மார்த்த பூஜை எனப்படும். மற்றொன்று லோகமும், லோகத்திலுள்ள ஜீவராசிகளும் பிரஜைகளும் ராஜனும் க்ஷேமமடைய வேண்டி கிராமம், பட்டணம், ராஜதானி முதலான இடங்களில் உள்ள ஆலயங்களில் ஸ்வயம்பு, தேவிகம், திவ்யம், மானுஷம், ஆர்ஷகம், ராக்ஷஸம், பாணம் என ஏழு வகைப்பட்ட லிங்கங்களில் ஒன்றில் ஸர்வேச்வரனால் தீக்ஷிக்கப்பட்டவர்களான சிவப்ராம்ஹணர்கள் எனப்படும் ஆதி சைவர்களாகிய சிவாசார்யர்களைக் கொண்டு பூஜிப்பது. இது பரார்த்த மெனப்படும். சிவதீக்ஷை பெற்றுக் கொண்ட அனைவர்களும் ஆத்மார்த்த பூஜை செய்ய அதிகாரிகளாவார்கள். ஆதி சைவர்களாகிய சிவாசார்யர்கள் ஆத்மார்த்த பூஜையுடன் பராத்த பூஜை செய்ய அதிகாரம் உடையவர்கள் இப்படி செய்யும் பரார்த்த பூஜையானது ஆகம விதி தவறாமல் பூஜை செய்யப்படவேண்டும். இதற்கு ஆலயங்களின் அர்ச்சகர்களும், பரிபாலகர்களாகிய அறங்காவலர்களும், இறைபணியாளர்களும் மிகவும் பொறுப்புள்ளவர்களாவார்கள்.

அதற்கு அந்தந்த ஆலயங்களின் அர்ச்சகர்களும், பரிபாலகர்களும், கருத்து வேற்றுமைகள் இல்லாமல் ஒருமித்த மனத்துடன் இருந்து ஆகமவிதிப்படி பூஜைகள் நடத்தி லோகத்தையும், பிரஜைகளையும், அரசாங்கத்தையும், சௌக்யத்தில் நிலைக்கச் செய்யவேண்டுமாறு வேண்டிக் கொள்கிறேன்.



இதுவரை மூன்று சதஸுகள் நடந்தேறியிருக்கின்றன. மூன்றாண்டுகளுக்கு முன் இளையாத்தாங்குடியில் துவக்கப்பட்ட இந்த ஆகம சில்ப புராதனக் கலைவிழா நாட்டில் ஒரு புது விழிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இளையத்தாங்குடி—1962



நாராயணபுரம் (மதுரை)—1963

காஞ்சிபுரம்—1964



புதுப் பெரியவர்கள் ஸ்ரீ காமகோடி பீடாதி பதிகள் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமி களுக்கு மாலையிட்டு மரியாதை செய்கிருர்கள்.



காஞ்சிபுர சதஸ் துவக்க விழா

சென்னை கவர்னர் ஸ்ரீ ஜயசாமராஜ உடையாருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்து அளிக்கப்படுகிறது.



துவக்க விழாவில் கலந்து
கொண்டவர்களில் ஒரு பகுதி



மேடையில் சென்னை கவர்னரும்
முதலமைச்சரும்.

வரவேற்புக் கமிட்டித் தலைவரான
திரு பச்சையப்ப முதலியார்
வரவேற்புரையை
வாசிக்கிறார்.



விவாதத்தில் கலந்துகொண்ட சிவாசாரியர்களும்......

முதல் நாள் ஊர்வலத்தில் ஆகம, சில்ப பாரத ஓலைச்சுவடிகள் யானைகளின் மீது பவனிவந்த காட்சி.



வைஷ்ணவ பட்டாசாரியர்களும்.

ஊர்வலத்தில் பங்குகொண்ட பல பஜனை கோஷ்டிகளில் ஒன்று

வைகானஸம்

1. நான்கு வேதங்களையும் அத்யயனம் செய்தவர்கள் :—

2. பகவான் வேதவ்யாஸர் அகண்டமான அனேக சாகைகளுடன் கூடிய வேதத்தை ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணமென்ற பெயரில் நான்காகப் பிரித்தார். இதற்கு முன் வேதம் அனேக சிகரங்களோடு கூடிய பருவதம் போல் இருந்தது. பிறகு இவைகளை நான்கு சிஷ்யர்களுக்கு அத்யயனம் செய்வித்தார். காலவர் என்பவர் ருக்வேதத்தை தையும், குசாக்ரதீ என்பவர் யஜுர் வேதத்தையும், ஜைமினி என்பவர் ஸாம வேதத்தையும், ஸுமந்தரென்பவர் அதர்வணவேதத்தையும் ஸ்ரீ பகவான் வேதவ்யாஸரிடமிருந்து அத்யயனம் தார்கள்.

2. நான்கு வேதங்களையும் அனுஸரித்த ஸூத்திரங்கள் :—

ருக்சாகையை அனுஸரித்த ஸூத்திரங்கள் மூன்று (3) யஜுச்சாகையை அனுஸரித்த ஸூத்திரங்கள் பதினைந்து (15) இந்த பதினைந்தில் வைகாநஸ பரத்வாஜ - ஸத்யாஷாட -சாகல—ஆபஸ்தம்ப-போதாயன மென்ற ஆறு ஸூத்திரங்களும் வைகாநஸத்தை அனுஸரித்த தாக இருப்பதால் இந்த ஆறும் சேர்ந்து ஒன்ருகக் கருதப்படுகிறது. ஆக யஜுச் சாகானுஸாரியான ஸூத்திரங்கள் 10, ஸாமசாகையை அனுஸரித்த ஸூத்திரங்கள் இரண்டு (2), அதர்வசாகையை அனுஸரித்த ஸூத்திரங்கள் மூன்று (3) ஆகமொத்தம் பதினெட்டுஸூத்ரங்கள்.

3. பதினெட்டு ஸூத்ரங்கள்:—

போதாயனீயம் - ஆபஸ்தம்பீயம்-ஸத்யாஷாடம் - கார்கேயினம் - ஆகஸ்த்யம்-சாகல்யம்-ஆச்வலாயனம் - சாம்பவீயம்-காத்யாயனம்-இந்த ஒன்பதும் பூர்வ ஸூத்திரங்கள் எனப்படும். இவைகள் சரீர ஸம்பந்தமான கர்மாக்களை மாத்திரம் சொல்பவை. வைகாநஸீயம்-செளநகீயம் - பாரத்வாஜம் - யாக்ஞவல்க்யம்-ஜைமினீயம் - வாதூலம்-மாத்யந்தினம்-கௌண்டின்யம் — கௌசிகீயம் - இந்த ஒன்பதும் அபரஸூத்ரங்கள். இவைகள் சரீர ஸம்பந்தமானதும் தேவ ஸம்பந்த மானதுமான காரியங்களைச் சொல்லக் கூடியவை.

4. வைகாநஸ சாகை :—

வைகாநஸ ஸூத்ரம் யஜுர்வேத சாகையை அனுஸரித்ததாக இருந்தாலும் இது வேதங்கள் பிரிக்கப்படாத காலத்திலேயே உண்டானபடியால் இந்த வைகாநஸ ஸூத்ர யஜுர்வேத வேதவ்ருக்ஷத்திற்கு நான்கு வேதங்களும் கிளைகளாக அமைந்துள்ளன. அதாவது இந்த ஸூத்திரத்தில் யஜுர் வேத மந்திரங்கள் அதிகமாக இருப்பதோடு மற்ற ருக்-ஸாம-அதர்வ வேத மந்திரங்களும் உள்ளன. ஆக இதற்கு வைகநஸ சாகை என்றே பெயர். இதை ஔகேய சாகை என்றும் சொல்லுவர்.

5. மூன்று வித ஆராதனம் :—

மானஸம் - வாசிகம்—காயிகம் என்று மூன்று விதமான ஆராதனம் சொல்லப்பட்டிருக்கிறது. காயிகமென்பது அமூர்தம்-ஸமூர்த மென்று இரண்டு விதம்.

6. வாசிகம்-அமூர்தம்-ஸமூர்தம் :—

ருக்யஜுஸ்ஸாம மந்திரங்களாலே பகவானை தியானித்து (வாய்விட்டுச் சொல்லி)ஸ்தோத்திரம் செய்வது வாசிக மெனப்படும். வேதாத்யயனம் வேத பாராயணம் முதலியன எம்பெருமானை தியானித்து ஸாங்கமான அக்னி

ஹோத்ராதி ஹேமாங்களில் எந்த ஹவிஸ்ஸு முதலியன அக்னியில் ஹோமம் செய்யப்படுகிறதோ அது அமூர்தமான ஆராதனம். பாத்ய ரஸனுதி உபசாரங்களாலும் புஷ்பம் முதலிய பூஜாதிரவ்யங்களாலும் எந்த பிம்பத்தி னிடத்தில் பூஜை செய்யப்படுகிறதோ அது ஸமூர்தாராதன மெனப்படும்.

7. ஆராதனம் இரண்டுவிதம் :—

பகவானின் ஆராதனம் ஸ்வார்த்தம் பரார்த்தம் என்று இரண்டுவிதம். க்ரு ஹார்ச்சை ஸ்வார்த்தமென்றும், ஆல யார்ச்சை பரார்த்தமென்றும் சொல்லப் பட்டது.

8. ஸூத்ரவைலக்ஷண்யம் :—

மற்ற எல்லா ஸூத்ரங்களிலும் ஸ்வார்த்தமான க்ருஹார்ச்சையு மட் டும்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனுல் வைகானஸ ஸூத்திரத்திலோ ஸ்வார்த்தமான க்ருஹார்ச்சையும் பரார்த்தமான ஆலயார்ச்சையும் சொல் லப்பட்டிருக்கிறது.

9. பூஜாபலம் :—

இந்த வைகாநஸாராதனத்திற்கு வைதிகாராதனம் என்று பெயர். இது இந்த ஜன்மாவிலேயே மோக்ஷத்தை அளிக்ககக்கூடியது. இந்த ஜன்மத்தின் முடிவில் விஷ்ணு ஸாயுஜ்யத்தை விரும்புகிறவர்கள் வைகாநஸ விதிப்படி தங்கள் கிராமத்தில் விஷ்ணுவை பிரதிஷ்டை செய்வித்து, வைகாநஸவிப் ரச்ரேஷ்டர்களாலே பகவானுக்கு ஆரா தனத்தைச் செய்வித்து இந்த ஜன்மத் தில் வர்ணுச்ரம பலனை அடைந்து தேவ ராவஸானத்தில் எம்பெருமானின் பரம பதத்தை அடைகிருர்கள். இந்த ஆரா தனத்திற்கு இஹலோக பரலோக பலன்கள் உண்டு.

10. அர்ச்சகஸ்ருஷ்டிக்கு ஆதேசம் :

நான் அர்ச்சாவதார ரூபமாக இந்த பூலோகத்தில் பூமிதேவியுடனும், லக்ஷ்மி தேவியுடனும் அவதரிக்கப் போகிறேன். ஆகவே ஸ்ருஷ்டிக்ரமத்திற்கு முன் முதலில் என்னை அர்ச்சிப்பதற்காக முனிச்ரேஷ்டரை ஸ்ருஷ்டி செய்யும் என்று எம்பெருமான் பிரம்மாவுக்கு ஆதேசித்தார்.

11. பிரம்மாவின் இயலாமை :—

பிரம்மா ஸ்வாமியின் ஆதேசப்படி அடி யேனுல் முனிச்ரேஷ்டரை ஸ்ருஷ்டிக்க முடியவில்லை என்று விஷ்ணுவிடம் விக்ஞாபித்துக்கொண்டார்.

ஸ்ரீ விகனஸ ஸ்ருஷ்டி : —

பிறகு பகவான் சிந்தித்து தன் ஆரா தனத்தில் ஆஸக்தியுள்ள முனிச்ரேஷ் டரை ஸ்ருஷ்டித்தார். பகவான் தன் ஹிருதய கமலத்திலேயே வேதவேதாந்த தத்வ மீமாம்ஸைகளை கனனம் செய் தார். அதாவது நன்கு ஆழ்ந்த முறை யில் வேதாந்தார்த்த விசாரங்களைச் செய் தார். இந்த நிலையில் பகவானின் ஹிரு தய கமலத்திலிருந்தே பகவானின் அம்சமாகவே முனிச்ரேஷ்டர் உண் டானுர். அவர் ரூபலக்ஷணஸௌந்தர் யத்துடனும், திவ்ய தேஜோமயமான சரீரத்துடனும், சுத்தஸத்வ குணத்துட னும், ஸாக்ஷாத் முனிவேஷத்துடனும், சங்கம், சக்ரம், வரதம், அபயம் இவை களுடன் கூடிய சதுர்புஜத்துடனும், தர் மாஸனத்தில் உட்கார்ந்தவராயும், ஊர்த் வபுண்ட்ரதாரணத்தால் பவித்ரராயும், கிரீடம் ஹாரம் குண்டலம் தோள்வளை முதலிய ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவராயும், சிகை, யக்ஞோபவீதம் த்ரிதண்டம் இவைகளுடன் விளங்குபவ

ராயும், அபயஹஸ்தத்தில் பத்மத்தை தரித்தவராயும், விளங்கினர். பகவான் தானே ஆத்மாவை புத்ரநாமாஸீத் என்ற முறையில் முனிச்ரேஷ்டராகத் தோன்றினார்.

நாமகரணம் :—

இப்படித் தோன்றிய முனிச்ரேஷ்டர் அஞ்சலியத்தராக பிரணமித்து எதிரே நிற்கின்றார். பகவான் அவரைப் பார்த்து நீர் என் ஔரஸபுத்திரன். என் மனஸ்ஸில் விசேஷமாக கனனம் செய்து நீர் உண்டானபடியாலே உமக்கு விகனஸர் என்றே பொருளுள்ளதாக (அன்வர்த்தமாக) பெயரைச் சூட்டுகின்றேன் என்று சொல்லி நாமகரணம் செய்தார் பகவான்.

அத்யாபனம் :—

பகவான் விகனஸருக்கும் பிரம்மாவுக்கும் எல்லா வேதங்களையும் தானே உபதேசித்தார். பகவான் முதலில் விகனஸருக்கு ஸாவித்ரீயை நன்கு உபதேசித்தார். த்வயம், மூலமந்திரம் முதலிய மோக்ஷப்ரதமான எல்லா மந்த்ரங்களையும் எல்லா சாஸ்திரங்களையும் உபதேசித்தார். வேதவிபாகத்திற்கு முன்பு இருந்த நிகிலவேதஸம்மிலிதமான ஸ்ரீ வைகாநஸசாகையை முதலில் முனிச்ரேஷ்டருக்கு அத்யயனம் செய்வித்தார்.

பிரம்மாவுக்கு முந்தியவர் :-

பக்தவத்ஸலரான பகவான் பிரம்மாவைப் பார்த்து விகனஸமுனிச்ரேஷ்டரை உமக்கு அக்ரஜராக அதாவது மூத்தவராக அறியும் என்று சொன்னார். அதற்கு காரணம் கூறுகின்றார்.

பூஜ்யத்வம் :-

அப்ராக்ருதமான சரீரத்தை உடைத்தாயிருப்பதாலும், என் ஆக்ஞையை பரிபாலிப்பதாலும், என் ஔரஸபுத்திரரானபடியாலும், ஸதா என் கைங்கரியங்களையே செய்வதாலும், என் அம்சமாவே தோன்றியதாலும், ஸ்ரீ விகனஸ முனிச்ரேஷ்டர் எப்பொழுதும் பூஜிக்கத் தகுந்தவர்.

11. இதரமுனிகளின் ஸ்ருஷ்டி:-

விகனஸரே நீர் என் ஆராதனத்திற்காகவே ஸ்ருஷ்டிக்கப்பட்டீர். உமக்கு ஸஹாயகர்களாக இதர முனிச்ரேஷ்டர்களையும் நீரே ஸ்ருஷ்டித்துக் கொள்ளும் என்று பகவான் ஸ்ரீ விகநஸருக்கு ஆக்ஞாபிக்க ஸ்ரீ விகநஸர் பிருகு, அத்ரி, வஸிஷ்டர், மரீசி, ஜமதக்னி, காச்யபர், விச்வாமித்ரர், பரத்வாஜர், கௌதமர், முதலிய விஷ்ணுவாராதனத்தில் ஆஸக்தியுள்ள இதர முனிச்ரேஷ்டர்களை ஸ்ருஷ்டித்தார்.

12. இதர முனிகளுக்கு உபதேசம்:-

பகவான் விகனஸரைப் பார்த்து உம்மால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட உம்முடைய பிள்ளைகளுக்கு நீரே பிதா குரு ஆகையால் நீரே அவர்களுக்கு ஸாவித்ரீ த்வயம் மூலமந்திரம் முதலிய ஸாக்ஷாத் மோக்ஷப்ரதமான மந்திரங்களை உபதேசம் செய்யும் என்று ஆக்ஞாபித்தார். ஸ்ரீ விகநஸரும் அவ்வாறே ப்ருக்வாதி முனிவர்களுக்கு உபதேசித்தார்.

13. பிரம்மாவின் ஆராதன சங்கை :-

இப்படி இருக்கையில் பிரம்மா பகவானிடத்தில் விக்ஞாபித்தார். "சராசரங்கள் உம்முடைய அரச்சனமில்லாமல் பாபத்தில் லீனமாகிக்கொண்டு வருகிறது. ஆகவே நான் பூமியில் உமது அர்ச்சனத்தை எப்படிச் செய்வேன்."

14. விகனஸருக்கு ஆராதனோபதேசம் :—

பகவான் அதற்குவேண்டிய ஏற்பாட்டைதான் செய்வதாக பிரம்மாவிற்குச் சொல்லி யனுப்பினர். பிறகு பகவான் விகநஸரைப் பார்த்துச் சொன்னர். "நீர் என் அர்ச்சனத்திற்காகவே ஸ்ருஷ்டிக்கப்பட்டீர். லோகானுக்ரஹத்திற்காக உம்மாலேயே என் அர்ச்சை செய்யத் தகுந்தது. ஆத்மார்த்தமாக க்ருஹத்திலோ பரார்த்தமாக தேவாலயத்திலோ நித்யநைமித்திகமான என்னுடைய ஆராதனங்களை நீரே செய்யும்.

15. கர்மானுஷ்டானத்தில் காலவைபரீத்யமின்மை :—

ஹே பகவன் தேவருடை கைங்கரியத்தில் ஈடுபட்டு ஆலய ஆராதனம் செய்தால் எனக்கு ஸ்வகர்ம லோபம் ஏற்படுமே, கர்மங்களுக்கு வைபரீத்யம் ஏற்படுமே என்று ஸ்ரீ விகநஸர் வினவ பகவான் சொன்னர். "முனிச்ரேஷ்டரே கர்மலோபாபாயம் உமக்கு வேண்டாம். என் கைங்கரியத்தில் ஈடுபட்ட உம்முடைய கர்மாக்கள் எப்பொழுதும் பூர்ணமானவைகளே. என் ஆக்ஞையாலே உம்முடைய வம்சஸ்தர்களான முனிச்ரேஷ்டர்களுக்கும் அப்படியே ஆகட்டும், உமது வம்சத்திலுதித்த எல்லா கர்ப்ப வைஷ்ணவர்களுக்கும் அப்படியே ஆகட்டும். என்னுடைய கைங்கரிய வேளையில் கர்மா ஆரம்பமானல் ஆராதனத்திற்கும் பிறகு அந்த கர்மா செய்யப்படவேண்டும். காயபேதத்தால் அக்கர்மாவுக்கு தோஷமில்லை."

16. நிகில மந்த்ரோபதேசம் :—

என்று சொல்லி பகவான்தானே ஸ்ரீ விகநஸ முனிவருக்கு தைவிக மானுஷிகமான கர்மாக்கள், நிகிலவேதசாஸ்திரங்கள், நிகில மந்த்ரங்கள் எல்லாவற்றையும் உபதேசித்தார். பகவான் சொன்னர். "ஆகமங்களின் ரஹஸ்யங்கள், மூலமந்திரங்கள் இவைகள் உன்னல் சொல்லப்பட்டவை, வைகாநஸஸூத்ரம் என்று கருதப்படும். நிவேகம் முதல் ச்மசானந்தமான மானுஷகர்மாவும். கர்ஷணுதி உத்ஸவாந்தமான தைவிக கர்மாவும் என்னல் சொல்லப்பட்டது. அவைகளையும் நீர்ஸூத்ரரூபமாக இயற்றவும்."

17. நைமிசாரண்ய அவதாரம் :—

பகவான் விகநஸரைப் பார்த்துச் சொன்னர். "பூலோகத்தில் தபஸுக்கு மூலமாகவும் உத்தமமாகவும் பிரஸித்தி பெற்றதாகவுமுள்ள நைமிசாரண்யத்தில் நீர் அவதரியும், நான் அங்கு நரநாராயணர்களாக அவதாரம் செய்கின்றேன். அங்கு என்னை ஆராதனம் செய்யும். தைவிக மானுஷிகமான மஹத்தான லோகஹிதமாந வைகாநஸஸூத்ரத்தை சிஷ்யர்களோடுகூட அங்கு நீர் செய்யும். பூலோகத்தில் எங்கெல்லாம் அர்ச்சாவிக்ரஹரூபமான நான் வஸிக்கிறேனே அங்கெல்லாம் உம்முடைய ஸூத்ரஸ்தர்கள் என்னை ஆராதிக்கட்டும்."

18. நைமிசாரண்ய அவதார காலம்:—

ஸ்ரீ விகநஸமுனிச்ரேஷ்டர் ஸ்வாயம்புவமனுவின் காலத்தில், க்ருதயுகத்தில், சுக்ல நாம ஸம்வத்ஸரத்தில், சிராவண மாஸத்தில், சிரவண நக்ஷத்திரத்தில், பூர்ணிமை திதியன்று, ஸோமவாஸரத்தன்று, ஸிம்ஹலக்னத்தில் நைமிசாரண்யத்தை அடைந்தார்.

19. விகநஸஸூத்ரஸங்க்யை :—

ஸ்ரீ விகநஸமஹரிஷியினலே நிஷே

காதி ச்மசாஹுந்தமான மாஹுஷகர்மாக்களும், கர்ஷணுதி உத்ஸவாந்தமான தைவிககர்மாக்களும் முப்பத்திரெண்டு பிரச்னங்களடங்கிய ஸூத்ரமாகச் செய்யப்பட்டது. இப்படி விகநஸரால் அருளப்பட்டஸூத்ரம் ஒன்றறைகோடி பிரமாணமுள்ளது. (ஒன்றறைகோடி கிரந்தமுள்ளது)

20. பிருகு முதலியவர்களால் செய்யப்பட்ட க்ரந்த எண்ணிக்கை :—

குருவாகிய ஸ்ரீ விகநஸ மஹரிஷியிடமிருந்து எல்லாவற்றையும் கேட்டு ஸங்கிரஹமாக மரீசி 184000 ம், ப்ருகு 64000–ம் அத்ரி. 88000-ம் காச்யபர்-64000ம் கிரந்தங்களாக செய்தார்கள். ஆக நான்கு லக்ஷம் க்ரந்தகளாகச் செய்தார்கள்.

21. பூஜைக்கு அர்ஹத்வமும் அனர்ஹத்வமும் :—

பிரம்ஹா நான்முகஞக இருப்பதாலும், சிவன் முக்கண்ணஞக இருப்பதாலும், இந்திரன் ஆயிரம் கண்ணஞக இருப்பதாலும், வஸிஷ்டாதி தபஸ்விகள் யோனிஜர்களாக இருப்பதாலும் இவர்களெல்லா தேவர்களும் என்னுடைய பூஜாவிதியில் அனர்ஹர்கள். விகநஸரைத் தவிர வேறு யாரும் அர்ச்சைக்கு அருஹதையற்றவர்கள். என்னுடைய மனது எப்பொழுதும் விகநஸரிடத்தில் ஈடுபடுவதால் விகநஸரே என் பூஜைக்கு அர்ஹர் என்று பகவான் சொன்னர்.

22. விகநஸரின் சிறப்பு:—

பகவான் சொல்லுகிருர், லோக ரக்ஷார்த்தம் ஸ்ரீ விகநஸர் என்னுடைய ஹிருதயத்தில் என்னுடைய அர்ச்சைக்காக என்னல் ஸ்ருஷ்டிக்கப்பட்டார். அந்த விகநஸராலே அந்த தேவர்கள் என்னை ஆராதிக்கச் செய்யட்டும். என் ஹிருதயத்திலிருந்து உண்டானமையாலும், என் ஆக்ஞைக்குவசமாக இருப்பதாலும், எனக்குப் பிரியராக இருப்பதாலும், எனக்குப் பிள்ளையாக இருப்பதாலும், விகநஸர் சிறந்தவர் ஆச்வமேதிகபர்வாவில் பகவான் சொல்லுகிருர். "அரச மரம், கபிலகோ, துளஸி, விகநஸ மஹரிஷி, இந்த நான்கும், ஹே அரசனே! எனக்குப் பிரியமானவைகள். இவைகளில் ஸ்ரீ விகநஸமஹரிஷி சிறந்தவர்.

23. வைகாநஸனுக்குத் தோஷமின்மை:—

வைகாநஸ குலத்துதித்தவன் நல்ல யோக்யஞகவோ, அயோக்யஞகவோ இருந்தாலும். துளஸியும் பில்வமும் உலர்ந்திருந்தாலும் ஈரமாக இருந்தாலும் எப்படி தோஷத்தை அடைவதில்லையோ அப்படி இவனும் தோஷத்தை அடைவதில்லை.

24. வைகாநஸனின் பாவஸத்வம் :– (சரிசுத்தம்)

வைகாநஸன் ஆதி வைஷ்ணவன். வேதத்திற்கு எப்படி முதலில் பிரணவம் உள்ளதோ அப்படி வைகாநஸன் வைஷ்ணவர்களின் முதன்மையானவன். இரண்டும் விஷ்ணு ஸ்வரூமானவை. இவைகள் மிகவும் பரிசுத்தமானவைகளாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

25. பகவச் சாஸ்திரத்வம்:—

வைகாநஸ சாஸ்திரம் விஷ்ணு ஸம்பந்தமானது. விஷ்ணுவின் வாயிலிருந்து முதலில் உண்டானது. முதலில் பகவானுல் விகநஸ மஹரிஷிக்கு சொல்லப்பட்ட சாஸ்திரம். ஆகையால் உலகத்தில் ஸ்ரீ வைகாநஸ சாஸ்திரமானது

பகவச் சாஸ்திரம் என்று கருதப்படு கிறது. இதற்கு சாஸ்திரம் என்றும் பெயருண்டு.

26. வைகாநஸ மஹத்வம்:—

விஷ்ணுவை அர்ச்சிப்பவர்கள் சாதா ரண மனிதர்களல்ல. அவர்கள் ஸ்வர்க் கத்திலிருந்து நழுவிய தேவர்களே. அத்யாத்ம குணங்களோடு கூடியவனும், யோகத்தை அறிந்தவனும், பரிசுத்த னும், மிகவும் நிர்மலமான ஆத்மாவை உடையவனுமான அர்ச்சகன் பகவானே ஆவான். இதில் ஸம்சயமில்லை.

27. வைகாநஸசுத்தி :-

ஆசாரியன், ஆலயம், பகவத்பிம்பம், பலிபீடம், இவைகள் பகவானின் சரீரம் போன்றவைகள். அர்ச்சகனேவென்றால் எப்பொழுதும் ஸாக்ஷாத் பகவானே யாவான். ஆச்வமேதி கபர்வாவில்-'' வைகானஸன் விஷ்ணுவின்பிள்ளை. எப் பொழுதும் விஷ்ணுவின் ஆராதனத்தி லேயே ஈடுபட்டவன். தங்கத்திற்கு எப்பொழுதும் பரிசுத்தி உள்ளதுபோல அவனுக்கும் எப்பொழுதும் பெரிதும் பரிசுத்தி உள்ளது.'

28. ச்ருதிப்ரமாணம் :-

பிறகு அருணர்கள், கேதுக்கள், வாதர சனர்கள், வைகாநஸர்கள், வாலகில்யர் கள், முதலிய ரிஷிகள் உண்டானார்கள். நகா : துஷ்டேந்திரியர்கள் இல்லாதவர் கள். அநகா : பாபமற்றவர்கள் இது ஆரண்யத்திலுள்ளது.

'தைத்திரீயம் 4 வது காண்டத்தில் முதலில் விகநஸ மஹரிஷியால் ஸாமாக் கள் சொல்லப்பட்டன. மந்த்ரத்ரஷ்டா விகநஸர் என்பது பொருள்.

கர்த்யாயனோபநிஷத்தில் — பிறகு இந்த ஐந்து ரிஷிகள் வைகாநஸர்களா வார்கள். இவர்கள் அநுஷ்டித்தது வைகாநஸ மதம். விகநஸ மஹரிஷி பிரம்மாவுக்கு ஆயுளும் பிராணனாகவும் ஆகிறார்.

சாந்தோக்யோபநிஷத்தில் — கால் நடைகளுக்குள் பசுவும், தேவர்களுக்கு மத்தியில் அதிதியும், ஸ்ருஷ்டிகர்தாக் களுக்குள் பிரம்மாவும், முனிவர்களுக் குள் ஸ்ரீ விகநஸமுனிவரும் கொண்டா டப்படுகின்றார்கள். (அல்லது-பகவான் கால்நடைகளுக்குள் பசுவாகவும், தேவர் களுக்குள் அதிதியாகவும், ஸ்ருஷ்டி கர்தாக்களுக்குள் பிரம்மாவாகவும் முனி வர்களுக்குள் ஸ்ரீ விகநஸ முனிவராகவும் இருக்கிறார்.) அல்லது கால்நடைகளுக்கு பசுவும், தேவர்களுக்கு அதிதியும், ஸ்ருஷ் டிகர்தாக்களுக்கு பிரம்மாவும், முனிவர் களுக்கு ஸ்ரீ விகநஸமுனிவரும் உத்பத் திக்குக் காரணமாக ஆகிறார்கள்.)

ஸீதோபநிஷத்தில்—முதலில் விஷ் ணுவின் ச்ருதிரூபமான வாணீ (பேச்சு) (உபதேசம்) ஸ்ரீ விகநஸமஹரிஷியைக் குறித்து உண்டாயிற்று.

29. பார்கவத்தில் :—

பகவான் தானாகவே ஸ்ரீ விகநஸ மஹ ரிஷிக்கு வைஷ்ணவ மந்திரங்களை ஒன்று சேர்த்து, ஸாங்கமான வேதங்களையும், த்வயம், மூலமந்த்ரங்கள், உபசாரக்ரமம், ஜபஹோம அர்ச்சன த்யானக்ரமம், மானுஷ தைவிகமான எல்லா சாஸ்தி ரங்கள் இவைகள் எல்லாவற்றையும் உபதேசித்தார்.

30. பிரம்மாண்ட புராணத்தில்:—

பகவான் சொல்லுகிறார். யஜுர்வேதத் தில் உம்முடைய பெயராலேயே ஸூத்

திரத்தைச் செய்யும். உம்மால் சொல்லப் பட்ட இந்த ஸூத்திரம் உலகத்தில் ஸ்ரீ வைகாநஸ ஸூத்திரம் என்று புகழை அடையப்போகிறது.

31. பாஞ்சராத்திரத்தில் :—

ஸ்ரீ விகநஸ மஹரிஷி நைமிசாரண் யத்தை அடைந்து முனிக்கூட்டங்களால் ஸேவிக்கப்பட்டவராய், பகவானல் சொல்லப்பட்ட ஆகமத்தை பிறகு நன்கு பார்த்தார். அப்பொழுது அவர் விஸ்தார மாக வேத மந்திரங்களால் துதிக்கப் பட்ட ச்ரௌதமான ஸூத்திரங்களை ஒன் றரை கோடி கிரந்த பிரமாணமான சாஸ் திரமாக இதை உபதேசித்தார். சிஷ்யர் களான ப்ருக்வாதி முனிவர்களாகச்செய் யப்பட்டது. ஆகையால் உலகத்தில் வைதிகாசாரத்தைச் செய்ய விரும்புபவ னுக்கு இந்த சாஸ்திரம்தான் என்று சொல்லப்பட்டது. இதர சாஸ்திரங்கள் வைதிகமாக ஆகாது.

32. காருட புராணம் :—

பகவான் சொல்லுகிருர் ஹே அரசனே வைஷ்ணவ சாஸ்திரத்தைச் செய்து ஸ்ரீ விகநஸ மஹரிஷி பூலோகத்தில் ஆராதித்துக் கொண்டிருக்கிருர்.

33. மற்ற ஸ்ம்ருதிகளில்:—

வைகாநஸ ஸூத்திரத்திற்கும், ச்ரா ம்ணகாக்னிக்கும், பகவான் நாராயண னுக்கும் உள்ள உண்மையை அடைய முடியாது. (அறிய முடியாது). வேதத் திலும், மயமான வைகாநஸ ஸூத்திரத் திலும் எந்த தர்மம் சொல்லப்பட்டதோ அந்த தர்மம் எல்லோராலும் அனுஷ்டிக் கத்தகுந்தது. இதில் யோசிக்கவேண்டிய அவசியமே இல்லை.

34. மனுதர்ம சாஸ்திரத்தில்:—

காலக்ரமத்தில் பக்குவமடைந்து தானு கவே விழுந்த புஷ்பங்கள், மூலங்கள், பழங்கள் இவைகளாலே எப்பொழுதும் காலமஸனம் செய்யக்கூடியவர்கள் வைகாநஸ மதத்தில் உள்ளவர்கள்.

35. வியாஸர் :—

சிலர் மூலங்களாலேயும், சிலர் பழங் களாலேயும் திடமான விரதத்தோடு கால யாபனம் செய்பவர்கள் வைகாநஸ மதத் தில் உள்ளவர்கள்.

36. போதாயனர் :—

யான்ப்ரஸ்த மென்பது வைகாநஸ சாஸ்திரி ஸமுதாசலம்.

37. ஹாரிதர் :—

அரச ச்ரேஷ்டனே! மஹான்கள் பக வானை விஷ்ணுவைச் ச்ரௌதமான விதியினலேயே ஆராதிக்கின்ருர்கள். அவர்களுக்குச் ச்ரௌதமான விதியே விசேஷமானது. ஆகவே அப்படி அந்த ணர்களும் ச்ரௌதமான விதியினலேயே ஆராதனம் செய்கிருர்கள்.

38. விருத்தமனு :—

வேதாந்தத்தை அறிந்த வைகாநஸ ஸூத்ரதஸ்தர்களான அந்தணர்களாலே யக்ஞ புருஷனை விஷ்ணுவை ஆராதிக் கச் செய்வது அரசன் உலகம் இவை களுக்கு ஹிதமளிக்கக் கூடியது.

39. சைவத்தில் :—

ஆயிரம் அந்தணர்களுக்கு மேலுள்ள கிராமத்திலும், பிரம்மாங்கணத்திலும் வைகாநஸஸூத்திரத்தினலே நிஷேகம் முதலிய ஸம்ஸ்காரங்களால் நன்கு ஸம்ஸ்கரிக்கப்பட்டவர்களும், பிருகு முதலியவர்களால் சொல்லப்பட்ட மஹா தந்த்ர மந்த்ரவேதங்களை விவக்ஷிப் பவர்களாயும், எடுக்கப்படாத மந்த்ரக்

கூட்டங்களை உடையவர்களாயும், வேத வேதாந்தங்களின் கரைகண்டவர்களாயும், சிரமமான வேதாத்யயனத்தோடு கூடியவர்களாயும், ஸாங்கோபாங்கர்களாயும், நன்கு ஸம்ஸ்கரிக்கப்பட்டவர்களாயுமுள்ள, வைகாநஸர்களாலே பஞ்சமூர்தி பிரசாரமாக பகவானை பிரதிஷ்டை செய்து ஆராதனம் செய்வது அது வைதிக ஆராதனமாக சொல்லப்பட்டது. இது அரசன் நாடு இவைகளுக்கு அபிவிருத்தியை அளிக்கக்கூடியது.

40. யோக யாக்ஞவல்க்யர் :—

வைகாநஸன் வைதிகமான காரியங்களில் பகவானால் உபதேசிக்கப்பட்ட பிரகாரம் செய்வான். அந்த அந்தணனைப் பார்த்தாலே பார்ப்பவருக்கு எல்லா பாபமும் போய்விடுகிறது.

41. பிரம்ஹ வைவர்த புராணத்தில்:—

முனிவர்களுக்குள் விகநஸ முனிவர் முதல்வராக சொல்லப்படுகிறார். அவரால் செய்யப்பட்ட ஸூத்ரமும் மற்ற ஸூத்ரங்களுக்குள் மிகவும் சிறந்ததாக கருதப்படுகிறது.

42. ஸ்காந்த புராணத்தில் :—

ஸ்ரீ விகநஸ மஹரிஷி ஸ்ரீ வைகாநஸ மஹாசாகையை தன்னுடைய ஸ்ரீ வைகாநஸ ஸூத்ரத்தில் உபயோகித்தார். வேதார்த்த ஆசாரங்களை விபாகர்களாகச் சொல்லியிருக்கிறார்.

43. பத்து விதகாரணங்கள் :-

1. அகில உலகிற்கும் காரண பூதரான ஸ்ரீ விகநஸ மஹரிஷியால் இயற்றப்பட்டது.
2. எல்லா ஸூத்ரங்களுக்கும் முதன்மையானது.
3. பிரதானமான கர்மாக்களில் வேத மார்கத்தை அனுஸரிப்பது.
4. எல்லாக்ரியைகளையும் மந்த்ரத்தோடு கூடியதாக உடைத்தாயிருப்பது.
5. நிஷேகஸம்ஸ்காரம் முதலியனவற்றை உடைத்தாயிருப்பது.
6. பதினெட்டு சரீரஸம்பந்தமான ஸம்ஸ்காரங்களை உடைத்தாயிருப்பது.
7. ஸாங்கமான எல்லா க்ரியா கலஸங்களையும் உடைத்தாயிருத்தல்.
8. மனுமுதலியவர்களால் ஸ்வீகரிக்கப்பட்டிருத்தல்.
9. அகில ஜகத்துக்கும் முக்ய காரணபூதனை ஸ்ரீமந்நாராயணனையே பரதேவதையாக உடைத்தாயிருத்தல்.
10. அந்த ஸூத்ரத்தில் சொல்லிய தர்மத்தை அனுஷ்டிப்பார்களுக்கே பகவானுக்கு மிகவும் பிரியமாக இருப்பதென்பது கிடைத்திருப்பது.

44. பகவானால் ஸ்ரீ விகநஸருக்கு உபதேசிக்கப்பட்டது அனந்தகோடி பரிதமான க்ரந்தங்கள்.

சிவலிங்க லக்ஷணம்

க. சுவாமிநாத குருக்கள், திருவாவடுதுறை

சம்ஹார காலத்தில் சம்ஹாரமும், சிருஷ்டி காலத்தில் சிருஷ்டியும் உண்டாவதினால் லிங்கமென பெயருடையதாயிற்று. இந்த லிங்கமானது பூஜிக்கப்பட்டால் ஸமஸ்த தேவர்களும் பூஜிக்கப்பட்டவராவார்கள். இன்னமும் இது ஸ்ரீ ஸதாசிவனது அடையாளமானதாலும் சிவலிங்கமென கூறப்படும்.

இந்த லிங்கங்கள் சலமென்றும் அசலமென்றும் இருவகைப்படும். இச்சலாசலங்கள் வ்யக்தம், அவ்யக்தம், வ்யக்தாவ்யக்தமென மூவகையாகும். அவைகளுள் அசலமென்பது ஆலயங்களில் ஸ்தாபிக்கப்பட்டு பூஜிக்கப்படுபவைகளாகும். சலமென்பது வீடுகளிலும், ஆலயங்களிலும் பூஜிக்கப்படுபவைகளாகும். ஆலயங்களில் பிரதிஷ்டை செய்விக்கப்பட்டு பூஜிக்கப்படும் அசலங்கள், ஸ்வாயம்புவம், தானே உண்டானவை. தைவிகம்—தேவர்களால் பிரதிஷ்டைச் செய்விக்கப்பட்டது. காணவம்—தேவாஸுர கணங்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜிக்கப்பட்டது. மானுஷம் மனுஷ்யர்களால் பிரதிஷ்டை செய்து பூஜிக்கப்பட்டது எனவாகும்.

பின்னும் இந்த லிங்கம் வ்யக்தம்—ஸோமாஸ்கந்தாதிகள் — ருத்ராம்சமாகவும், அவ்யக்தம் — சிவலிங்கம் ஸதாசிவாம்சமாகவும், வ்யக்தாவ்யக்தம்—முக லிங்கம்—மகேச்வராம்சமாகவும் ஸுப்ரபேதாகமத்தில் கூறப்படும். பின்னுமிந்த, அசலங்களான ஸ்வாயம்புவம், தைவிகம், காணவம் என்ற லிங்கம் நாநாவிதமான ரந்திரங்கள், நிமங்கள் இவைகளுடன் கரடுமுரடாகவும், அதனுடைய அடிபாகங் காணமுடியாததாயும் சங்கு போன்று சிரஸ் உடையதுகள். வைஷ்ணவ லிங்கங்களெனவும், தாமரைப் பூபோன்ற சிரஸ் உடையதுகள் பிரம்ம லிங்கங்களெனவும், வஜ்ராயுதம் போன்ற சிரஸ் உடையவைகள் இந்திர லிங்கங்களெனவும் இரண்டு சிரஸ் உடையது போன்ற லிங்கங்கள் அக்னி லிங்கங்களெனவும், கூடு போன்ற சிரஸ் உடைய லிங்கங்கள் நிருருதி லிங்கங்கௌனவும், கும்பம் போன்ற சிரஸுடைய லிங்கம் வருண லிங்கங்களெனவும் ஆலவட்டம் போன்ற சிரஸுடைய லிங்கம் வாயுலிங்கங்களெனவும், கதாயுதம் போன்ற சிரஸுடைய லிங்கம் குபேர லிங்கங்களெனவும், திருசூலம்போன்ற சிரஸுடைய லிங்கங்கள் ஈசான லிங்கங்களெனவும் கூறப்படும்.

ஆர்ஷ லிங்கமாவது—நீளமாக இருப்பதுடன் பிரும்ம விஷ்ணு பாவங்களில்லாததாயும், அஞ்சலி போன்றும், கோடு துவாரங்களுடன் மேடு பள்ளங்களையுடையதாகவும் தேங்காய்போன்றும் மாறி மாறி அடிபெருத்ததாயும், நுனி பெருத்ததாயும் நடு பெருத்ததாயும் இருக்கும்.

பாண லிங்கமென்பது — ஸ்ரீ ஸதாசிவனாலேயே பூஜிக்கப்பட்டு பாணாஸுரனுக்கு கொடுக்கப்பட்ட இவைகள் ஸ்வயம்புவே ஆகும். அந்த பாணலிங்கங்கள் 14 கோடிகளாகும். அவைகளுள் 3 கோடி லிங்கங்கள் சிவலிங்க மலையிலும், 3 கோடிகள் ஸ்ரீசைலத்திலும், 3 கோடிகள் காளி கர்த்தம் என்ற

ஓடையிலும், மகேந்திர, மகேசுவர மலைகள், நேபாளம், கன்யாதீர்த்தம், கனை யாச்வமம், இந்த ஐந்திடங்களிலும் 5 கோடி களும் உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இப்பாண லிங்கங்கள் அநேக வித உருவ முடையதாகவும் நாநாவித நிறம் பீடமில்லா ததாயும், மத்யஸூத்ர நிறமில்லாதவை களாகவும் இருப்பதோடு, நர்மதா நதியில் உண்டானதுகளாயும். இவை எல்லாவித ஆலயங்களுக்கும் பொருந்துவதாகவுமிருக் கும். இவைகளுள் மஞ்சள் நிறமுடைய கொழுமையுடன் ஷடச்ரமாகவும், வஜ்ராயு தத்தின் அடையாளமுள்ளது. ஐந்திரலிங்க மென்னும் தாம்ரநிறத்துடன் சக்தியாயுதம் போன்றும் அல்லது சக்தியாயுத அடை யாளமுள்ளதும் உஷ்ணஸ்பர்சத்துடன் கூடியதாயும் உள்ள ஆக்னேய பாணம் தேஜோவிருத்தியை கொடுப்பதாகவும், தண்டாயுதம் போன்றதாயும் அல்லது தண் டத்தின் அடையாளமுடையதாயும் கருப்பா கவும் உள்ளது.

யாம்யலிங்கம்—இந்த லிங்க பூஜை சத்ரு நாசத்தை கொடுக்கும். புகை நிறம் கத்தி போன்றது. அல்லது கத்தியின் அடை யாளமுள்ளது. நிருருதி லிங்கமெனவும் இதனுடைய பூஜை சத்ருக்களுக்கு வித்வேஷத்தை செய்யுமெனவும்வெண்மை நிறத்துடன் விருத்தமாயும் பாசாயுத அடை யாளமுள்ளது. வாருண லிங்கம்—இந்த லிங்கத்தை ஜலத்திலிட்டால் அந்த ஜலம் ருசியுடன் சுத்தமாகவும், புகை நிறத்துடன் த்வஜாயுத அடையாளமுள்ளது. வாயு பாணமெனவும் — இப்பாணத்தில் சிரஸில் வில்வத்தை சாற்றினுல் காற்றில்லாத போது கூட அசையும் எனவும், இந்த லிங்க பூஜை சத்ருக்களை விரட்டுமெனவும், தங்க நிறத்துடன் கதை போன்றதும் அல்லது கதாயுத அடையாளமுள்ளது. கௌபேர லிங்கம்—இதை வயலில் வைத்தால் பயிர் விருத்தியைச் செய்யும். பனி, சந்திரன் இவர்களது நிறத்துடன் சூலம் போன்றும் அல்லது சூல அடையாளமுள்ளது. ஐசான லிங்கம்—இந்த லிங்க பூஜை எல்லா ப்ரயோ ஜனங்களையும் செய்யும். சங்கம், சக்ரம், கதை, பத்மம், ஸ்ரீவத்ஸம், ஸ்வஸ்திகம், மத்ஸ்யம், கூர்மம், வராகம் முதலிய அடை யாளமுள்ளவைகள். வைஷ்ணவ லிங்கம் —இதனுடைய பூஜை இஷ்ட ஸித்திகளை கொடுக்கும். செந்தாமரை நிறத்துடன் தாமரைப் பூவின் அடையாளம் உடையது பிராம்ம லிங்கம்—இதனுடைய பூஜையால் புத்ராபிவிருத்தியு முண்டாகும். இவ்வாறு ஐந்தராதிலிங்கங்கள் அவரவர்களது பாண அடையாளங்களால் அவரவர்களது லிங்கங் களாகும். பொதுவாக பாணலிங்கங்களின் லக்ஷணமாவது — பாணலிங்கத்தை பல தடவை நிறுத்தாலும் ஸமனிடையாக இருக் காது. பிரவாகத்தில் விட்டாலும் பின்பு கிடைத்துவிடும். லிங்கமல்லாது சிலையாயின் காணப்படாது.

இந்த லிங்கங்களின் தோஷங்களாவன. கரடு முரடானது, புத்ரதார நாசத்தையும், சற்று அரித்தது போன்றதுகள். கிருக நாசத் தையும், ஒரு பக்கம் சிதைவுற்றது. பசு, பந்து நாசத்தையும், சிரஸில் வெடிப்புள்ளது. வியாதி, மரணம் இவைகளையும் கொடுக்கும். ஆனுல், இவைகள் கிரகஸ்தனுக்கு மட்டுமே. நைஷ்டிகர்களுக்கு எல்லாமே நன்மையா கும். இன்னமும் கீழ்ப்பட்ட ஜாதிகளானுல் பூஜிக்கப்பட்டதும் ஆகாததே. ஆக பழுத்த நாகப்பழம் போன்றதும் அண்ட வடி வாயுமுள்ளதே கிரகஸ்தர்களால் பூஜிக்கத் தக்கது. இவ்வாறு ஸ்வயம்பு வாதிகள் பாணம் ரௌஹம் இவைகளது லக்ஷ ணங்கள் சித்தாந்த சேகரத்தில் கூறப்பட் டுள்ளது. ரௌஹம் என்பது. நதி ஜல

வேகத்தால் தேய்ந்து சுத்தமானதும் மேல் சொன்னபடியும் உள்ளவைகள். இப்பாண லிங்கங்கள் உளுந்தளவு முதல் ஒரு தச்சு முழ அளவு உள்ளதாயுமிருக்கும். இவைக ளுள் மாஷ அளவிலிருந்து விதஸ்தியளவு வரை ஆன்மார்த்த பூஜைக்கும் அதற்கு மேல்பட்ட அளவுள்ள லிங்கள் பரார்த்த பூஜைக்குமாகும்.

மானுஷ லிங்க லக்ஷணமாவது— த்ரிஸூத்ரம் முகுளம் பிரும்ம விஷ்ணு ருத்ர பாகங்கள் இவைகளுடன் கூடியதுகள். ஸ்திரலிங்கமெனவும், பீடத்துடன் மட்டும் கூடிய லிங்கங்கள் சலமெனவும், இந்த ஸ்திரங்களது சதுரமான அடிபாகம் பிரும்ம பாகம், கூர்ம சிலே என்றும், பாத சிலேயிலும் நடு பாகமான எட்டுமடையான விஷ்ணு பாகம் பீடம் வரையும் ருத்ர பாகமான விருத்த பாகம் மட்டும் காணப்படும். இவைகளுள் பிரும்ம பாகம் அலியாகவும் விஷ்ணு பாகம் பெண்பாலாகவும் ருத்ர பாகம் ஆண்பாலாகவும் ஆகும். இதற்குள் விருத்தமான ருத்ரபாகமே பூஜா பாகமும் ஆகும். மேலும் இந்த லிங்கங்கள் $1\frac{1}{4}$ தச்சு முழம் முதல் ஐந்து முழ அளவு வரை பிராம்மணர் முதலியன ஜாதிகளுக்கும் ஆறு ஏழு முழ அளவு லிங்கங்கள் அஸுர ராக்ஷ ஸர்களுக்கும் 8, 9 முழ லிங்கங்கள் தேவர் களுக்குமாகும். பின்னும் $1^{1}/_{4}$ முழ அளவி லிருந்து 3 முழ அளவு வரை உள்ள லிங்கங் கள் கன்யஷமாவும் $3\frac{1}{4}$ முழ அளவுக்கு மேல் 6 முழ அளவுவரையுள்ளது மத்யமலிங்கங் களாகவும் $6\frac{1}{4}$க்கு மேல் 9 வரையுள்ள லிங்கங்கள் உத்தம லிங்கங்களாகவும், $1^{1}/_{4}$ முழம் முதல் 9 முழ அளவு வரை கால் கால் முழங் கூடுதலான அளவுகளால் 33 வித அளவுள்ளதாகவும், ஒரு முழத்திற்கு குறைந்த அளவுள்ள லிங்கங்கள் பரார்த்ததிற் கும் கூடாதென்பதாகும். இவ்வாறு சித்தாந்த ஸாரத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஸ்திரலிங்கங்கள் ஆட்யம், அனுட் யம், ஸுரெட்யம், ஸர்வஸவமம் என நான்கு வகைப்படும். இந்த லிங்கங்களது அளவை 24 பங்கு செய்து பிரம்ம பாகம் $8\frac{1}{2}$ பங்கும், விஷ்ணுபாகம் 8 பங்கு ருத்ரபாகம் $7\frac{1}{2}$ பங்கு கொண்டது. ஆட்ய லிங்கமும், முன் சொன்ன அளவில் பிரும்ம பாகம் $7^{1}/_{4}$ விஷ்ணுபாகம் 8, ருத்ரபாகம் $8^{1}/_{4}$ பங்குள் ளது. அனுட்யலிங்கமும், முன் சொன்ன அளவில் 7 பங்கு பிரம்ம பாகம், 8 பங்கு விஷ்ணு பாகம், 9 பங்கு ருத்ர பாகம் ஸுரேட்ய லிங்கத்துக்குமாகும். மூன்று பாகமும் ஸமமாக செய்விக்கப்படுவது ஸர்வ ஸமம் ஆகும். இவைகளது அகலமாவது— நீள அளவு 16ல் ஆட்யத்திற்கு 6 பங்கும், அனுட்யத்திற்கு 5 பங்கும், ஸுரேட்யத்திற்கு 4 பங்கும் ஸர்வஸம லிங்கத்திற்கு 5 பங்கும் அகலமிருக்கவேண்டும். இந்த அளவு 3 பாகங்களுக்குமாகும். இந்த லிங்கங்களது சிரோபாகமாவது. ஆட்யத்தில் சிரஸ், அர்த்த சந்திரன் போலும். அனுட்யத்திற்கு வெள் ளரிப் பழம் போலும், ஸுரேட்யத்திற்கு அண்டம் போலும் ஸர்வஸமத்திற்கு குடை போலும் இருக்க வேண்டும்.

இந்த லிங்கங்களது பெயர்கள். சில ஆக மங்களில் ஆட்யத்தை த்ரைராசிகம், அனுட் யத்தை வர்த்தமானமென்றும், ஸுரேட் யதை (ஸர்வஸமமெனவும்) சைவாத்ய மெனவும் ஸர்வஸமத்தை ஸமகண்டமென வும் கூறப்பட்டுள்ளது. ஆட்ய லிங்கத்தின் ருத்ர பாகத்தில் 1001 லிங்கமும் ஸுரேட் யத்தில் 108 லிங்கமும் ஸர்வஸமத்தில் முக லிங்கமும் செய்விக்க வேண்டும். இவ் வாறு சித்தாந்த ஸார வழியில் கூறப்பட் டுள்ளது.

இனி சலலிங்கங்கள்—சைலஜம், ரத்னஜம் லோஹஜம், தாருஜம், ம்ருண்மயம், க்ஷணி கமென ஆறுவகையாகும். இவைகளுள்

சிலாமயம் சிலேகளால் ஆனது. ரத்னஜம் ரத்னங்களாலானது. மரகத லிங்கம் புஷ்டியையும், பத்மராகம்—இது மாணிக்க லிங்கம்—தனப்ராப்தியையும், வைடூர்ய லிங்கம் ஆயுள் விருத்தியையும், ஸ்படிக லிங்கம் புத்ர விருத்தியையும், வைர லிங்கம் சத்ரு ஸ்தம்பனத்தையும், பவழ லிங்கம் ராஜவச்யத்தையும், கோமேதக லிங்கம் ஆகர்ஷணத்தையும், முத்து லிங்கம் ஸர்வஸித்திகளேயும் இந்திர நீல லிங்கம் மோக்ஷத்தையும் கொடுப்பதோடு இந்த ரத்னங்களும் தோஷமற்றதாயும், பயரு பரிமாணம் முதல் அங்குலம் வரையும், 2 அங்குல அளவு கூடுதலாக ஆறு அங்குலம் வரை மூன்று வித அளவுள்ளவைகளாகவும், இதனுடைய பீடங்கள் அதுகளாலேயே இருக்கலாம். அல்லது தங்கம், வெள்ளி, தாம்பரம் இவைகளால் இருக்கலாம். ஏனைய லோஹங்கள் காம்யத்தில் செய்து கொள்ளலாம்.

லோஹ லிங்கங்களில் ஸுவர்ண லிங்கம் போக மோக்ஷங்களேயும் தாம்ரலிங்கம் புத்ரர்களேயும் வெள்ளி சோபையைச் செய்வதாயும், வெண்கல லிங்கம் ஸுகத்தையும், பித்தளே லிங்கம் வியாதி நாசத்தையும், இரும்பு லிங்கம் புத்ர நாசத்தையும் திரு லோஹ லிங்கம் அதாவது இரும்பு, நாகம், ஈயம் இவைகளேக் கொண்டு செய்விப்பது மரணத்தையும் கொடுக்கும். மரலிங்கங்களாவது: கருங்காலி, சந்தனம், ஆச்சா, இலுப்பை, சரளம், வேங்கை, பில்வம், கடம்பு, வெண்கருங்காலி, தேவதாரு, பலா, மருது, அசோகம் பாலே, செஞ்சந்தனம், இம் மரங்களால் செய்யவேண்டும். இந்த லிங்கங்கள் ஆன்மார்த்த பரார்த்த லிங்கங்களது அளவுபடியே இருக்க வேண்டும். இம்மரங்களேயும் சிலாக்ரகணம் போல எடுக்க வேண்டும். க்ஷணிக லிங்கமாவது: மண், அரிசி மாவு, அன்னம், நதி, மணல், கோமயம், பசுவின் வெண்ணே, ருத்ராக்ஷம், விபூதி சந்தனம், கூர்ச்சம், புஷ்ப மாலே, வெல்லம், இவைகளால் லிங்க உருவம் மட்டுமேசெய்து பூஜிக்கத்தக்கது. க்ஷணிக லிங்கங்களுக்கு பீடம் வேண்டியதில்லே.

ம்ருண்மயம், மண்கொண்டு செய்விப்பது. இவ்வாறு க்ஷணிக லிங்கங்கள் ஆறு வகையும் கூறப்பட்டுள்ளது. இந்த மண் கொண்டு செய்விப்பது பரார்த்த லிங்கத்திலும் செய்விக்கலாம். இது பக்வம், அபக்வம் என இரு வகையாகும். பக்வமென்பது மண்ணுடன் ரஸகந்தகாதிகளேச் சேர்த்து செய்வது. அபக்வமென்பது மண்ணே மட்டும் லிங்காகிருதியாக செய்வது. மேல் சொன்ன க்ஷணிக லிங்கம் 12 வகையுடன் வெல்லம், விபூதியும், புஷ்பம் பழங்களும் சேர்த்து 16 வகையாகவும் கூறப்படும். மேலே சொன்ன ரத்ன லிங்கங்களில் ஸ்படிக லிங்கத்திற்கு மட்டும் பீடத்துடனேயே செய்விக்க வேண்டும். இந்த ஸ்படிகமும் பௌர்ணமி தினம் இரவில் சந்திரனுக்கு நேராக பிடித்தால் இதிலிருந்தும் ஜலம் விழும். இது சந்திரகாந்தமெனப்படும். பகலில் ஸூர்யனுக்கு நேரில் பிடித்தால் கீழுள்ளதில் பஞ்சு, நார் முதலியதுகளில் நெருப்பு உண்டாகும். இந்த இரண்டுமல்லாததே ஸ்படிகம். இது வெண்மை, சிகப்பு, மஞ்சள், கருப்பு இந்த நிறமாக இருக்கும். இவைகள் முறையே ப்ராம்மண, க்ஷத்ரிய வைச்ய, சூத்ரர்களுக்கு ஆகும். இன்னமும் ரஸத்தினுலான லிங்க பூஜை போக மோக்ஷங்களேயும் கொடுக்குமென விசேஷ விதியும் காணப்படுகிறது. இன்னமும் கீழே சொன்ன மானுஷ லிங்கத்தின் விருத்தமான மேல் பாகம் எட்டு-பதினறு-முப்பத்திரண்டு அறுபத்தி நான்கு பட்டையாகவுமிருக்கும். இது தாரா லிங்கமெனப்படும். விஷ்ணு நீங்கிய பிரும்மா, இந்திரன், அக்னி

யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசான லிங்கங்கள் என்று சுவாயம்புவ பாணம் இவைகளுடையது போன்ற ஆயு தாடயாளங்களுடையதான 9 லிங்கங்களேய நடுமுதல் எட்டு திக்குகளிலும் ஒரே ஆலயத் தில் பிரதிஷ்டை செய்து பூஜிப்பது அணிமா, கரிமா, லகிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், ஈசித் வம், வசித்வம் எனும் அஷ்டைச்வர்யமும் ஸித்திக்க வேண்டி ராஜாக்களால் பிர திஷ்டை செய்விக்கப்பட்டு பூஜிக்கப்பட் வேண்டும் என காமிகாகமத்தில் காம்ய யோக விதான படலத்திலும் கூறப்பட் டுள்ளது. இவ்வாலயம் இப்போது சிதம்பரம் கோவிலில் காணப்படுகிறது, இவ்வாறு அவ்யக்த லிங்க லக்ஷணமாகும்.

வ்யக்தாவ்யக்த மென்ற முக லிங்கமா வது—இது மேலிருந்து ஈசான முகம். கிழக் கில் தத்புருஷமுகம் தெற்கில் அகோர முகம் வடக்கில் வாமதேவமுகம் மேற்கில் ஸத்யோஜாத முகமென ஐந்து முகங்கள் உடையது ஒரு விதம். நாலு, மூன்று, இரண்டு, ஒன்று இந்த முகமுடையன வாகவும் இருக்கலாம். ஆனுல் நான்குமுக லிங்கத்தை (ஈசானம் நீங்கிய) நான்கு பக் கமும் வாசலே உடைய ஆலயத்திலும், மேற்கு வாசலில்லாமல் மூன்று வாயி லுடைய ஆலயத்தில் மூன்று முக லிங்கத் தையும், மேற்கு, கிழக்கு வாசல் உடைய ஆலயத்தில் இரண்டு முக லிங்கத்தையும், கிழக்கு முகமான ஆலயத்தில் ஒரு முக லிங் கத்தையும் வாயிலுக்கு முகமாக பிர திஷ்ட்டைச் செய்விக்க வேண்டும். இத னுடைய, அளவு முதலியதுகளும் சிவாக மங்களில் செவ்வனே கூறப்பட்டுள்ளன. வ்யக்த லிங்கமானது ஸோமாஸ்கந்தாதி பிம் பங்களாகும். இவ்வாறு சிவலிங்க லக்ஷணம் கூறப்பட்டுள்ளது.



சதஸ்ஸில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தம்பிரான்
ஸ்ரீ சுகப்பிரம்மம் ராமசாமி சாஸ்திரிகள்
ஸ்ரீ முருக கிருபானந்வாரியார் பேசுகிருர்கள்

சிவாலய உண்மை விளக்கம்

T. R. பஞ்சாபகேச சிவாச்சாரியார், (திருவையாறு)

சிவாலயம் என்ற பதம் சிவ, ஆலயம் எனப் பிரிவு பெற்று, சிவனிடத்தே ஆன்மாக்கள் லயித்து (இரண்டறக் கலந்து) நிற்குமிடம். சிவம் என்பது நித்யமங்கள ஸ்தானம். அதாவது, பரமோக்ஷ வீடு. ஆன்மாக்களோவெனின், பிறவிக் கடலில் புண்ய பாப அலைகளால் இழுக்கப்பட்டு இல்லற யாக்கையில் இன்ப துன்பங்களோடு இணைக்கப்பட்டு இன்னலுருபவன. ஆத்மா என்ற சொல் பிறப்புக்களால் நிலையின்றி துன்புறுவது எனப் பொருள் படும். ஆத்மா கிஞ்சிஞன், பரமாத்மா, ஸர்வஞன் என்பதும் அப்பதம் பெற ஆலயவழிபாடு முதலியவற்ருல் முழு முயற்சியுடன் முன்னேறுவதும் மிகப் பொருத்தமேயாகும்.

ஆதலின், ஆன்மாக்கள் அன்ருடம் ஆலயம் சென்று, அல்லலனைத்தையும் தன்னையும் மறந்து தெய்வ திருவுருவங்களில் மனத்தைச் செலுத்தி இன்புற்று சாந்தி பெற உறுதுணையாக உள்ளதே ஆலயமெனப்படும். இது பற்றியே ஆலயந் தொழுவது சாலவும் நன்று, கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், மூர்த்தித் தலந் தீர்த்தம் முறை தனிலாடுவோர்க்கு முருதர ஸத்குருவும் வாய்கும் பராபரமே, என்றெல்லாம் ஔவை முதலிய முற்றுமுணர்ந்த முதியோர் மொழிந் தனரென்பது தெற்றென விளங்கும்.

மேலும் தேஹோ தேவாலய: ப்ரோக்தோ ஜீவோ தேவ: ஸ நாதந: என்றபடி ஆலயம் தேவருக்கு ஸ்தூல சரீரமாகும். (சூக்ஷ்ம சரீரம்-லிங்கம்) அஃதெப்படியோவெனின் கோபுரம், பாத கமலம் எனத்துடங்கி 'ஸ்தூபீ மகுட முச்யதே' என்று மூலாகமங்கள் ஆலயத்தின் கண் ஸ்தூல சரீர உறுப்புக்களை கூறுவது காண்க. கோபுரம், பாதம், த்வஜம், ஸுஷும்ஞ, தண்டம் அதனடியில் மூலாதார கணபதி அதற்கு முன்னுள்ள நந்திகள் 3-ம் ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அஞஹதம் என்ற பிரும்ஹ, விஷ்ணு ருதிரஸ்தானம், அர்த்த மண்டபம், கர்ப்ப கிருஹம் விசுத்தி—ஆக்ஞை என்ற ஈசுவர ஸதாசிவஸ்தானம், லிங்கமாகும். மேல் பலாதபம், பிரும்ஹரந்திரம், விமானம் ஸ்தூபி, சிவ பரசிவஸ்தானம், சிரஸ், மகுடம் பஞ்ச ப்ராகாரங்கள் இரு பக்கத்திலும் பாதியாக பிரிவு பெற்று—10 கைகள், என்றும் மற்ற உறுப்புக்களும் விரிவாக கூறப்பட்டுள்ளது.

அப்படியாயின் ஸர்வ வ்யாபீ மஹேச்வர: என்ற வேதாகம விதிப்படி எங்குமிருப்பவர் என்பதற்கு முரணுகாவோ வெனின், மரத்தில் எங்கும் நிறைந்துள்ள அக்னி அரணி கொண்டு கடைந்த இடத்தே வெளிப்பட்டொளி தருவதும், சூரியன் கதிர் எங்கும் வியாபித்திருந்தும், சூரியகாந்தக்கல் லில் பற்றி ஜ்வலிப்பதும்போல், மந்திர தந்திரங்களால் ஆராதித்து அழைக்கப்பட்ட சிவம் ஆலயத்தின்கண் திருவுருக் கொண்டெழுந் தருளி வழிபடுவோர் வினையகற்றி வரமருளக் காக்ஷியளித்தல் ஸர்வ வியாபகத்திற்கு முரணுகா தென்க.

நிற்க, ஆலய அமைப்பின் உட்கருத்தென்னையோ வெனின், சைவ சித்தாந்தத்தின்

முழு முடிவான பதி, பசு, பாச முப்பொருள் விளக்கமேயாகும். அஃதெப்படியோவெனின், 1. பதி–சிவம் 2. பசு–நந்தி தேவர், 3. பாசம்–பலிபீடம். இவை 3-ம் நேராக ஆலயத்தில் அமைந்திருப்பது பரமாத்மாவான பதியின் நோக்கம் பெற்று ஜீவாத்மாவான பசுவைப் பற்றிய பாசம் (மும்மலம்), ஆணவம், கர்மம், மாயை இம் மூன்றும் பலியிடப்பட்டு (பசுவை விட்டொழிந்து) பின் விலகி நின்று என்றும் இன்றும் பலி பீடம் என்ற பெயர் பூண்டு காணப்படுதலின் இதன் உண்மை அறிந்து எல்லா ஆன்ம கோடிகளும், இம்மை, மறுமைப் பயனடைந்து உய்ய வேண்டுமென்றே ஆலய வழிபாடு அனுதினமும் செய்ய ஆகமங்களும், ஆன்றோரும் நம்மை வற்புறுத்திக் கூறுகின்றனர் என்பது உண்மை.

ஆதலின், இந்த உண்மையை அறிந்தே தேவர்கள், ரிஷிகள், மூவேந்தர்கள் முதலியோர் முன்னரே இம்மாபெரும் கோயில்களை சில்பாகம லக்ஷணங்கொண்டு, கோடிக் கணக்கான பொருள் சிலவு செய்து முழு முயற்சியுடன் கட்டி முடித்து அதற்கேற்ப திருவுருவங்களையும் பிரதிஷ்டை செய்து, பின்னர் ஆகம முறைப்படி நித்ய பூஜை உத்ஸவம் முதலியன முறை தவறாது நடந்து வர போதிய ஸர்வமான்யங்களையும் அளித்து அதனால் தானடைந்த இம்மை, மறுமை சிவ புண்யப் பெரும்பயனை பின் வரும் ஆன்ம கோடிகள் அனைவரும் பெற வேண்டுமென்றே நமக்கு நல்வழி காட்டியருளியிருக்கின்றனர் என்பது உண்மை. ஆதலால் அனைவரும் ஆலய வழிபாடு முதலிய மாபெருஞ் சிவ புண்யங்களை பக்தி சிரத்தையுடன் அன்றாடம் தன்னாலியன்றவாறு செய்து அழிவற்று அரனடித்தலமடைந்து பேரின்பமுய்யுமாறு வேண்டுகிறேன்.

இதுகாறுங்கூறிய ஆலய உண்மை விளக்கத்தின் கருத்தாவது ஆலய வழிபாடே ஆன்ம கோடிகளுக்கு இன்றியமையாதது என பெறப்பெற்றதால் ஆலய வழிபாட்டின் முறையை சிறிது இங்கு கூறுதல் அவசியமாதலின் அதனையும் சுருக்கமாக கூற முன் வந்துள்ளேன்.

ஆலய வழிபாட்டின் முறை விளக்கம்

சிவாலயம் வழிபடுபவர் ஸ்நானம், விபூதி, ருதிரக்ஷதாரணம், அநுஷ்டானம் முதலியவற்றால் பரிசுத்தராக சிவபக்த வேடம் பூண்டு புஷ்ப பழ தாம்பூலங்களுடன் ஆலய வாயிலை அடைந்து கால், கை சுத்தி செய்து கொண்டு உட்சென்று த்வஜ ஸ்தம்பத்தின் அடியே உள்ள கணபதியை அடைந்து இருகரங்களையும் முஷ்டியாக கொண்டு சிரசில் ஐந்து முறை குட்டி கொண்டு, இரு காதுகளையும் 2 கரங்களால் மாருகப்பற்றி மண்டியிட்டு மும்முறை வணங்கி ஸ்தோத்திரங்களால் வழிபடல் வேண்டும். நிற்க, எந்த தேவருக்குமின்றி கணபதிக்கு மட்டும் தொன்றுதொட்டு தனிச் சிறப்புடன் விளங்கும் இவ் வழிபாட்டின் முறைக்கு தக்ஷப் புராணக் கதையை இங்கு கூறுதல் அவசியமாயினும், விஷயம் விரிவடையுமென அஞ்சி விடப்பட்டது.

இங்ஙனம் கணபதியை வணங்கியதும் அந்த இடத்திலேயே மூல லிங்கத்திற்குறிய அஷ்டாங்க நமஸ்காரத்தை முறைப்படி செய்து வழிபடல் வேண்டும். ஏனெனில் முன் ஆலய அமைப்பில், கூறப்பட்டவாறு அதுவரையில் தான் பாதஸ்தானமாதலின் அதற்கு மேல் உறுப்புக்கள் நமஸ்கரித்தற்குறியதாகா தென்றும், மேலும் உட்சென்று தனித்தனியே ஒவ்வொரு தேவரையும் ஸாஷ்டாங்கமாக வணங்கு

வதால் பின்புறமுள்ள தேவருக்கு நேர் கால்களை நீட்டும் பாபத்திற்குள்ளாகும்படி நேருமென்றே அது விலக்கத்தக்க தென்பது டன் ஆலயத்தினுள் பிரதானமான தனியாலயமுடைய பிரதான மூர்த்தியைத் தவிர அதற்கு பரிவாரமான மூர்த்திகளும் குரு முதலிய எந்த மனிதர்களுக்கும் அஷ்டாங்க நமஸ்காரம் செய்தல் கூடாதாதலின் முறைப்படி பஞ்சாங்க த்ரியங்க—ஏகாங்க நமஸ்காரங்களே செய்யத் தக்கதாகும்.

பின்னர், முறையே பிரர்காரங்களின் வழியே வலமாக உட்சென்று நந்தி தேவரையும் துவார பாலகர்களையும் வணங்கி, விடைபெற்று பிரதக்ஷணமாகவே உள்ளே செல்லல் வேண்டும். பிரதக்ஷணம் செய்யும் முறையோவெனின், பூர்ண கர்ப்ப முடைய ஸ்திரீ எண்ணெக் குடந்தாங்கி எவ்வாறு செல்வாளோ அவ்வாறே மெல்லச் சென்றும் மனம் தியானத்திலும், வாக்கு ஸ்தோத்திரத்திலும். கண்கள் தரிசனத்திலும், செவிகள் தேவசரிதப் பாடல்களை கேட்பதிலும் நாட்டமுறச் செய்து இந்திரியங்களை தேவரிடத்தே செலுத்தியவாறு இரு கரங்களையும் சிரமேற் கொண்டு வலம் வருதல் வேண்டும். இஃது நிற்க, பிரதக்ஷண முறை, விதம் என ஆகமங்களில் கூறப்பட்டுள்ளதாயினும் 'அதன் பேதங்களை விரித்துக்கூற இங்கு இடமின்றி விடப்பட்டது.

இங்ஙனமாக உட்பிராகாரம் சென்று சோமாஸ்கந்தர் முதலிய மூர்த்திகளை முறையே வணங்கி தக்ஷிண மூர்த்தி ஸன்னதியை அடைந்து (சிவ தீக்ஷையுடையோர்) அமர்ந்து 108 அல்லது 10 முறையேனும் பஞ்சாக்ஷர மகா மந்திரத்தை முறைப்படி ஜபித்து எழுந்து வணங்கியபின் கணபதி, சுப்ரமண்யர் முதல் நடராஜ ரீரான ஸகல பரிவார மூர்த்திகளையும் வழிபட்டு வணங்கிய பின்னர் அர்த்த மண்டப வாயிலை அடைதல் வேண்டும். இங்ஙன மின்றி சன்னதிக்கு நேரில் உட்சென்று தரிசித்தலும் புண்யமழிந்து நந்திக்கும் லிங்கத்திற்கு மிடையே குருக்காகச் செல்லுதலும் புண்யமழிந்து பாபம் தரும்.

நிற்க, ஆலயம் வழிபடுவோர் வெறுங் கையுடன் சென்று தேவரை தரிசித்தல் கூடாதாதலின் வழிபாட்டிற்குரிய தேங்காய், பழம், புஷ்பம், தாம்பூலம் முதலியவற்றுடன் சென்றுதான் தரிசித்தல்வேண்டும் என்பதின் உட்கருத்தையும் சற்று இங்கு விளக்கி கூறுதல் அவசியமேயாகும். அதாவது உலகில் நாளிகேர பலத்தையே (தேங்காய்) தேவாராதனைக்கு முக்யமாகக் கொண்டு முன்னுள் முதலாக மூதாதையர்கள் கையாளுவதின் காரணமோவெனின், கும்ப-ரூபத்தில் ஆராதிக்கப்படும் தேவருக்கு தேங்காயே முதலங்கமான சிரஸாக விளங்குவதும் அது பற்றியேதான். தேங்காய்க்கு சிவனுக்குரிய முக்கண்களும் விஷ்ணுவிற்குரிய நாமமும் (அதன் முக்கோடுகள்) பொருந்தியவாறு சைவ வைஷ்ணவ மூர்த்திகளின் ஆராதனையில் சம உரிமை பெற்று பொதுவாய் விளங்குவதே தொன்று தொட்டுள்ள சைவ வைஷ்ணவ ஒற்றுமைக்கோர் குறிக்கோளாகும் என்பதை அறிவுறுத்துகிறது.

மேலும் தேங்காயாவது உலகின் கோள வடிவத்தை ஒருவாறு ஒத்திருக்கிறது. அஃதெப்படியோவெனின் அதன் மேல் கெட்டியான மட்டைநார் ஓடுகள் போர்வை போன்று பொருந்தி உள்ளிருக்கும் தூய வெண்ணிற ஒளியையும் அமிருதம் போன்று இனிமையான இளநீரின் ருசியையும் எளிதில் அறியவொட்டாது தடுத்து மறைத்துக் கொண்டிருப்பது ஆணவம், கர்மம், மாயை என்றும் மும்மலங்களால்

போற்றப்பட்ட ஆத்மா உள்ளும், புறமும் ஒளிப்பிழம்பாய் நிறைந்து நிற்கும். ஜீவாத்ம-பரமாத்ம ஸ்வரூபத்தையும், அதன் சக்தி மண்டலத்தினிடையே நின்று பெருகும் பரமாமிருத ருசியையும் அறியவொட்டாது தடுக்கப்பட்டு கிடக்கும் மாயா பந்தமான அண்ட பிண்ட உலகின் உருவத்திற்கு நன்கு ஒப்பிட முடியும்.

அங்ஙனமாயின் அத்தேங்காயை தேவர் சன்னதியில் ஆசார்யரின் உதவி கொண்டு உடைத்து உள்ளிருக்கும் வெண்ணொளியையும் ருசியையும் அறியுமாறு வெளிப்படச் செய்தல் நம்மைப்பற்றிய மாயையினின்றும் நாமும் இவ்வாறே நீக்க முற்று ஜ்யோதிருபமான ஜிவாத்ம பரமாத்ம ஸ்வரூபத்தையும் அதன் ப்ரமாமிருத ருசியையும் யான் அடைய எனக்கு அருள் பாலிக்க வேண்டுமென இறைவனிடத்தே இடைவிடாது இறஞ்சி முறையிடல் வேண்டு மென்பதையே குறிக்கும்.

இத்தேங்காயுடன் வாழைப்பழம் முதலிய பழங்களை சேர்த்துக் கொண்டு போதல், நம் வேண்டுகோள். ஸபலமாக வேண்டு மென்பதையும், தாம்பூலம் லக்ஷ்மீ கடாக்ஷத்தையும், தூபம் நம் பாபம் புகையாகப் பறந்து போகவேண்டு மென்பதையும், கற்பூர ஆரத்தி ஜ்யோதிஸ்வரூப தரிசனத்தையும், ஆன்ம கோடிகளுக்கு அறிவுறுத்துவதாகும். ஆதலின் ஆலயம் வழிபடுபவர் அநுதினமும் இவையனைத்தையும் சேகரித்துக் கொண்டு போதல் முடியாவிடினும், வெறுங் கையுடன் செல்லாது தம்மாலியன்ற அளவு ஏதேனும் ஒன்றையாவது எடுத்துச் செல்லுதல் மிக நன்று.

முன் கண்டவாறு அர்த்த மண்டப வாயிலில் நின்றே சிவனை முறைப்படி வணங்கி வழிபட்டு சண்டேசுவரர் ஸன்னதியை யடைந்து வணங்கி சிவதரிசன பலம் தருமாறு வேண்டிக்கொண்டு வெளி மஹா நந்தியின் பின் நின்று அவர் பீஜத்தை வலது கையால் தொட்டுக் கொண்டு இரு கொம்புகளினிடையே மூலலிங்கத்தை பார்த்து (ஓம் ஹர) என்று மும்முறை கூறி இங்ஙனம் சிவதரிசனத்தை முடித்துக் கொண்டு அம்பிகையின் ஆலயம் சென்று முறையே வழிபட்டு வணங்கியபின் சண்டேச்வரியை வணங்கி தேவீ தரிசன பலம் தருமாறு வேண்டிக் கொண்டு மறுபடியும் சிவாலயம் சென்று கடைசியாக பைரவரை வணங்கிவிட்டு வெளி கோபுரவாசலில் சற்று உட்கார்ந்து பரமனை மனதினல் தியானித்து சிவ தரிசனத்தில் தானறியாது நிகழ்ந்த அபராதங்களை பொறுத்து அநுக்கிரஹிக்குமாறு வேண்டிக் கொண்டு புறங்காட்டாது வெளியேறல் வேண்டும்.

நிற்க. வீட்டில் ஆத்மார்த்த பூஜை புரிவோரும், தினம் ஓர் முறையேனும் பரார்த்தாலய தரிசனம் அவசியம் செய்ய வேண்டும் என்பது மேற்கூறிய காரணங்களால் தெற்றென விளங்குமாதலின் இங்ஙனமே ஆன்மகோடிகள் அனைவரும் ஆலயவழிபாட்டை முறைப்படி அன்றுடம் செய்து இம்மை, மறுமை பெரும்பயன் பெற்றுய்யுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறஞ்சுகிறேன்.

———

கிரியா பாதம்

A. V. விச்வனாத சிவாச்சாரியார்

य: कामिकादि विनिवेदित तत्वरूप:
तत्तत्व बोध पशुपाश विमोचको य: ।
नारायणी भुजलताश्रित कण्ठदेश:
भक्तिं स मे दिशतु नैजपदारविन्दे ॥

பரம கருணாமூர்த்தியான பரமேச்வரன் ஸகல ஆன்மாக்களையும் உய்விக்கவேண்டி கருணையினால் சிவாகமங்கள் 28-ஐயும் உபதேசித்தருளினார்.

இந்த இருபத்தெட்டாகமங்களில் காமிகம் முதல் ஸுப்ரபேதம் வரை 10 ஆகமங்கள் சிவபேதமெனவும், விஜயம் முதல் வாதுளாகமம் முடிய ருத்ரபேதம் என்றும் ஆகும். இந்த ஒவ்வொரு ஆகமமும், சர்யாபாதம், க்ரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்கு பாதங்கள் கொண்டது.

சர்யாபாத அனுஷ்டானத்தினால் ஸாலோக்ய பதவியும், க்ரியாபாத அனுஷ்டானத்தினால் ஸாமீப்ய பதமும், யோகபாத அனுஷ்டானத்தினால் ஸாரூப்ய ப்ராப்தியும், ஜ்ஞான பாதானுஷ்டானத்தினால் ஸாயுஜ்ய முக்தியும் கிடைக்குமென சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

சர்யாபாதத்தில் :-வர்ணாச்ரமாதி தர்மானுஷ்டானம் முதலியவைகள் கூறப்பட்டிருக்கின்றன.

க்ரியா பாதத்தில் :—ஸமய விசேஷ தீக்ஷை ஆலய நிர்மாணம் பிம்பங்களின் லக்ஷணம் லிங்கலக்ஷணம் கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம்-பிரதிஷ்டாதி உத்ஸவாந்தம். உத்ஸவாதி ப்ராயச்சித்தாந்தம், நித்யபூஜா விஷயங்களும் விவரமாக கூறப்பட்டிருக்கின்றன.

யோகபாதத்தில் :—யம, நியம, ஆஸன, ப்ராணாயாம, ப்ரத்யாஹார, தாரணா, த்யான ஸமாதி என அஷ்டாங்கயோக லக்ஷண விளக்கமும் சிவஸ்வரூப ஜ்ஞானத்தினால் சிவபாவனையாகின்ற சிவயோக நிரூபணமும் செய்யப்பட்டிருக்கின்றது. யோகமென்பது சித்தத்தை சிவனிடத்திலே ஒரு முகப்பட்டு நிறுத்துதல்.

चित्तवृत्तिनिरोध: योग:

சிவஞான போதம் 10 வது ஸூத்ரத்திலும் நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது.

शिवेनैक्यं गतस्सिद्ध: तदधीनस्ववृत्तिक: ।
मलमायाद्यसंपृष्ट: भवति स्वानुभूतिमान् ॥

இந்த நிலையானது ஸித்தர்களான தீர புருஷர்களுக்குதான் ஸ்வானுபவமாய் ஏற்படும். கடோபநிஷத்திலும்,

कश्चित् धीर: प्रत्यगात्मा ऐक्षत् ।
आवृत्तचक्षुरमृतत्वमिच्छन् ॥

இந்த யோகிகள்தான் பரம சிவதேஜஸ்ஸில் சாந்தமாய் லயித்து துரீயாதீதம் என்ற அமலாவஸ்தையை பார்க்கிறார்கள்.

स्वच्छाम्भसदृशप्रभं परशिवं
योगी चिदापश्यति ॥

ஜ்ஞான பாதத்தில் :—பதி-பசு-பாசம்

पति: पशु: पाशं என்ற முப்பொருள் விளக்கம், கூறப்பட்டிருக்கிறது. पति:=பரமேசுவரர். पशव:=ஆன்மாக்கள். पाशा: =பசுக்களாகின்ற ஆன்மாக்களை கட்டுப்படுத்துவது=பாசத்தின் தோற்றமே.

ஆண்வமல, கண்மமல, மாயாமலம் என்ற மலத்ரயங்களாகும். இவைகள் மூன்றும் நித்யமானவைகள். அழிவற்றவைகள். ப்ரதி சரீரம் வேறுபட்டவைகள். இம் முப்பொருள்களின் ஆராய்ச்சியுள்ளே சைவ சித்தாந்த தத்வப் பகுதி அடங்கும். பாசமானது வடிவமற்றது. ஜடப்பொருள் ஆன்மாவிற்கு தனு, கரண, புவன, போகங்களை, உண்டுபண்ணுவது. அதே சமயம் தனது ஸ்வரூபம், உயிர்களது நிலை, உலக நிலை, பதிஸ்வரூபம், முதலியவைகளை அறியவிடாமல் தடுக்கும் இருள் போன்றது. ஆனல் இருள் தன்னை காண்பித்து மற்றவைகளை மறைக்கும்—இது தன்னையும் தோற்றுவிக்காது.

"நித்யமாய் அருவாய் ஏகநிலையதாய்
உலகத்துக்கோர் வித்துமாய்,
அசித்தாய் எங்கும் வியாபியாய்
விமலனுக்கோர் சக்தியாய்,
புவனபோகந்தனுகரணமும்
உயிர்க்காய்வைத்ததோர்மல,
மாய் மாயை மயக்கமும்
செய்யுமன்றே"

ஆண்மா உறையும் உடலும், அவ்வுடல் உறையும் உலகமும், ஆண்மாவிற்கு பாசம். ஆனல், உடலையும் உலகையுமே பாசம் எனச் சொல்வது பொருந்தாது. உடலும் உலகும் எதனிடமிருந்து தோன்றி, லயமடைகின்றதோ அதுதான் பாசம். உத்பத்திக்கும் ஒடுக்கத்துக்கும், மூலகாரணமாகவுள்ளது மாயை. மாயை ஒரு பாசம். ஆன்மாவிற்கும் உடலுக்கும் சம்பந்தம் ஏற்பட்டால்தான் அறிவு ஏற்படும். இல்லையேல் ஆன்மா அறிவு பெற வேண்டுமாயின் மாயா சம்பந்தம் வேண்டும்.

மாயையிலிருந்து தோன்றும், உடல், இந்திரியங்கள் அந்தகரணம், இவைகளால் கிடைக்கும் அறிவு பூர்ணத்வத்தை அடைவதில்லை. இதனல்தான் மாயையும் பாசம் எனப்படுகின்றது. துன்பத்திற்கு இடமான உடலுள்ளும் ஆன்மா புகுந்து கஷ்டப்படுவதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று ஆன்மாவோடு அனுதியாயுள்ள ஆணவமலம். ஆன்மாவோடு ஸஹஜமாய் இருக்கும். ताम्रका कालिकेव। தாம்ரத்தில் களும்புபோல = மற்ருென்று பிறவி தோறும் செய்யும் கன்மங்கள். (புண்ய பாபகன்மாக்கள்)

पतिः=பரமேச்வரன். ஸகல ஜகத்துக்கும் ஆதாரமானவர். ஸகல வித்யைகளுக்கும் இருப்பிடமானவர். பரம கருணைமூர்த்தி. ஸ்ரீகண்டாசார்யார் பாஷ்யத்தின் துடக்கத்தில் மங்கள ச்லோகத்தில் பதியைப் பற்றி கூறியிருக்கிருர்.

மாயா ரூபமான தன்னுடைய சித்சக்தியை சுவருக அமைத்துக்கொண்டு அதில் ஸகல உலகங்களாகின்ற படத்தை தோற்றுவிப்பவரும், ஸகல ஆகமங்களின் முடிவின் எல்லையாயுள்ளவரும், பசுக்களை காட்டிலும் வேருனவருமான சிவன் மிக உயர்ந்து விளங்குகின்ருர்.

निजशक्ति भित्ति निर्मित निखिल
जगज्जाल चित्रनिकुम्बः।
सजयति शिवः परात्मा
निखिलागम सारसर्वस्वम् ॥

இவ்வாறு பதியின் ஸ்வரூபத்தையறிந்து சர்யாதி பாதங்களில் நின்று உபாசித்து அனைத்தும் அவனது செயலே என்ற நிலையிலே ஸ்வானுபூதிமானுய் விளங்குவதே ஆகமங்களின் தத்வம். பரம கருணையோடு ஸர்வ மங்கள மூர்த்தியாய் விளங்கும் சிவன் अवबोध ஸ்வரூபி. ஆகமங்கள் சப்தரூபம். பரமேச்வரன் ஸகல ஆன்மாக்களையும் அனுக்ரஹிக்க இச்சையினுல் தன் அவபோதத்தை (ஞானத்தை) சப்தாரூடமாக செய்து குருபரம்பரையாக வழி வழியாக உபதேசித்தருளினுர். அதுதான் சிவாகமம்.

பரமேச்வரருடைய வழிபாட்டிற்காக (பூஜைக்காக) க்ரியாபாதத்திலே கூறப்பட்டுள்ள புஷ்பங்கள், பிரதக்ஷிண நமஸ்காரங்களைப்பற்றி சுருக்கமாக கூறுகின்றேன்.

அபிஷேகம்:—கங்கை காவேரி முதலிய புண்ய நதிகள், தடாகங்கள், க்ஷேத்ர தீர்த்தங்கள் முதலியவைகளிலிருந்து, பரிசுத்தமான வஸ்த்ரத்தினுல் வடிகட்டி எடுக்கப்பட்டதாயும், ஏலம், வெட்டிவேர், விலாமிச்ச வேர், கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய் குங்குமப்பூ, பச்சை கற்பூரம், புஷ்பங்கள் முதலியவைகளால் பரிமளிக்கப்பட்டதாயும் உள்ள தீர்த்தமானது அபிஷேகம் முதலியவைகளுக்கு உபயோகிக்கத் தகுந்ததாகும்.

வஸ்த்ரம் :—பீதாம்பரம், பட்டு வஸ்த்ரம், பருத்தி ஆடை முதலியவைகள் ச்ரேஷ்டம். அழகு பளபளப்பு, சிறந்த தன்மையாய் இழையொத்ததாயும் லக்ஷணத்தோடுகூடியதாயும் இருத்தல் வேண்டும். 12 முழம் நீளமுள்ளதாகவும் 2 முழம் அகலமுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

[முற்பகலில் வெண்மை வஸ்த்ரமும் நடுப்பகலில் சிவப்பு வஸ்த்ரமும் ஸாயரக்ஷையில் மஞ்சள் வஸ்த்ரமும் அர்த்த ஜாமத்தில் நீல வஸ்த்ரமும் அணிவிக்க வேண்டும்.]

பட்டினுல் செய்யப்பட்ட யக்ஞோபவீதம் சாத்த வேண்டும்.

விலக்கவேண்டிய வஸ்த்ரம் :—எலி முதலியவைகளால் கடிக்கப்பட்டதும், கேசங்கள் சம்பந்தப்பட்டதும், நெருப்பு பட்டதுமான வஸ்த்ரமும், உபயோகிக்கப்பட்டதும், விலக்க வேண்டும்.

பாத்யம் :—

(1) குங்குமப்பூ, சந்தனம், அருகு வெண் கடுகு, வெட்டி, விளாமிச்சவேர், எள்ளு இவை 6 திரவ்யங்கள் கலந்த பாத்யம் உத்தமமாகும்.

(2) வெண்கடுகு, அருகு, விளாமிச்சவேர் இவை மூன்று மட்டும் கலந்தது மத்யமம்.

(3) சந்தனம், விலாமிச்சவேர், இவை இரண்டு மட்டும் கலந்தது அதமமாகும்.

அர்க்யம் :—

(1) ஜலம், பால், தர்ப்பை நுனிகள் யவம், வெண் கடுகு. அரிசி, எள்ளு, நெல் ஆக, 8 அர்க்யத்துக்கு சேர்க்கவேண்டிய த்ரவ்யங்கள்.

(2) அல்லது—அரிசி, நெல், வெண் கடுகு, எள்ளும் சேர்ந்த ஜலமாவது—புஷ்பாஞ்ஜலியுடன் கூடியதாவது அர்க்யமாக கூறப்பட்டுள்ளது.

ஆசமனம் :—ஏலம், லவங்கம், பச்சை கற்பூரம் (கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய்) த்ரிபலை, விலாமிச்ச வேர், சந்தனம் வராளபலம் இவைகளை ஆசமன தீர்த்தத்தில் சேர்க்கவேண்டும், (வராளபலம்= கிராம்பு.)

சந்தனம் :—சந்தனம், அகில், குங்குமப்பூ இவைகள் பச்சை கற்பூரத்தோடு சேர்த்தும் தனித்தனியாகவும் நான்கும் சேர்த்தும் சாத்தலாம். குங்குமப்பூ பச்சை கற்பூரம், சந்தனம், இவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலமும், அதில் பாதியும், பாதியிற்பாதியுமாவது. கோஷ்டம், அகரு முதலியவைகளுடன் சேர்த்து சாத்தவேண்டும்.

வெள்ளை புஷ்பம் :—வெண் தாமரை, புன்னை, சங்கு புஷ்பம், மல்லிகை, நந்தியாவர்த்தம், ச்ரியாவர்த்தம்-மந்தாரை, கைவஹு கர்ணிகை, மருதாணி–விகர்ணிகை, ஜாதி வில்வம், மகிழம்பூ, வெள்ளெருக்குபூ, முல்லை, தும்பை–நீர்நொச்சி, வெள்ளொலுத்தி-இண்டம்பூ-பத்ராஹீ - சிறுகத்திரி–கண்டங்கத்திரி சம்பகம் அரளி அசோக புஷ்பம் நாணல்பூ இவைகள் வெள்ளை நிற புஷ்பங்கள், உத்தம மத்யம நிலைகளை அடைகின்றன—சாத்துவதற்கு ஏற்றம் தாழ்வுகளை அடைகின்றன.

சிகப்பு புஷ்பம் :—சிவப்புத் தாமரை, புரசம்பூ, செங்கழனீர், பாதரிப் புஷ்பம், சிவப்பூ(ஊ)மத்தை, கண்டங்கத்திரி. அரளி-சிவப்பு மந்தாரை, பட்டிப்பூ. விருக்ஷிப்பூ, முனி புஷபத்தில் சிவப்பு, இவைகள் சிவப்பு புஷ்பங்கள் சாத்த தகுந்தவைகள்.

மஞ்சள் புஷ்பம் :—பெருவாஹை-கொங்கு புஷ்பம். சண்பகம், மஞ்சள் ஊமத்தை-கொன்னை புஷ்பம், வில்லுப் புஷ்பம்-வாஹைபுஷ்பம், மலைமல்லிகை புஷ்பம். இவைகள் மஞ்சள் நிறத்தில் சாத்த தகுந்தது.

கருநிறத்தில் :—நீலோத்பலம் (கருநெய்தல் பூ) சாத்த சிறந்ததாகும்.

எல்லா புஷ்பங்களை காட்டிலும் நீலோத்பலம் உயர்ந்தது—நீலோத்பல புஷ்பத்துக்கு ஸமமானது வேறு இல்லை.

விலக்கப்பட்ட புஷ்பங்கள் :—கையில் கொண்டு வந்தது. வஸ்த்ரத்தில் கொண்டு வந்தது, தானாக உதிர்ந்தது. ஆமணக்கு எருக்கு இலைகளில் கொண்டு வந்தது' இவைகளால் சிவனை பூஜை செய்தால் இருக்கின்ற புண்யமும் போய்விடும்.

करानीतं पटानीतं स्वयं पतितमेवच ।
एरण्डार्क पुटानीतं हन्तिपुण्यं पुरातनम् ॥

மொக்குகளில், சம்பகமொட்டு தவிர வேறு மொட்டுகளால் பூஜை செய்ய கூடாது.

विनाचाम्पेय कलिकां वर्जयेत्कलिकान्तरे ।

அர்த்தயாமத்தில் ஜாதி புஷ்பமும். இரவு பகலில் அரளியும் சாத்தவேணும்.

ஸாதாரண புஷ்பங்களை காட்டிலும் ஸ்வர்ண புஷ்பத்துக்கு 10 பங்கு அதிகம் பலம். அதை விட 10 பங்கு அதிகம் பலம் ரத்னங்களுக்கு. இவைகளை சரமாக கட்டி சாத்துவதால் இருமடங்கு பலன்.

प्रहरार्धं स्मृता जाती करवीररमहर्निशम् ।
प्रत्येकमुक्तपुष्पाणां दश सौवर्णकंफलम् ॥
स्वर्णाद्दशगुणं रत्नं माणिक्यादि नवोद्भवम ।
सङ्ग्रथितेषु तेष्वेव द्विगुणं फलमश्नुते ॥

ப்ரதக்ஷிணம்:—ஆலயங்களில் பிரதக்ஷிணம் செய்யவேண்டிய விதி கூறப்பட்டிருக்கிறது. பிரதக்ஷிணத்திற்கு நான்கு அங்கங்கள். அடிமேல் அடிவைத்துச் செல்ல வேண்டும். கைகளை ஆட்டக்கூடாது. வாக்கினல் ஸ்தோத்திரங்களை சொல்லிக்கொண்டு, ஹ்ருதயத்தில் தியானம் செய்துகொண்டு, பிரதக்ஷிணம் செய்யவேண்டும். கர்ப்பிணி ஸ்த்ரீயானவள் எண்ணை நிறைந்த குடத்தை வைத்துக்கொண்டு மிக மெதுவாக நடப்பது போல், நடந்து செல்லவேண்டும்.

पदात्पदान्तरं गच्छेत् करौ चलनवर्जितौ ।
स्तुतिर्वाचि हृदिध्यानं चतुरङ्गं प्रदक्षिणम् ॥
आसन्नप्रसवानारी तैलपूर्णं यथा घटम् ।
वहन्ती शनकैः यान्ती तथा कुर्यात्प्रदक्षिणम् ॥

அங்கப்ரதக்ஷிணம் செய்வதினல் ஸகல பாபங்களும் போய்விடுகின்றன. அஞ்சலி செய்து கொண்டு பூமியில் பிடிப்பற்ற தண்டம் கீழே விழுவதுபோல் விழுந்து நமஸ்காரம செய்து 1-3-5-7-ப்ரதக்ஷிணம் செய்வது ஸர்வ பாபங்களையும் போக்கடிக்கும்.

பரமேச்வரனின் முன்னிலையில் தண்டத்தைப் போல் விழுந்து நமஸ்காரம் செய்து எழுந்திருப்பவனுடன் அவனுடைய பாபங்கள் சேர்ந்து எழுந்திருப்பதில்லை.

अङ्गं प्रदक्षिणं कुर्वन् कृत्वाभूमौ निजां तनूम् ।
दण्डवद्बाहु युग्मेन सहबध्वा कृताञ्जलिः ॥
कृत्वा दण्डनमस्कारं शिवाग्रेतु सकृन्नरः ।
प्रदक्षिणमथाकुर्यात् एकंवा त्रयमेववा ॥
पंचवा सप्तवा चैव सर्वपापनिकृत्तये ।
पशोः पशुपतेरग्रे दण्डवत्पतितो भुवि ॥
पतन्ति पातकाः सर्वे नोत्तिष्ठन्ति पुनः सह ।

தீப ஆராதனம்

சந்திரசேகர குருக்கள்—திருக்கழுக்குன்றம்

பிரம்மமாகிய, பரம்பொருள் தன்னை அன்புடன் உபாஸிக்கும் ஆன்ம கோடிகளை வேண்டி, க்ஷேத்ரங்கள் தோறும், அசல, சல, மூர்த்திகளாய், நாம் கோரிய ரூபநாமாக்களுடன், வேத, சிவாகம விதி வழி, சிரத்தையுடன் செய்யும் உபாஸனையை ஏற்று நம்மை எப்பொழுதும் ரக்ஷிக்கின்றது.

நமது ஆலயங்களில் செய்யப்படும் உபசாரங்களில், அனேக பேதமிருந்தபோதிலும், அவைகளில் பதினாறு உபசாரம் எப்பொழுதுமுள்ளதாக இருக்கிறது. இதனிடையில் சில மாறுதல்களிருப்பினும், அம்சுமான் ஆகமத்தில் கூறியபடி

आवाहनासने पाद्यमर्घ्यं स्नानं च वस्त्रकम् ॥
उपवीतं गन्धपुष्पे धूपं दीपं निवेद्यकम् ।
तथाचमनपानीये तांबूलं तु प्रदक्षिणम् ।
उपचारैः षोडशभिर्महादेवं समर्चयेत्

என்றும், நித்யம் நைமித்திகம் முதலான பூஜைகளில், ஆகமங்கள், (தீபம், பலி, உத்ஸவம் முதலியவற்றின் முடிவு வரை) உபசார பேதங்களை விதிக்கின்றன. பூஜை முதலியவைகளில் நாயக மணியாய் விளங்குவது தீபஉபசாரம். இந்த தீப ஆராதனம், இதர பூஜா காலங்களில், சாதாரணமாக இருந்தாலும், நைமித்திக பூஜையிலும். ஸாயங்கால பூஜையிலும், விசேஷமாகச் செய்யப்படுகிறது. அந்த காலம் விணுக்காமல், ஆஸ்திகர்கள் அனைவரும், மனம், வாக்கு, காயம் லயித்து ஏகாக்ரதையாக இருந்து தரிசித்து நம் வாழ் நாளைப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும்.

இது தூப உபசாரம் துடங்கி கர்பூர தீபம் முடியப் பூரணமடைகிறது. இவ்விதம், தரிசனத்தால் பிராரப்தகர்மானுஷ்டானமாய், அனேக கல்பகாலம், நாமடையக் கூடிய தான சுக துக்க வேதநாரூப பந்தங்கள், பாம்பின் முட்டைகள் போன்று நாளடைவில் கழிவை அடைகின்றன. இதில் முதலில் தூப உபசாரம் மஹாப் பிரளயத்தைக் தெரிவிக்கிறது. இது ராத்ரி, பகல் அடங்கி, ஸத்து அஸத்துக்கள் லயித்து, எல்லாம் தன்னிடத்தில் ஒன்றி, தமஸ்ஸால் சூழப்பட்டு நீர்பூத்த நெருப்பாய்த்தானிருந்து, நாதபிந்துரூபமாகிய, தானும் தன்னுடைய அபின்ன சக்தியும், சிவ சப்தவாச்யமாய்த் தனித்திருக்கும் நிலையை உண்டு பண்ணுகிறது.

सर्वमिदं ब्रह्मविष्णु रुद्रेन्द्रास्ते संप्रसूयन्ते इत्यों॑ सत्यमित्युपनिषत्

இவ்விதம் தன்னுளடங்கிய எல்லாம் ஒய்வுடனிருக்குமளவில், தான் நிஸ்ஸாக்ஷிகமாய்த் தனித்திருந்து, எவரும் ஊழ்வினை நீக்கத்தால் பயனடைய முடியாமலிருக்கும் மையம், சிவபரம்பொருள், தனக்குள் இச்சை என்னும் உணர்வு தோன்றிய வழி, இச்சா சக்தியின் காரியமாக குடிலையின் ஏவலால் பரநாத ரூபநாத சக்தி பிந்துவில் அடங்கி இருக்கும் தன்மை நீங்கி ஜகத்தின் உத்பத்திக்குக் காரணமாய் வெளிவர இருக்கும் தோற்றம் (ஒரு களி) என்னும் முகதீபம் பிரகாசமடைகிறது.

श्रीमत् ज्ञानसिन्धौ—शिवेच्छया कुटिलोत्पन्नं नाद तत्वं प्रधानकम्।

என்ற வழி பிறகு தோன்றுமுறையில் இச்சா சக்தியின் பிரகாச ரூபவிளக்கம் இரண்டு

தீபம் பின் உலக இயற்கை, அறிவு கலந்த வழி, ஞான சக்தியின் துடர்பு ஏற்பட்டு மூன்று தீபம் ஆகிறது. அறிவு செல்லும் வழி, செயலின் விளக்கம் ஏற்படும் நிலை நான்கு தீபம். அப்பொழுது உபாஸன உபாஸக உபாஸ்ய பேதம் நிலைத்துக் கலா மயமாகும் தருணம்; சிருஷ்டி முதலிய பஞ்ச கிருத்யங்களுக்கு அதிபர்களான பிரம்மா முதல் ஸதாசிவம் வரை காரணேசர்களின் தோற்றம் ஐந்து முகதீபம். பிறகு கிருமி கீடங்யாயத்தால் வித்தித்து சிவதத்வமும் லயத்தை அடையும். அக்ஷுப்தரூப அபர பிந்துவின் கார்யமாய் வெளிவரும் சக்தி களின் கலப்பால்,

एकैवानेकतां याति शिवशक्तिरुपाधितः ।

சிவனுடைய வியாபாரமான லயம், போகம் அதிகாரமென்னுமிவை ஏற்படுகிறது. இது

नाद मध्योदितो बिन्दुः शिवशक्त्याख्य नामकः ।
प्रकृतित्वादयं बिन्दुः क्षोभ्यते नाखिलात्मना ॥
तत्र यो क्षुब्धभागोस्य शान्त्यतीतकला तु सा ।
लयादि भेदः प्रागुक्तो यदुपाधौ शिवस्य तु ॥
स बिन्दुरिति मन्तव्यः सैव कुण्डलिनी मता ।

அப்பொழுது சப்த, அர்த்த, ரூப, ஸ்தாவர, ஜங்கமத்தன்மையுடன், நாநாரூப உலகத் தோற்றம் உண்டாகிறது. அதைக் குறிக்கும் அனேக தீபங்களுடன் அனேக அடுக்குக ளாய் விளங்கும் புஷ்ப ரததிபம் என்னும் மகத்தான உபசாரமாகிறது.

பிறகு அடங்கு முறையில்,

दया स्पृहानसूया च शान्तिः शौचं तु मंगलम् ।
अकार्पण्य मनायास श्चेत्यथमात्मगुणा इमे ॥

என ஸத்வ ஸம்பத்தி வாய்ந்த மகான் களுடைய ஆத்ம குணங்களைப் போன்று குறிப்பிட்ட தீபங்களுடைய ஒரு அடுக்கில் விளங்கும் நக்ஷத்ரதிப உபசாரம்.

பிரகாசமடைகிறது. பிறகு

पञ्चभूतं सप्तयोनिः प्रति तत्वं व्यवस्थितम् ।
मृगः पक्षी च पशव श्चतुर्थश्च सरीसृपः ।
स्थावरं मानुषं दैवं सप्तयोनिर्द्वियोनयः ।

என்று உயிரினங்களில் திர்யக் யோநிகளான மிருக பக்ஷி முதலியதுகளைக் குறிக்கும் தன்மையில் ஸர்ப்பம், விருஷபம், ஹம்ஸம், புருஷ மிருகம், கூர்மம், மேரு முதலிய ஸ்தாவர ஜங்கமாந்தமானத் தோற்றங்களின் உபசாரங்களுக்கு அதனதன் குறிக்கொண்ட தீபங்களும் ஆராதிக்கப்படுகின்றன.

இவ்விதம் விரிவடைந்த பின் அடங்கு முறையில்,

पञ्च ब्रह्मभिरर्चितं सुरभिमुद्रा दर्शनात् पावनं दीपं पञ्च घटान्तकं च शिवयोर्मूर्द्धादि पादान्तकम् । पाणिभ्यां भयभक्तिपूर्वमचिरादुद्धृत्य तं भ्रामयेत् पश्चान्मूल समर्चितं परमसावात्रिकं चार्चयेत् ॥

என்று பஞ்ச பிரம்ம தீபத்தில் அடங்கி அது வும் தீபத்தில் ஒன்றி உபசரிக்கும் நிலை ஏற்பட்டுப் பிறகு கர்பூர தீபத்தால் பூரண மடைய விருக்கிறது. கர்பூரம் குறைந்து ஒளி குறைய குறைய முந்தியுள்ள தமா புகையொன்றே மிச்சமாகிறது. இவ்விதம் தீப ஆராதன தரிசனத்தால் ஊழ்வினையால் நாம் அடையவிருக்கும் ஒரு கல்ப கால பிராரப்தானுபவம் கழிடை அடைகிறது. பரப்பிரம்மத்தின் அருள் விளங்க பஸ்ம தூர்வா தர்ப்பணுதி உபசாரங்கள், அஷ்ட புஷ்ப, மந்த்ர புஷ்ப முதலியதுகள், வேதாதி உபசாரங்கள், கீத நிருத்த வாத்ய முதலிய கோஷங்கள், கேட்டும் பார்த்தும் நம் உடர்ப்பிணி, உயிர்ப்பிணி நீங்கி பரமானந்த பரிதராகி சரிதார்த்தமடைகின் ரோம். ஆகவே ஊழ்வினை எளிதில் நீக்கி சுகமடையும் உபாயம் தீப ஆரர்தன தரிசன மொன்றேயாகும்.

IN SPITE OF

the rules of the road, on the spot traffic regulations, all kinds of medical devices and the vigilant eyes of the custodians of law and order.

ACCIDENTS

May at times happen while you TRAVEL BY AIR, RAIL, ROAD or SEA.

PROTECTION

through insurance minimises personal loss and

PREMIUM

are very low and attractive.

ASK FOR PARTICULARS FROM :

Indian Mutual General Insurance Society Limited

No. 35, MOUNT ROAD, MADRAS - 2

சதஸில் ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் ஆற்றிய அறிவுரைகளின் சுருக்கம்

ஒரு பிரதிஷ்டையின் போதோ கும்பாபிஷேக சமயத்திலோதான் சிவாச்சார்யாள், பட்டாச்சார்யாள் எல்லோரும் ஒன்ருக கூடுகிருர்கள்னு நேற்று கமிஷனர் பேசினுர். அந்த சமயத்திலும் கார்யமும், ராத்ரி தூக்கமும்தான் சரியா போயிடறது. அவரவர்கள் தங்கள் காரியத்தை பார்த்து கொண்டு ஊருக்குப் போய்விடுகிருர்கள். அதனுலே இந்த சதஸ்ஸினுடைய முக்ய காரியம் எல்லோரையும் ஒரு இடத்திலே சேர்க்க வேண்டும் என்பதுதான். சிவாச்சார்யாளுக்கும் பட்டாச்சாரியாளுக்கும் அவரவர்களுக்கே ஆசார்ய ஸ்தானம் உண்டு. நாம் ஒன்றும் அவர்களுக்கு உபதேசம் பண்ணவேண்டியதில்லை. எல்லாம் நன்ன நடக்கணுமே என்று அவர்களுக்கே பொறுப்பிருக்கு "நம்மை ஒருத்தரும் கவனிக்க மாட்டேங்கிராளே" என்று அவர்களுக்கு ஒரு குறை. நாம் என்ன கவனிக்க முடியும்? எல்லோரையும் ஒரு இடத்தில் சேர்த்து வைப்பதுதான் நாம் கவனிப்பது!

அந்த நாளிலே ராஜாக்களெல்லாம் ரொம்பப் படித்திருந்தார்கள். ஈசுவரபக்தியும் உடையவர்களாய் இருந்தார்கள். அவர்களெல்லாம் சிவாச்சார்யாருடன் கலந்து பேசி அவர்களுக்கு தேவையான சௌயகரியங்களையெல்லாம் செய்து கொடுத்தார்கள். அதனுலே எல்லோரையும் சேர்த்து வைப்பதுதான் என் பொறுப்பு. நீங்கதான் அதன் அபிவிருத்திக்கு பார்த்துக் கொள்ள வேண்டும். பாக்கி லௌகீக காரியம் ஏதாவது இருந்ததானுல் ஏதோ காதிலே போட்டால் கவனிக்கலாம்.

இரண்டாவது, இதர சாஸ்திரங்களில் இருக்கிறதையும் நாம் தெரிந்து கொண்டால் இன்னும் கொஞ்சம் ஞானபிவிருத்தி ஏற்படும்.

ஆகம கிரமங்களையெல்லாம் தெரிந்து கொள்ளாவிட்டாலும் நம்ம ஆகமத்தையாவது தெரிந்து கொள்ளணும். அதற்கு வேறு சந்தர்ப்பம் இல்லாததினுல் அந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி வைப்பதுதான் உத்தேசம்.

இப்போது நம்ம ராஜாங்கத்திலே சுதந்திரத்திற்காக காந்தி சொன்னுர்னு சொல்லி எத்தனையோபேர் சொத்து, உத்யோகம் இன்னும் எத்தனையோ தியாகம் செய்திருக்கிருர்கள்.

ஆனுல் கோவிலில் கைங்கர்யம் செய்கிறவர்கள் இந்த நாளிலும் எல்லோர் நிந்தனையையும் பொருட்படுத்தாது, ஜீவனத்துக்கும் இல்லாது, வீடும் இல்லாது கஷ்டப்பட்டுக் கொண்டும், வேதம் ஆகமம் எல்லாவற்றையும் ஓரளவுக்காவது காப்பாற்றி கோவிலிலெல்லாம் ஒரு விளக்காவது ஏற்றணும்னு வைத்துக் கொண்டிருக்கிருர்கள். இவர்கள்தான் பெரிய தியாகிகள் என்று எனக்குத் தோன்றுகிறது.

காஞ்சீபுரத்தில் நூறு நூற்றைம்பது கோவில்கள் இருக்கும். ஆனுல் இருக்கும் அர்ச்சகர்களோ மிகவும் சொற்பம் தான். அத்தனை கோவில்களுக்கும் இரண்டு கால பூஜையாவது நடக்கவேண்டும் என்ருல் ஒரு முன்னூறு அர்ச்சர்களாவது வேண்டும். இங்கிருந்து நைவேத்யம் வேறு கையில்

எடுத்துக்கொண்டு (சைக்கிளும் வாங்க வசதி இல்லே) நடந்து இரண்டு மூனுமைல் சுத்திவிட்டு (வாடகை சைக்கிளாக இருந் தால் அவர்களுக்கு கிடைக்கும் வரும்படி யும் அதற்குத்தான் சரியாக போய்விடும்) இதோடு ஒரு குடும்பத்தையும் வைத்துக் கொண்டு கஷ்டப்படுவதைப் பார்த்தால் ஏதோ இந்த வரைக்குமாவது சிரத்தை யுடன் இருக்கிறார்களேன்னு தோன்று கிறது. அவர்களை நிந்திப்பதே பாவம் என்று தோன்றுகிறது.

இந்த மாதிரி நிந்தை பண்ணுமல் அவர் கள் குடும்ப கஷ்டத்தை அறிந்து ஏதோ ஒரு ஆறுதலாவது, நாம் சொன்னுல் அது தான் பெரிய கார்யம் என்று நான் நினைக் கிறேன். மனுஷர்கள் என்றால் தப்பு செய்யா மல் இருக்கமுடியாது. நாலாயிரம் ஐயாயிரம் ரூபா சம்பளம் வாங்குபவர்கள் கூட தப்பு செய்வதாக அடிக்கடி பேப்பரில் வருகிறது. அவர்கள் தப்பை நாம் அறிந்து இதமா ஒரு வார்த்தை சொன்னுலேயே அவர்கள் தப்பை திருத்திவிடலாம். தப்பை திருத்த முதலில் அன்பும் அக்கரையும்தான் தேவை.

ஆபீஸர்கள் சிவாச்சார்யாளிடம் அனு தாபம் காட்ட வேண்டும். ஆபீஸர்களிடம் மேலதிகாரிகள் அனுதாபம் காட்டவேண்டும். இங்கு இப்போது மேலதிகாரிகளும் மற்றவர் களும் வந்திருக்கிறார்கள். ஒருவர்க்கொருவர் பரஸ்பரம் அனுதாபம் இருந்ததானுல் எல்லா ஸாங்நித்யமும் உண்டாய்விடும் என்று எனக்கு தோன்றுகிறது. பகவத் கீதையிலே இது தான் முக்கியமான சுலோகமாக சொல்லியிருக்கிறது. பகவான் தேவலோகம்னு ஒரு சிருஷ்டி பண்ணினார். பிறகு மனுஷ்ய லோகம்னு சிருஷ்டி பண்ணி னார். தேவலோகத்தில் இருக்கிறவர்க ளெல்லாம் நிர்வாகம் பண்ணுகிற அதிகாரி கள் மாதிரி. நாமெல்லாம் பிரஜைகள் மாதிரி கீதையிலே "தேவான் பாவயத அநேன, தேதேவான் பாவயந்துவ : பரஸ்பரம் பாவ யந்த : சிரேய : பரம் அவாப்ஸ்யத" என்று சொல்லியிருக்கிறது. காற்று, மழை, பூமி, விருக்ஷம், பயிர் எல்லாவற்றிற்கும் தனித் தனியா ஒரு தெய்வம் இருக்கு. ஒவ்வொரு தேவதைக்கும் ஒரு பெயர் வைத்து இன்ன அதிகாரம்னு வைத்து அந்தந்த தேவதை களை இவர்களுடைய கஷ்டங்களை நீக்க பிரார்த்திக்க வேண்டியது. மழை பெய் வதோ, பூச்சி பொட்டு இல்லாமல் இருப் பதோ நாம் சாகாமல் இருக்கிறதோ, பெரிய வியாதி வராம இருக்கிறதோ எல்லாம் மனுஷ்யனுடைய சக்தியை மீறி இருக் கிறது. மீறி இருக்கிறதால் தான் தேவதை கள் என்று இருக்கிறார்கள். அதற்கும் ஒரு அதிகாரி இருக்க வேண்டும் என்று சட்டம். பித்ருக்கள், தேவதைகள் இவர்களை நினைத்து ஏதோ ஒரு தீர்த்தத்தையாவது நாம் விட்டோமானுல் அவர்கள் மனது குளிர்ந்து நம் கஷ்டத்தை நிவர்த்திப் பார்கள். சிரத்தையோடு செய்வதுதான் சிராத்தம்னு பேரு. பித்ருக்களுக்கோ தேவதைகளுக்கோ செய்யும்போது சிரத்தையோடு செய்யவேண்டும்.

நைவேத்யமோ, அபிஷேகமோ செய்த பிறகு நாம் தான் அதை உபயோகப்படுத்திக் கொள்கிறோம். அது அவ்வளவு விசேஷ மில்லே. ஆனுல் நெருப்பிலே போட்டால் எடுக்க முடியாது. அதனுலேதான், அக்னி முகமாக தேவதைகளுக்கு ஆகுதி செய்கி றோம். நைவேத்தியம் செய்து நாம சாப் பிட்டோமானுல், திரும்பவும் கிடைப்பதை நினைத்துதான் நைவேத்யம் பண்ணுவது போல் ஆகிறது. அதனுல் அது கூட கோக்க ளுக்கும், குழந்தைகளுக்கும் விநியோகிப் பதுதான் நல்லது.

இப்போது டெல்லியிலே இருக்கிறவர்கள் ஆபிஸ் நடத்துகிறர்கள். இங்கே இருக்கிற வர்கள் அவர்கள் ஆகாரத்துக்கு வேண்டிய கோதுமை, அரிசி எல்லாம் பயிரிடுகிறர்கள். அதையெல்லாம் டெல்லியிலே பயிரிட ணும் என்றல் ஆபீஸ் எங்கே நடத்துவது? அதனலே நாம் சாகுபடி பண்ணி அவர் களுக்கு ஒரு பாகத்தை கொடுக்கவேண் டும். அவர்கள் நமக்கு சம்பளமாக கொடுக்க வேண்டும். நமக்கு வயலில் ஏதாவது உபத்திரவம், கஷ்டம் இருந்தால் அதை அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும். அவர் களும் நம்மை ரக்ஷிக்கவேண்டும். இந்த மாதிரி ஒன்றுக்கொன்று இருக்கு. அதுமாதிரி தான் தேவலோகமும். மனுஷ்ய லோகமும்.

ஆலய பரிபாலனற்றிற்காக முன்பெல் லாம் தனியாக என்டோன்மெண்டு போர்டு ஒன்று முனிசிபாலிடி மாதிரி, பாதி கவர் மெண்டாயும், பாதி சுதந்திரத்தோடும் இருந்தது. பிறகு அதை எடுத்துவிட்டு டிபார்ட்மெண்டிலேயே ஒரு டிபார்ட் மெண்டா இப்போது ஏற்பாடு பண்ணி விட்டார்கள். இது சர்க்காருடைய டிபார்ட் மெண்டா இருப்பதினல் சர்கார்தான் என்று சொல்லவேண்டும். இப்போது நம்ம தேவா லயங்களையெல்லாம் பரிபாலிக்க சர்க்கார் ஒன்று. அதற்கடுத்தபடி மடாதிபதிகள்தான். முன்பெல்லாம் சில பெரிய குடும்பங்கள் தனித்தனியே ஆலய பரிபாலனம் பண்ணி கொண்டிருந்தார்கள். ஆனல் இப்போது அதெல்லாம் குறைந்துவிட்டது. அந்தப் பரி பாலனம் பண்ணுகிறவர்களுடைய ஒரு முக்கியமான பொறுப்பு நமக்கெல்லாம் இருக்கிறது.

ஒரு ஊரில் ஒரு குளம் இருந்ததானல் அதில் உள்ள ஜலம் அழுக்காக இல்லாமல் சுத்தமாக இருந்தால்தான் நாம் போய் ஸ்நானம் செய்ய முடியும். நம்ம உடம்பிலே இருக்கும் அழுக்கையெல்லாம் போக்கு வதற்குத்தான் ஸ்னனம் செய்கிறேம்.

ஆனல் குளத்து ஜலமே ஆபாசமாக இருந்ததானல் நம் உடம்பு எப்படி சுத்த மாகும். அந்த மாதிரி எல்லோருக்கும் மனதுக்கு ஒரு கஷ்டம் வந்தால், ஒரு பாபம் பண்ணினல், அந்த அழுக்கையெல்லாம் நிவர்த்தி செய்து கொள்ள ஈசுவர சந்நிதா னத்திலே போய் கொஞ்ச நாழியாவது மனசு நிம்மதியா ஈசுவரனை தியானம் பண்ணி, ஈசுவர சேவை ஏதாவது பண்ணி விட்டு வரவேண்டும். மனதில் ஏற்பட்ட தாபங்களை நிவர்த்தி பண்ணிக்கதான் கோயில் என்று ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

ஆனல் இப்போது இந்த டிபார்ட் மெண்டு, கவர்மெண்டு எல்லோரும் "பழைய கலைகளுக்கு கோவில் ஒரு இருப் பிடம். பழைய கால சிற்பத்திற்கெல்லாம் இது ஒரு மியூசியம்" என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறர்கள். அப்படி நினைத்தால் நாம் கோவிலுக்கு போகவே வேண்டாமே.

நமக்கு தெரிந்த எல்லாவற்றையுமே ஈசுவரனுக்கு அர்ப்பணம் பண்ணவேண்டும் என்னும் முறையில் பண்ணினல்தான் நம் ஜன்மா கடைத்தேறும். கவியாயிருப்பவன் நிறைய ஸ்தோத்திரம் பண்ணவேண்டும், பணக்காரனயிருந்தால் நிறைய அபிஷேகம் பண்ணவேண்டும். உற்சவம் பண்ணவேண் டும். சிற்பிகளாக இருப்பவர்கள் தம் முடைய சிற்பத்தை கண்ட கண்ட இடத்திலே கொண்டு போய் அர்ப்பணம் பண்ணி தன் சிற்பத்திறனை காட்டுவதைக் காட்டிலும் ஈசுவரனுக்கு அர்ப்பணம் பண்ணி னல் நம் தோஷங்களாவது நிவர்த்தியாகும். 'மனுஷனை ஸ்துதி பண்ணமாட்டேன், ஈசுவரனைத்தான் ஸ்துதி பண்ணுவேன்' என்று தியாகய்யர் சொன்ன மாதிரி

நடந்துகொள்ளவேண்டும். ஆகையினுலே மனதிலே இருக்கிற அழுக்கை நிவர்த்தி பண்ணிக் கொள்ள கோவிலுக்கு போகிற வன் கண்ணில் அங்கு அதைவிட அதிகமா அழுக்கு தென்பட்டது என்ருல் பிறகு அவன் எப்படி பாபத்தை நிவர்த்தி பண்ணிக் கொள்ள முடியும்? கோவிலுக்குப் போனுல், போன உடனேயே அந்த சூழ்நிலே மன துக்கு ஒரு நிம்மதியை ஏற்படுத்தவேண்டும். ஒரு ஸாந்நித்யம் இருக்கவேண்டும். ஆனுல் அங்கேயும் ஒருவர்க்கொருவர் சண்டை போட்டுக்கொண்டு எங்கு பார்த்தாலும் ஆபாசம் பண்ணிக்கொண்டு, கடை கண்ணி வைத்துக்கொண்டு இருந்தால் மனதிற்கு எப்படி அமைதி ஏற்படும்? அப் போது அந்த கோயிலே உபயோகம் இல்லாமல் போய் விடுகிறது. ஆகையினுல் கோயிலேத் தூய்மையான இடமாக வைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு நிர்வாகத்தினுடையது. நாம் ஒரு கோயி லுக்குப் போகிருேம். அங்கு ஏதோ ஒரு ஆபாஸத்தைப் பார்க்க நேரிட்டால் அந்தப் பாபம் நமக்குத்தான் வந்து சேரும். உடனே அந்த அசுத்தங்கள் இல்லாமலிருக்க வழி செய்யவேண்டும்.

நம் இந்தியாவிலே ஹிந்து மதத்திற் கென்று ஏற்பட்டிருக்கும் சட்டங்களும் வடக்கே, ஒண்ணு, தெற்கே ஒண்ணுன்னு இருக்காமல் எல்லாவற்றையும் சமம் பண்ணுவதற்காக தர்ம சாஸ்திரத்திற்கு பதிலா, இப்படி Hindu Code ஆக ஏற்பாடு செய்து எல்லா தேசத்திலும் இருக்கிறவர்களுக்கு ஒரு மாதிரியான சட்டமாயிருக்கவேண்டும் என்று நினேத்து இப்போது ஏற்பாடு பண்ணியிருக்கிருர்கள்.

ஏன் இந்த மாதிரி செய்தார்கள் என்ருல் எந்த நாட்டு சட்டம் உயர்ந்ததாக இருக் கிறதோ அதை எல்லா இடத்திலும் உப யோகப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று தான்.

இருப்பதற்குள் உசத்தியாக இருக்கிற கோயில் மலேயாளத்து கோயில்தான் என்று எல்லோரும் சொல்லுகிருர்கள். இப்பவும் மலேயாளத்து கோவில்களில், கன்யாகுமரியில் எல்லாம் ரொம்பவும் ஆசாரமாக இருக்கிருர்கள். பூஜை பண்ணு கிறவர்கள் ஸ்னனம் பண்ணி விட்டுதான் உள்ளே நுழைகிருர்கள். அர்ச்சகர்களும் சரி, உள்ளே போகிறவர்களும் சரி யாரேனும் மேலே பட்டு விட்டால் திரும்பவும் ஸ்நானம் செய்து விட்டுத்தான் போகிருர்கள். அதைப் பார்த்த உடனேயே நமக்கு ஒரு தெய்வ ஸாந்நித்யம் ஏற்படுகிறது. இங்கேயிருக்கிற மாதிரி கோயில்களில் அசுத்தம் பண்ணு வது கிடையாது. இங்கெல்லாம் கோவில் களில் கதவை திறக்க வேண்டுமானுல் யாரையேனும் கூப்பிட்டு கொண்டு வந்து திறக்க வேண்டியிருக்கிறது. பக்கத்தில் இருக்கிறவர்களெல்லாம் தங்கள் வீட்டு சாமானே யெல்லாம் கோயிலில் கொண்டு போய் வைத்திருக்கிருர்கள்.

ஆகையினுல் இந்தக் கோவில்களே யெல் லாம் integrate பண்ண வேண்டு மென்ருல் கொஞ்சம் நல்ல குணங்கள் எங்கெல்லாம் இருக்கிறதோ அதை யெல் யெல்லாம் நாம் பார்த்தோமானுல் எல்லோ ருக்கும் அந்த ஞாபகம் இருக்கும். நமக்கே "தெய்வ ஸாந்நித்யம் இருக்கு, நம்முடைய கஷ்டங்களே இங்கே வந்து பிரார்த்தனே பண்ணிக் கொண்டால் நிவர்த்தியாகும்" என்கிற எண்ணம் கோயிலுக்குள் நுழைந்த வுடனே உண்டாக வேண்டும்.

இன்னெருவிஷயம். கூடிய வரைக்கும் கோயிலுக்கு வெளியிலேயே ஆபீஸ் வைக்கவேண்டும் என்று நான் இரண்டு வருடங்களாகச் சொல்லிக் கொண்டிருக்

கிறேன். ஏனென்றால், ஜனங்கள் எல்லாம் செருப்பை வெளியே கழற்றி வைத்து விட்டு வந்தாலும் ஆபீஸர்களில் வேலை செய்கிறவர்கள் மட்டும் பூட்ஸை கழற்றாமல் அப்படியே ஆபீஸில் வந்து நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு வேலை செய்கிறார்கள். பெரிய பக்தர்களாக இருக்கிறவர்கள் நின்று கொண்டு உணர்ச்சி வசப்பட்டு கண்ணில் ஜலம் விட்டு ஸ்வாமி தரிசனம் செய்யும் போது இவர்கள் ஆபிஸில் பூட்ஸ் அணிந்து கொண்டு நாற்காலியில் உட்காந்து வேலை செய்வதே அந்த சூழ்நிலைக்கு விரோதமா இருக்கிறது. மேலும் ஆபீஸ்களில் இருக்கும் சிலருக்கு சுருட்டு பிடிக்கும் பழக்கம் வேறு இருக்கும். பெரிய ஆபீஸர்கள் வந்தால் அவர்களுக்கும் இந்தப் பழக்கம் இருந்தால் அதை யாராலும் தடுக்கவும் முடியாது. இந்த மாதிரி அசந்தர்ப்பமெல்லாம நேராமல் இருப்பதற்கு ஆபீஸ் கோயிலுக்கு வெளியில் இருப்பது தான் நல்லது. அதிலும் சில ஊர்களில் பெண்களையும் வேலைக்கு வைத்துக் கொண்டுவிட்டார்கள். அதனாலே ஊரிலே வேறு கெட்ட பெயர் வரும்படியாக நேருகிறது. ஆனால் நான் சொல்லி இப்போது பெண்களை வேலைக்கு வைப்பதில்லை கோயிலுக்கு வெளியில் ரூம் கட்ட கோவிலுக்கு பணம் இல்லை யென்றால் ஜனங்களிடமிருந்து வசூல் பண்ணிக் கொள்ள வேண்டும். எந்த ஊரில் வசூல் ஆகவில்லையோ அந்த ஊரிலிருந்து என்னிடம் வந்து சொன்னால் நான் எனக்குத் தெரிந்தவர்கள் யாரிடமாவது சொல்லி கட்டித்தரச் சொல்லுகிறேன்.

பழைய காலத்தில் யாரையாவது ஒருத்தன் கெட்டுப்போக வேண்டுமென்றால் அவனுக்கு மணியம் வேலை கொடு என்று சொல்லும் வழக்கம். ஆதி சங்கராச்சார்யாள் கூட ஒரு இடத்திலே மணியம், கிராமதிகாரி இவர்களோடு கூட மடாதிபதியையும் சேர்த்திருக்கிறார். ஆகையினால் நாம் எல்லோரும் இங்கே ஒன்றாக சேர்ந்திருக்கிறோம்!

இந்த வேலையில் காரியமும் செய்ய வேண்டியிருக்கிறது. உள்ளே ஒண்ணு வெளியில் ஒண்ணுன்னு வைத்து பேச வேண்டியிருக்கிறது. வேறு எங்காவது இந்தத் தவறு நேர்ந்தால் கோவிலில் போய் சாந்தி பண்ணி கொள்ளலாம். கோவில் காரியத்திலேயே தவறு செய்தால் வேறு எங்கு போய் பாபத்தை நிவர்த்தி பண்ணிக் கொள்ள முடியும்? இந்தக் கோவில் மடாதிபதி வேலையிலும், கோவில் நிர்வாஹ வேலையிலும் இந்த மாதிரி நேர்ந்து விடுகிறது. ஆகையினால் நாம் எல்லோரும் நம்மை பரிசுத்தி பண்ணிக்கொள்ள வேண்டும்.

சாதாரணமாக சவுண்டீ கரணத்தில் ஒரு பிராம்மணன் வந்து சாப்பிடவேண்டும். அப்படி சாப்பிட்டால் அதற்குப் பிறகு ஜன்ம ஜன்மமா அவனுக்கு பிராமணீயமே கிடையாது. அதற்காக பயந்து கொண்டு ஒருவருமே சாப்பிடவரவில்லை என்றால் அந்தக் காரியம் எப்படி நடக்கும்? அது மாதிரி மணியம் வேலையில் தவறு செய்ய நேரும் என்று பயந்து கொண்டு ஒருவருமே அந்த வேலைக்கு வராவிட்டால் அந்த வேலை எப்புடி நடக்கும்?

பெரிய மஹான்கள் எல்லாம் எந்த இடத்தில் ஈசுவர ஆராதானம் செய்து தங்கள் தபஸால் எந்த தெய்வத்திற்கு ஸாந்நித்யத்தை அளித்து இருக்கிறார்களோ அந்த அனுக்கிரஹம் ஜனங்களுக்குக் கிடைக்கவேண்டுமானால் அதுலே ஒரு விளக்காவது ஏற்றவேண்டும். இதற்கெல்லாம் ஒரு மணியம் அவசியம் தேவை. அதனால் அவரவர் தங்கள் வேலையை

செய்து கொண்டாலும் மடாதிபதி, மணியம், எக்ஸிகூடிவ் ஆபீசர் எல்லோரும் அதற்கு பிராயசித்தம் செய்து கொள்ள வேண்டும்.

எக்ஸிகூடிவ் ஆபீஸர்கள் ஒருகால பூஜைக்காவது கூடவே இருந்து அந்த பூஜை முடியும் வரைக்கும் வேறு ஒன்றை யும்நினைக்காமல் ஈசுவர நாமத்தை சொல் லிக் கொண்டிருந்தால் அதுவே அவர் களுக்கு ஒரு பிராயசித்தம்.

நிலமென்று ஒன்று இருந்தால் அந்த நிலத் தின் சொந்தக்காரன் கூட அங்கே வந்து நின்றால் தான் அது நன்றாக விளையும் என்று சொல்கிற வழக்கம். இவன் நிலத்தை கவனிக்காமல் வீட்டிலேயே இருந்தால் அது எப்படி நன்றாக விளையும்? அது போல எக்ஸிகூடிவ் ஆபீஸர்களும் பூஜை நடக்கும் போது கூடவே வந்து இருந்தால் அவர்கள் பாபத்திற்கு பிராயசித்தமாக இருப்பதோடு பூஜை நடக்கும் போது ஏதாவது தவறு நடந்தாலும் தெரியவரும். அர்ச்சகர்களும் பெரிய அதிகாரி வந்திருக்கிறார் என்ற பயத்தில் பூஜையையும் அக்கறையாக செய்வார்கள். ஜனங்களும் ஏதாவது குறை யிருந்தால் நேரடியாக ஆபீஸர்களிடம் முறையிடலாம்.

மணியமும் தன் தொழிலில் செய்யும் தவறுக்கு பிராயசித்தமாக ஒரு கால பூஜைக்கோ அல்லது இரண்டு கால பூஜைக்கோ கூடவே இருந்து வேறு ஒன்றையும் நினைக்காது ஈசுவர நாமத்தை சொல்லி பகவான் அனுக்ரஹத்தை பெற்றுக் கொண்டிருந்தால் சிவ சொத்திலிருந்து நாம் சாப்பிடுகிறோம் என்கிற ஒரு தோஷ மாவது நிவர்த்தியாகும். எக்ஸிகூடிவ் ஆபீஸர்கள் அவரவர்கள் எந்தெந்த பரம் பரையை சேர்ந்தவர்களோ அந்த பரம்பரை தீக்ஷையை பெற்று அந்த ஜபத்தை பூஜை சமயத்தில் பக்தியோடு பண்ணிக்கொண்டே இருந்து மற்றவர்களுக்கும் வழிகாட்ட வேண்டும்.

சுதந்திரமடைந்து பதினேழு வருடம் ஆகியும் இவ்வளவு பெரிய இந்தியா இவ்வளவு சிறிய பாகிஸ்தானுக்கு பயப்பட வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நம்மிடத்தில் இல்லாத ஒரு தெய்வபக்தி அவர்களிடத்தில்



இருப்பது தான். மாலை வேளையானால் நாம் உல்லாசமாக பொழுதைக் கழிக்கும் போது அவர்கள் (முஸ்லீம்கள்) தங்கள் பிரார்த்தனையை செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள்.

வெளி நாட்டிலிருந்து வருபவர்கள் எல்லாம் நம் வேதாந்தத்தைத்தான் அறிய வருகிறார்களே தவிர வேறு மதத்தின் தத்துவங்களை அறிய வருவதில்லை. அத்தனை உயர்ந்த philosophy நம்முடையது. இவ்வளவு அனுதியான தியானம், அனுஷ்டானம் எல்லாம் நம் சாஸ்திரத்தில் இருந்தும் நாம் அதை பொருட்படுத்தாமல், கடைப்பிடிக்காமல் இருப்பதனால் நமக்கு தெய்வானுக்கிரஹம் இல்லாமல் நாம் பயந்து கொண்டே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இத்தனை தத்துவங்கள் நம் சாஸ்திரத்தில் இருந்தும் நாம் அதை அலக்ஷியம் செய்யும் ஒரே தோஷத்தினால்தான் தேசத்திற்கே இவ்வளவு பெரிய ஆபத்து வந்துள்ளது.

அர்ச்சகர்கள் எல்லாம் தங்களுக்கு சம்பளம் என்று ஏதாவது கொடுத்து விட்டால் தேவலை என்றும் ரொம்ப பேர் ஜீவனத்துக்கூட இல்லாமல் கஷ்டப்படுவதாகவும் சொல்லுகிறார்கள். இந்த விஷயத்தில் ராஜாங்கத்தார் ஏதாவது செய்து தரவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். 'இந்தக் கஷ்டத்தினால்தான் அவர்களும் இந்தத் தொழில் நம் தலை முறையோடு போகட்டும் நம் சந்ததிகளும் இப்படி கஷ்டப்பட வேண்டாம்' என்று சொல்ல நேரிடுகிறது.

ஆனால், இந்த விஷயத்தில் இதற்கு எதிராகத்தான் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. இவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு இருந்தாலும் சம்பளம் என்று எதுவும் கேட்கக்கூடாது. கொடுத்தாலும் பெற்றுக் கொள்ளக்கூடாது. இந்த தெய்வ காரியத்தை ஆத்மார்த்தமாக பண்ண வேண்டும் என்பது என் அபிப்ராயம். வேறு ஏதாவது தொழில் வேண்டுமானாலும் செய்து கொண்டு இந்த காரியத்தையும் செய்து கொள்ளட்டும்.

நான் இவ்வாறு சொல்லுவதற்குக் காரணம் இதற்கு கிரேடு, சம்பளம் என்று வைத்துவிட்டால் எல்லோரும் மனுப்



போட ஆரம்பித்து விடுவார்கள். இதனுல் இதுவரை நீங்கள் கடைப்பிடித்துக்கொண்டு வரும் தீக்ஷை, பரம்பரை, நம் சாஸ்திரம், ஆகமம் எல்லாம் தொலைந்து போய்விடும். இதுவும் ஒரு சர்க்கார் ஒரு சர்வீஸ் மாதிரி ஆகிவிடும். அதனுல் சம்பளத்தை எதிர் பார்க்காமல் பகவானிடத்தில் நித்யம் ஆயிரம் பஞ்சாக்ஷரம் பண்ணிக் கொண் டிருந்தால் சுவாமி தானுக மனசு வந்து எங்கிருந்தாவது நமக்கு கொண்டு வந்து தருவார். கமிஷனரிடம் போய் கேட்பதற்கு பதில் சாமியிடம் போய் ஆத்மார்த்தமாக வேண்டிக் கொண்டாலே நமக்கு எல் லாம் தானுக கிடைக்கும்.

எல்லாவற்றிற்கும் மூலம் எக்ஸிகூடிவ் ஆபீஸர்கள்தான். ராஜாங்கத்திற்கும் சரி, டிரஸ்டிகளுக்கும் சரி, அர்ச்சகர்களுக்கும் சரி, கோவில் சுத்தமாக இருப்பதற்கும் சரி எல்லோர் வசவுகளையும் வாங்கிக் கொண்டு, எல்லோருடைய பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு அதில் பாபம் நேர்ந்தாலும் பொறுப்புடன் அந்த காரியத்தை நடத்தி ஈசுவர அனுக்கிரஹத்தினுல் நாடே க்ஷேம மாக இருப்பதற்கு கோவிலை மூலமாக வைத்துக் கொண்டு தொழிலை செய்ய வேண்டும்.

'சில்பம்', 'பிக்சர்' என்று இந்த டூரிஸ்டு பார்த்துக் கொண்டு போவதால் ஒன்றும் நாடு அபிவிருத்தி அடையப்போவதில்லை. ஈசுவரனுக்கு பணி செயது, ஸாந்நித்யத்தை வளர்த்து, அசுத்தியில்லாமல் பார்த்துக் கொண்டு, தெய்வத்தினிடத்தில் மனதை உறுதியாக வைத்துக்கொண்டு, காலாகாலத் தில் நடக்க வேண்டிய காரியங்களை நாம் கவனித்துக் கொண்டிருந்தால் இந்தியா கட்டாயம் அபிவிருத்தி அடையும், க்ஷேம மாக இருக்கும் என்பது என் அபிப்ராயம். அப்படியே இருக்க வேண்டுமென்று ஈசுவரன் அனுக்கிரஹம் செய்யவேண்டு மென்று பிரார்த்திக்கின்றேன்.

ஒவ்வொரு கோவிலிலும் ஆபீஸ் வெளியில் இருக்க வேண்டும் என்றும், கோவிலில் அசுத்தம் செய்வது கூடாது என்றும், ஒரு கால பூஜைக்காவது எக்ஸி கூடிவ் ஆஸர்கள் கூடவே இருக்கவேண்டு மென்றும் மூன்று விஷயங்களைப்பற்றியும் சொன்னேன். 'சுவாமி இருக்கிருர் எல்லாம் கவனித்துக்கொள்வார் நாம் எதற்கு பிரயத் தனம் பண்ண வேண்டும்' என்ருல் சுவாமி இருக்கிருர் என்று நாம் சம்பளம் வாங்கா மல் இருக்கிரேமா? அதனுலே சுவாமி நமக்கு புத்தி, கைகால் எல்லாம் சுவாதீன மாகவும் கொடுத்திருக்கிருர். இதெல்லாம் நாம் கடவுளுக்கு செய்வதற்குத்தான் என்று சாஸ்திரமும் சொல்லியிருக்கிறது. நமக்கு எஜமானிடத்தில் உண்மையான அன்பு இருந்ததானுல் அவன் மனதில் நினைப்பதை சொல்வதற்குள் நாமே செய்து விடுவோம். அது மாதிரி சாஸ்திரங்களில் சொல்லி யிருப்பதை, அந்தக் கடமைகளை நாம் செய்ய வேண்டும்.

சோம்பேறித்தன மில்லாமல் நல்ல பிரயத் தனம் எவனுக்கு இருக்கிறதோ அவனிடத் தில் மஹாலக்ஷ்மி, தானுகவே பரிபூர்ணமா அனுக்கிரஹம் செய்வாள் என்று சொல்லி யிருக்கிருர்கள். அந்த மாதிரி நாம் ஒரு நெறியா இருந்து கொண்டு ஈசுவர கைங்கர் யம் செய்து கொண்டு வந்தால் லோகம் முழுவதும் க்ஷேமமாக இருக்கும்.

நான் இப்போது எங்கு போனுலும் ஆத்திக்கீரை பயிர் பண்ணும்படியாக சொல்லிக் கொண்டிருக்கிறேன். பசு மாட் டுக்கு மேய்ச்சல் தரைகளே இருப்பதில்லை. அங்கெல்லாம் சாகுபடி பண்ண ஆரம்பித்து விட்டார்கள். அப்படிக் கூட நமக்கு உணவு

போதவில்லை. அப்படி இருக்க பசு மாட்டுக்கு எங்கிருந்து ஆகாரம் கிடைக்கும்? மாடெல்லாம் இப்படி எலும்பாக இருக்கிறதே என்று சொன்னால் சாப்பிடுவதற்கு தங்களுக்கே போருதபோது அவற்றிற்கு என்ன செய்ய முடியும் என்று சொல்லி வருத்தப் படுகிறார்கள்.

ஆகையினால் காலி மனைகளிலோ, சொந்த நிலம் ஏதாவது இருந்தால் அதிலோ ஒரு வேலியைப் போட்டு அங்கு ஒரு கிணற்றை வெட்டினால் அதைக் காட்டிலும் புண்யம் இல்லை. நாம் இருந்து என்ன பிரயோஜனம்? இருப்பதையெல்லாம் சாப்பிட்டு விடுகிறோம். திரும்பவும் பூமியில் அசுத்தப் படுத்துகிறோம். பூமியிலிருந்து உற்பத்தி செய்யும் படியான காரியம் ஒன்றும் செய்ய வில்லை. அதனாலே இருக்கும் நிலத்தில் ஒரு வேலி போட்டு ஒரு கிணறை வெட்டி ஆத்திக்கீரை பயிரிட்டு நம் கையாலேயே தண்ணீர் ஊற்றும் படி செய்யவேண்டும். அகத்திக் கீரையை திருடிக் கொண்டு போனாலும் அது பசுமாட்டுக்குத்தான் போய்ச் சேரும். ஆகையினால் விலைக்குக் கொடுத்தாலும் சரி, தர்மமாகக் கொடுத்தாலும் சரி, திருடிக் கொண்டு போனாலும் சரி, ஆகாரத்தை உற்பத்தி செய்து விட்டால் பிறகு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. இதுவே பெரிய புண்யம்.

எல்லா மனுஷ்யாளும் "இந்த நாளில் நம்மால் என்ன தர்மம் செய்ய முடியும். இப்படி ஏழையாக இருக்கிறோமே" என்று நினைக்கிறார்கள். ரொம்ப சுலபமான தர்மம் சுமைதாங்கி கட்டிவைப்பதுதான். இதற்கு வேலி போட வேண்டியதில்லை. தண்ணீர் ஊற்ற வேண்டியதில்லை, ரிப்பேர் செய்ய வேண்டியதில்லை. அதனால் சுலபமான முதல் தர்மம் இதுதான்.

இரண்டாவது தண்ணீர் பந்தல். இதற்கு கொஞ்சம் கவனிப்பு, ஜாக்கிரதை எல்லாம் தேவை. மூன்றுவது ஒரு மனையோ திடலோ அவற்றைக் கொஞ்சம் அடைத்து ஒரு சிறு கிணறுவது எடுத்து ஆத்திக்கீரை பயிரீட்டு ஆடு மாடு தின்னும் வரைக்கும் தண்ணீர் விட்டு கவனித்துக் கொண்டு ஒரு ரெண்டு வருடம் வளர்த்து விட்டால் பிறகு பத்து வருடத்திற்கு அது கொடுத்துக் கொண்டே இருக்கும். நாம் கவனிக்கவே வேண்டாம்.

இது மாதிரி சிறிய தர்மங்களை ஏழையாக இருந்தாலும் செய்யலாம். இதோடு கூட ஒவ்வொரு கோவிலிலும் பிரகாரத்தை ஜாக்கிரதையாக ரிப்பேர் செய்து வைத்துக் கொண்டு ஒரு வேலியாவது போட்டு அங்கு பாதி ஆத்திக்கீரை, பாதி ஏதாவது புஷ்பம் பயிராக்க வேண்டும். செடிகளாயிருந்தால் அதற்கு கவனிப்பு தேவை. அதனால் புஷ்பம் தரும் மரங்களாக இருந்தால் அதிகமாக கவனிக்க வேண்டியதில்லை. இரண்டு மூன்று வருடத்தில் எக்ஸிகூடிவ் ஆபீஸரை மாற்றுவதற்குள் இந்த காரியத்தை செய்து விட்டால் பின்னால் புஷ்பம் கொடுத்துக் கொண்டே இருக்கும். மரமந்தாரை, பவழமல்லி கொன்னை சண்பகம் இதெல்லாம் மரத்திலே மலரும் புஷ்பங்கள். இதெல்லாம் எப்பவும் தானாக உதிர்ந்து கொண்டே இருப்பதனால் யாராவது அவர்களாகவே பொறுக்கி சுவாமிக்கு கொண்டு வைத்து விடுவார்கள்.

பிறகு கோவில்களில் இரண்டு பசுமாடாவது வாங்கி வைத்துக் கொள்ளவேண்டும். அதிலிருந்து ஒரு கால்சேர் பாலாவது சுவாமிக்கு அபிஷேகம் செய்யவேண்டும். இப்போது வர வர க்ஷீராபிஷேகம் பண்ண வேண்டுமென்றால் பவுடர் பால் வரைக்கும்

வரும்படியாக ஆகிவிட்டது. கவர்மெண்டு பாலாஞல் அவர்கள் யந்திரம் வைத்துக் கொள்வதனுல் சிலசமயம் கோமாமிசம், இரத்தம் கூட அதில் வந்து விடுகிறது. இதைக் காட்டிலும் அபசாரம் கிடையாது. இதெல்லாம் இல்லாமலிருக்க ஒரே வழி கோவிலுக்கென்று பசு தனியாக வைத் திருப்பது தான். ஒன்று மரத்துப் போனுலும் இன்னென்று உபயோகப்படும்படியாக இரண்டு பசு இருக்கவேண்டும். அதற்கு ஆகாரத்திற்கென்று ஆத்திக்கீரை கோவிலுக் குள்ளேயே பயிரிட்டுக் கொள்ளவேண்டும்.

இரண்டாவது இப்போது அநேக இடங் களில் எக்ஸ்கர்ஷன் வருகிருர்கள். அதில் ஹைஸ்கூல், காலேஜ் பெண்கள் எல்லாம் இருக்கிருர்கள். இருநூறு பேர் வந்தால் அதில் பத்து பெண்களாவது வீட்டுக்கு விலக்காக இருக்கிருர்கள். எல்லா தீட்டைக் காட்டிலும் இது தான் ரொம்பத் தப்பான தீட்டு என்று நம் சாஸ்திரங்களில் சொல்லி யிருக்கின்றது. அதுதான் பெரியவர்கள் முதற்கொண்டு அனுஷ்டானம் பண்ணிக் கொண்டிருக்கிறேம். இத்தீட்டை கோவி லுக்குள் வேறு கொண்டு போகும்படியான அஸந்தர்பங்கள் நேர்ந்துவிடுகிறது. இதனுல் தெய்வ ஸாந்நித்யம் குறைந்து போய் விடு கிறது. அந்தப் பெண்களுக்கு, தினம் பள்ளிக்கூடம் போய் வருவதனுல் இது தவறு என்றே தெரிவதில்லை. அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் கூட்டமாக வரும்போது அவர்களிடம் தனியாக, மரியாதையாக விஷயத்தை சொல்லி அது போல ஏதாவது இருந்ததானுல் அவர்களை கோவிலுக்குள் வராதிருக்கும்படியாக சொல்லவேண்டும். இந்தக் காரியத்தை அர்ச்சகர்களோ, பாக்கி பேரோ செய்யமுடியாது. அதிகாரியாக இருப்பவர்கள்தான் இந்த காரியத்தை செய்யவேண்டும். சில சமயங்களில் பந்தோபஸ்துக்காக வேண்டி ஸ்கவுட்ஸ் எல்லாம் வருகிருர்கள். சில சமயங்களில் ஹிந்துக்கள் அல்லாதவர்களும், மாமிசம் சாப்பிடுபவர்களும் அவர்களில் இருக்கிருர் கள். நாம் எவ்வளவு ஆகமம், சாஸ்திரம் எல்லாம் உள்ளே சொல்லிக் கொண்டிருந் தாலும் இப்படி சில அபசாரங்கள் ஸாந் நித்யத்திற்குக் குறைவாக ஏற்பட்டு விடு கிறது. இதற்காக எவ்வளவோ மஹரிஷிகள் ஸாந்நித்யம் பெற்ற இடத்தை விட்டு விட்டு வரமுடியுமா? அந்த சந்தர்ப்பங்களில் முடிந்தவரைக்கும் சாஸ்திரங்களில் சொல்லி யிருக்கும் பரிஹாரத்தை செய்யவேண்டும்.

அப்படி இல்லையென்ருல் இருப்பதற்குள் கொஞ்சம் சுலபமான காரியமாக, நேர்ந்த அஸந்தர்ப்பங்களுக்கெல்லாம் ஒரு தோஷ பரிகாரமாக ஸாந்நித்யத்தை வளர்க்க வேண்டியது தான் நம் காரியம். சர்க்கார் சட்டத்திற்கும் விரோதம் இருக்கக்கூடாது. நம் ஸாந்நித்யத்தையும் ரக்ஷிக்க வேண்டும். அந்த சாஸ்திரத்தை நம்பித்தான் இவ்வளவு ஆகம சாஸ்திரத்தைப் பேசினேம்.

இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் ஆராய்ந்து தனியாக ஒரு திட்டம் போட்டு அந்த சமயத் தில் அது ஆனபிறகு தான் எல்லோருமே தரிசனத்திற்கு வரவேண்டும் என்று வைத்து அதற்கு ஸேவை பண்ண எத்தனை பேர் வேண்டுமோ அவர்கள் மட்டும் உள்ளே இருந்து கொண்டு அந்த ஒருகால பூஜையை மட்டும் தனியாக ஏகாந்தத்தில் பண்ணிவிட வேண்டும். இதற்கு அர்ச்சகர்களும் சிரமப் படவேண்டும். அவர்களும் கொஞ்சம் சீக்கிரமாகவே வந்து உஷத்காலத்திலேயே ஏகாந்தமாக பூஜை செய்து விட்டு தீபா ராதனை சமயத்தில் மட்டும் தர்சனுர்த்திகளை உள்ளே போக அனுமதிக்க வேண்டும்.

இதற்கு எக்ஸிகூடிவ் ஆபீஸர்களும் அனுகூலம் பண்ணவேண்டும். இது இரண்டாவது காரியம்.

மூன்ருவதாக திருப்பதியில் தரிசனத்துக்கு வருபவர்கள் கூட்டம் தாங்க முடியாததாக இருக்கிறபடியால் ஒருவருக்கும் ஸ்வாமியை சரியாக தரிசனம் பண்ண முடிவதில்லை. இதை நிவர்த்திக்க டிக்கட்டு வைத்து தர்ம தரிசனம் தனியாக, டிக்கட்டு வாங்கி செய்யும் தரிசனம் தனியாக வைத்திருக்கிருர்கள். பணம் சேர்ப்பதற்கென்று இந்தக் காரியம் செய்யவில்லை. இது இல்லாமலேயே ஏகப்பட்ட பணம் பகவானுகவே சம்பாதித்துக் கொண்டு விடுகிருர். பாக்கி கோவில்களிலும் இதையே பின்பற்றி பணம் வருமே என்னும் எண்ணத்தில் டிக்கட்டு வைக்க ஆரம்பித்து விட்டார்கள். சாதாரண இடங்களிலெல்லாம டிக்கட்டு வைத்தால் வெளியூர்களிலிருந்து திடீரென்று வருகிறவர்கள் தரிசனம் பண்ணிக் கொண்டு உடனே போகவேண்டும் என்று விரும்பினுல் அவர்களுக்கெல்லாம் டிக்கட்டு இல்லாமல் இருந்தால் தேவலை என்று எனக்குத் தோன்றுகிறது. டிக்கட்டு இல்லாமல் இருந்தாளுல் தரிசனம் செய்கிறவர்கள் குழந்தைகள் தந்தையை பார்க்கப் போவதுபோல் Free யாக உள்ளே போய் தரிசனம் பண்ண முடியும். இந்த விஷயத்தில் என் அபிப்ராயத்தை சொல்லிவிட்டேன். நீங்களெல்லாம் (கமிஷனர், எக்ஸிகூடிவ் ஆபீஸர்) யோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

சதஸில் கலந்துகொண்ட சில ஸ்தபதிகள் :

1. *சதாசிவரத்*
2. *கணபதி ஸ்தபதி*
3. *கௌரிசங்கர ஸ்தபதி*

கோயிலில் மெய்க் காவலன் முதற் கொண்டு, தர்மகர்த்தா, எக்ஸிகூடிவ் ஆபீஸர் வரைக்கும் அததை அப்பப்போ instruct பண்ணி தேவாலயத்தை சரியாக நடத்துவது, கோயிலில் உற்சவம் நடத்துவது, கட்டளை நடத்துவது எல்லாவற்றையும் கவனிக்க வேண்டும்.

கோவிலில் கைங்கர்யம் பண்ணுகின்றவர்கள் எல்லோரும் க்ஷேமமாக இருக்கவேண்டும், சுவாமி எல்லோருக்கும் அனுக்கிரகம் பண்ணவேண்டும் என்று எல்லோருக்கும் பொதுவாக நான் இந்த விபூதியை இட்டுக் கொண்டேன். ஆகையினுல் தனித் தனியாகவும் கொடுக்கச் சொல்லுகிறேன். ஊரில் போய் அந்தந்த தேவஸ்தானத்தில் இருக்கும் மெய்காவல்காரன் முதற்கொண்டு எல்லோருக்கும் அதை கொடுக்கும்படியாக கேட்டுக் கொள்கிறேன்.

நம : பார்வதி பதயே. ஹர ஹர மகாதேவா.

கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்தா கோவிந்தா

மங்களம்

ஓம் சாந்தி : ஓம் சாந்தி : ஓம் சாந்தி:

திக் பரீக்ஷை (சங்கு ஸ்தாபனம்)

பி. ராஜரத்தின ஸ்தபதி—பவானி

ஆதித்திய உதயமுண்டான அளவிலே, கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு திக்குகளை நிச்சயம் செய்வதற்கு, சங்கு ஸ்தாபனத்தால், அளவு நிர்ணயம் சொல்லப்படுகிறது. தை மாதம் முதல் ஆறு மாதம் உத்தராயண காலம், ஆடி மாதம் முதல், மார்கழி மாதம் வரை ஆறு மாதங்கள் தக்ஷிணுயணம். வைகாசி, ஆடி, ஆனி, அவணி இந்த நான்கு மாதமும் மேஷ வீதியில் ஆதித்யன் உதயமாவது, பங்குனி, புரட்டாசி, ஐப்பசி, சித்திரை இந்த நான்கு மாதமும், ரிஷப வீதியில் ஆதித்யன் உதயமாவது, கார்த்திகை மார்கழி, தை, மாசி இந்த நான்கு மாதங்களும், மிதுன வீதியில் ஆதித்யன் உதயமாவது, இப்படி, மேஷம், ரிஷபம், மிதுனம் இந்த மூன்று வீதிகளிலும் 12, மாதமும், ஆதித்யன் சஞ்சரிப்பான். நாளுக்கு நாள் ஆதித்யன் கொஞ்சம் கொஞ்சம், விலகி விலகி உதயமாவதால் ஸ்தாபன சாய்கையால், கிழக்கு மேற்கு சூத்திரம் நிச்சயிக்கப்படுகிறது.

சங்காவது, சந்தனம் கருங்காலி வேம்பு சண்பகம் தேக்கு தேவதாரம், யானைக் கொம்பு இவையினுல் ஆவது. 24, விரல் நீளமும் அடிப்பரப்பு விரல் 5ம் தலைப் பரப்பு விரல் ஒன்றும் அடிப்புறத்திற்கு தலைப்புறம் குரைவாகவும் திரளக் கடைந்து மேல் நுனி குடைப்பிறம்பு நுனி போல் திரட்டிக் கொள்வது உத்தம சங்காம். 18 விரல் நீளமும் அடிப்பரப்பு விரல் 4ம் தலைப்பரப்பு விரல் $\frac{3}{4}$ம் மத்யம சங்காம். கந்யச, சங்குவிற்கு 12 விரல் நீளமும் அடிப்பரப்பு விரல் 3ம், தலைப்பரப்பு விரல் $\frac{2}{1}$ மாம். இந்த மூன்று சங்கும் உத்தம சங்கு போலவே லக்ஷணம் சொல்லப்படா. நின்றது. இந்த சங்குகளின் உயரத்தை 96 அம்சம் விரலாகக் கொள்வது, அந்த விரலாலே மாதங்களுக்கு கமனம் (விலக்கம்) சொல்லப்படுகிறது.

கொள்ளப்பட்ட வாஸ்துவான பூமியை மய்யத்தில் சமதளமாக்கி, நீர்மட்டம் கொண்டு மட்டசுத்தம் செய்து ஒரு தண்டு (நான்கு முழம்) விஸ்தாரத்தில் சதுரமாகச் செய்வான். அந்த பூமி மய்யத்திலே சங்குவை ஸ்தாபித்து சங்கு மய்யத்தில் நின்று விருத்த மண்டலமாக வீசுவான், அந்த மண்டல விஸ்தாரம் சங்குவின் உயரத்தைப்போல் ரெட்டிப்பாய் ஆவது, ஆதித்யன் உதயமானுல் சங்குவின் சாய்கை பூர்வச் சாய்கையானது விருத்த மண்டலத்தில் தொட்டால் அதில் குரித்துக்கொள்வது அபரச் சாய்கையானது விருத்த மண்டலத்தில் தொட்டால் அதிலும் குரித்துக்கொள்வது. பூர்வச்சாய்கை அபரச் சாய்கை இரண்டும் தொட்டகுரியில் நூலைப்பிடிக்கில் கிழமேல் சூத்ரமாம்.

ஆதித்யனைவர் தை மாதம் முதல் ஆனி மாதம்வரை ஆறு மாதம் உத்தரத்தில் வருவார். ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை ஆறு மாதம் வரை தக்ஷிணத்தில் வருவார். இப்படி வருவதில் எல்லா நாளுக்கும் சாய்கை, கிழக்கு, மேற்கு சமனுய் வருமென்றறிவான்.

புரட்டாசி மாதம் முற்பத்துக்குச் சமன், நடுப்பத்துக்கு விரல் 1 கடைப்பத்துக்கு விரல் 2, ஐப்பசி மாதம் முற்பத்துக்கு விரல் 2, நடுப்பத்துக்கு விரல் 3, கடைப்பத்துக்கு விரல் 4, கார்த்திகை மாதம் முற்பத்துக்கு விரல் 4, நடுப்பத்துக்கு விரல் 5, பிற்பத்துக்கு விரல் 6. மார்கழி மாதம் முற்பத்துக்கு விரல் 6. நடுப்பத்துக்கு விரல் 7, பிற்பத்துக்கு விரல் 6. மாசி மாதம் முற்பத்துக்கு விரல் 6. நடுப்பத்துக்கு விரல் 5, பிற்பத்துக்கு விரல் 4. பங்குனி மாதம் முற்பத்துக்கு விரல் 4, நடுப்பத்துக்கு விரல் 3, பிற்பத்துக்கு விரல் 2. சித்திரை மாதம் முற்பத்துக்கு விரல் 2, நடுப்பத்துக்கு விரல் 1, பிற்பத்துக்கு சமம். வைகாசி மாதம் முற்பத்து சமம். நடுப்பத்து விரல் 1. பிற்பத்து விரல் 2. ஆனி மாதம் முற்பத்து முற்விரல் 2, நடுப்பத்து விரல் 3, பிற்பத்து விரல் 4. ஆடி மாதம் முற்பத்துக்கு விரல் 4 நடுப்பத்து விரல் 3, பிற்பத்துக்கு விரல் 2. ஆவணி மாதம் முற்பத்துக்கு விரல் 2, நடுப்பத்துக்கு விரல்

1, பிற்பத்துக்கு சமம். இப்படி ஆதித்யன் மனம் தள்ளி வருவதில் சாய்கை கிழக்கு மேற்கு சமனாக உத்தராயணத்துக்கும், தக்ஷிணாயணத்துக்கும் வருவாரென்றறியவும்.

சாய்கை அபரச்சாய்கை தொட்ட குரிமய்யமாக இரண்டு பிந்துவை வீசினால் கயலாகும். அந்தக் கயல் முகத்திலும் கடையிலும் நூலைப்பிடிக்கில் தென்வடம் சூத்ரமாம். வெள்ளைப் பருத்தி நூல் மூன்று முப்புரியாய் 27 கயிறாக முறுக்கி 10 முழ நீளத்தில் தரித்து அந்த நூலாலே கிழ் மேலும், தென்வடலும் ஒழுங்கிடுவான். கருங்காலி, இலுப்பை, மூங்கில், பாலை வேம்பு இந்த மரங்களில் ஒன்று 11 விரல் முதல் 21 விரல் வளர அக்ரத்தில் பருமனாகவும் அடியில் கிருசமாகவும் முனையைச் செதுக்கி அடிப்பான்.

இது அன்றி வேறொரு விதம் சங்குவின் விதி சொல்லப்பட்டது. மரத்தினாலே 12 விரல் நீளத்தில் அடிக்குத்தலைக் கிருசமாய் திரளக் கடைந்து 24 விரல் நெத்தியில் குறுக்களவு பூமியில் விருத்தமாக வீசி மய்யத்தில் சங்குவை நாட்டி, அந்த சங்குவின் நிழல், மேற்கு கிழக்கு விருத்த ரேகையில் தொட்டால் அதில் குறியிட்டு அந்தக் குரியில் நூலைப்பிடிக்கில் கிழக்கு மேற்கான திக்கு அறிவான். கிழக்கு மேற்கு தொட்ட குரிமய்யமாக இரண்டு பிந்து வீசினால் கயலாம், இக்கயல் மய்யம் நூலைப்பிடிக்கில் தெற்கு வடக்கு அறிவான். சித்திரை மாதம், வைகாசி மாதம் ஆடி மாதம், ஆவணி மாதம், ஐப்பசி மாதம், கார்த்திகை மாதம், தை மாதம், மாசி மாதம் இந்த எட்டு மாதங்களில் திவி காலத்தில் பூர்ண மாஸியில் சங்குவை வைப்பான்.

சங்குவை முன் சொன்னபடியே ஸ்தாபித்து விருத்தம் வீசி அந்த சங்குவி சாய்கை விருத்தத்தில் தொடுவதை கிழக்கு மேற்காக குறிப்பதாம் அந்தக் குறி எல்லா மாதங்களுக்கும் சங்கு வைக்கினும் பூர்வச் சாய்கை, அபரச் சாய்கை சமனாகவறும். ஆகையாலே மேற்கு கிழ கிழக்கு வந்த குறியிலும் நூலைப்பிடித்தால் கிழமேல் சூத்ரமாவது. அந்த சங்குவாலான சூத்ரம் வாஸுவான பூமியில் வாஸ்துக்களுக்கும் கொள்ளுவது அந்த ஸூத்ரத்திலிருந்து ஈசான்ய விலக்கம் பிராசாதங்களுக்கும் சபைகளுக்கும் மண்டபங்களுக்கும் கிரஹங்களுக்கும் கொள்ளுவது.

ஆயதம், சதுரம், விருத்தம் இவைகளாலான கிரஹம் இவைகள் கிழக்குப் பார்த்தும் வடக்குப் பார்த்தும், ஈசான்ய விலக்கம் கொள்வதாம். தெற்குப் பார்த்தும் மேற்குப் பார்த்தும், கன்னியா விலக்கம் கொள்வதாம். அக்னியையும், வாயுவையும் பார்க்கலாகாது. ஈசானம் பார்க்கில் லக்ஷ்மிகரமாம். அக்னி பர்சவம் பார்க்கில் மிகுந்த தோஷமாம். கன்னியைப் பார்க்கில் ராஜாவுக்கும் ராஜ்யத்துக்கும் சுபம் உண்டாம். வாயுவைப் பார்க்கில், கர்த்தாவுக்கும், புத்திர[illegible]
கும் ஹானி உண்டாகும். கார்த்தா[illegible]
சில்பியும் புத்திமானாக யோசித்து [illegible]
வான். ஆலயம் பிரமாணம் கொ[illegible]
சுத்தளவை 100, நூறு அம்சம் செ[illegible]
ஒரு அம்சம் சங்குவை வைத்து கிழ[illegible]
அறிந்த சூத்ரத்தில் நின்றும் முன்வா[illegible]
விலக்கம் (ஈசான்ய விலக்கம்) வை[illegible]
மய்யமாகக் கொள்ளுவான்.

சிவாலயத்தில் தேவீ கோட்டம்

கௌரீசங்கர ஸ்தபதி—சுவாமி மலை

காஞ்சி மாநகரை சோமாஸ்கந்த புரம் என்றும் கூறுவார்கள். சிவக் கோட்டம், குமரக் கோட்டம், சக்தி கோட்டம் என முறையே ஸ்வாமிக்கும் அம்பாளுக்கும் நடுவில் ஸ்கந்தன் குமரக் கோட்டமாக அமைந்திருப்பது காஞ்சி ஒன்றில்தான் காணலாம். எனவேதான் இதை சோமாஸ்கந்தபுரம் என்றனர் பெரியோர்.

மானசாரம், மயமதம் போன்ற கிரந்தங்கள் முதலில் நல்ல பூமியாக தேர்ந்தெடுத்து கிராம நிர்மாண லக்ஷணப்படி வீதிகள் வகுத்து அந்தக் கிராமத்தின் தலை கால் தெரிந்து கிராம தேவதை என்கிற ஸ்ரீகாளியையோ ஸ்ரீகாமாகரியையோ ஸ்தாபனம் செய்ய, கோவில் கட்ட காரணம் கூறுகின்றன. இந்த கோயில்களை மன்னனோ பொதுமக்களோ விஸ்வகர்ம சமூகத்தின் மேற்பார்வையில் மான்யங்கள் வழங்கி, அந்த கிராமத்தை நிர்மாணித்த ஸ்தபதிகளுக்கு உரிமையாகக் கொடுத்திருக்கிறார்கள்.

சிவாலயத்தில் ஸ்தாபனம் செய்யப்பட்ட நிஷ்களங்க லிங்கத்திலிருக்கும் சக்தி தனித்து இருக்கின்ற சக்தி, வியாபித்து இருக்கின்ற சக்தி என மூவகைப்படும்.

वह्नेरुष्णत्ववच्छक्तिः अविनाभाविनी विभोः ॥

நெருப்பில் உஷ்ணமிருப்பதுபோல் சிவத்தில் சக்தித் தத்வம் அமைந்திருக்கிறது. இதே போல் ஸதாசிவாதி பஞ்சமூர்த்திகளுக்கும் சக்தி நாம ரூபங்கள், மனோன்மணீ, ஈஸ்வரி, உமா, சாவித்திரீ முதலிய சக்தி ரூபங்கள் கூறப்படுகின்றன. இந்த சக்திகள் உலகத்தை ரக்ஷிக்கும் பொருட்டு பிரிந்தன. ஆதி சக்தியிலிருந்துதான் எல்லா சக்திகளும் பிரிந்தன.

கேவலம், ஸஹஜம், பௌஷ்ணியம் எனக் கூறுமிடத்தில் கேவலம் என்பது அதி உசிதமானது, சிறந்து என்பர் பெரியோர். சக்தியைத் தனியாகவும் ஸ்தாபிதம் செய்ய ஆலயம் கட்டலாம். ஆதியில் சிவலிங்க பிரதிஷ்டை செய்திருந்தால் அதற்கு யுக்தமாக சக்தியை ஸ்தாபனம் செய்யலாம். ஐக்ய சக்தி, கூட இருக்கும் சக்தி, தனித்து இருக்கும் சக்தி என விபரம் கூறுகின்றது. இதை மூன்றுகப் பிரித்து யோக சக்தி, போக ச க் தி, வீரசக்தி எனக் கூறுவர். யோக சக்தியானவள், சிவலிங்கத்தின் பீடலிங்காகிருதியுடன் ஐக்ய சக்தியாக விளங்குகிறுள். மூலஸ்தான லிங்க சமீபமாகவோ, அல்லது அர்த்தமண்டபத்திலோ, போக சக்தியானவள். ஜகத் ச்ருஷ்டியின் யின் காரணமாக கௌரியாகவும் உமையாகவும் காக்ஷியளிக்கிறுள். வீர ஸ்வதந்திர சக்தியானவள் சதுர்வித புருஷார்த்தங்களையும் அநுகரஹம் செய்ய ஸ்வதந்திர சக்தியாக விளங்குகிறுள்.

ஸ்வாமி சன்னிதியில் பிராகார கோஷ்டத்தில் வடக்குப் பக்கத்தில் வடக்குப் பார்த்து துர்க்கை ஸ்தாபனம் செய்யப்படவேண்டும். இச்சா, ஞான, கிரியா சக்தியில் ஒருவளாக, ரக்ஷிக்க விஷ்ணு சக்தியாக விளங்குகிறுள்.

சிவாலயத்தில் தேவீகோட்டம் இரண்டாவது மூன்றாவது பிரகாரத்தில் நிர்மாணிக்கலாம் என்றும், முதல் பிராகாரத்தில் ஸ்வாமிசன்னிதியில் யோகசக்தி, போகசக்தி, வீரசக்தி அடங்கியுள்ளதால் அதற்குத் தனித்த உத்ஸவாதிகள் இல்லை என்றும் ஸ்வாமி சன்னிதியாயின் இரண்டாவது பிராகாரத்தில் நவசக்தி ஆவரணத்துக்குள் அம்பாள் சன்னிதி இருந்தால் தனிப்பட்ட ப்ரும்மோத்ஸவாதிகள் செய்ய ப்ரமாணம் கூறவில்லை ஆகையால் மூன்றாவது ப்ராகாரத்தில் ஸ்வதந்திர சக்தி ஆலயம் நிர்மாணிக்கலாம்.

ஸ்வதந்திர சக்திக்கு பூ ர ண அங்கங்களோடு த்வஜஸ்தம்பம், பலிபீடம், சிம்மபிடம், உள்பட அமைத்து, கார்த்திகேயன், விஷ்ணுமூர்த்தி, கேசவன், மாதாவுக்கு பரிவார க்ஷேத்ரபாலர்களாக அமைக்கக் கூறுகிறது. ஸ்வதந்திர சக்திக்கு பிராசாதம், கோபுரம், ப்ராகாரம் யாவும் தனியே அமைத்து பிரம்மோத்ஸவம், சக்தி உத்ஸவம் தனியாகச் செய்யலாம். எனவே சிவாலயத்தில் தேவி கோட்டம் ஸவாமிசன்னிதிக்கு வாம பாகத்தில் பூர்வ, தக்ஷிண, பச்சிம உத்தராத்யாதி தேவதாஸ்வரூப மாக லோக க்ஷேமத்தினை பொருட்டு, அனேக நாமரூபங்களோடு எழுந்தருளி யிருக்கிறுள். ஆதிசக்தி கிழக்கும், இச்சாசக்தி தெற்கும் ஞானசக்தி வடக்கும், கிரியா சக்திக் மேற்குமாக த்வார பார்வைகள் அமையவேண்டும்

ஆயாதி கணிதம்

வை. கணபதி ஸ்தபதி, (மகாபலிபுரம்)

ஆலயங்களை நிறுவி அவற்றில் இறைவனின் திருமூர்த்தங்களை ஸ்தாபித்து வழிபடுதல் வாயிலாகவும், மனை கட்டிடங்கள் கட்டி அதில் வாழ்வதின் மூலமாகவும் மனிதன் அநேக நன்மைகளை அனுபவிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் சிற்ப சாஸ்திரங்கள் அநேக விதிகளை வலியுறுத்துகின்றன. உலகப் பெருக்கத்திற்காகவும் யோகிகளின் உபகாரத்திற்காகவும், தேவர்களின் நன்மைக்காகவும், எல்லையற்ற, மேலான ஞானமாகிய சிவஞானத்தை அடையும் பொருட்டும், கர்ஷணம் முதல் அர்ச்சனை வரை உள்ள விஷயங்களைக் கூறுவதாக பறை சாற்றிக் கொண்டே சிற்பநூல்கள் தொடங்குகின்றன. உதாரணமாக காஸ்யப மஹா சில்ப கிரந்தத்தில்

जगतामभिवृध्यर्थं योगिनां उपकारकम् ।
देवानां च हितार्थाय शिवज्ञानं परं महत् ॥
महार्थमल्पग्रन्थं च कर्षणाद्यर्चनान्तकम् ।

என்று முதல் அத்யாயத்தின் முற்பகுதியில் கூறப்பட்டிருக்கிறது. க்ஷேமலாபத்தை அடையும் பொருட்டு கூறப்பட்ட அநேக விதிகளில் ரகஸ்யமானதும் அதிமுக்கியமானதுமாக கருதப்பட்டு வழிவழியாகக் கடைப்பிடித்து ஒழுகப்படுவது ''ஆயாதி லக்ஷண விதி'' யாகும். இவ்விலக்கணத்திற்கிணங்க செய்து வழிபடும் பிம்பங்களும் ஆலயங்களும் லக்ஷ்மீகரத்தை விரசனுக்கும் மக்களுக்கும் நல்கும் என்பது சாஸ்திரக் கோட்பாடும் அனுபவித்து வரும் உண்மையுமாகும்.

नृपकर्तुश्च वास्तूनां सर्वसम्पत्करार्थकम् ॥
आयादिभिरुपेतं यन्मानं तच्छीकरं भवेत् ।
अपेतं सर्वदोषं स्यात् तस्मादायादि सम्युतम् ॥

''சகளாதிகாரம்.''

சிற்பியானவன் ஒரு கோயிலை கட்டுவதற்கு அல்லது திருவுருவத்தை உண்டாக்குவதற்கு முன்பாக இரண்டு முக்கிய அம்சங்களை அறிதல் வேண்டும். ஒன்று கர்த்தாவின் பொருளாதார நிலை, இரண்டு பெருத்த நன்மையை அவனுக்கும் அவனைச் சேர்ந்தோருக்கும் கொடுக்க வல்ல ஆலயப் பிரமாணம் அல்லது பிம்பப் பிரமாணம். ஒரு கோவிலை அல்லது மனையை அல்லது திருவுருவத்தை எத்தனையோ பிரமாணங்களில் உருவாக்கலாம். ஆனால், அவை எல்லாம் வழிபடுவோருக்கும், கர்த்தாவிற்கும் நன்மைகளைச் செய்ய முடியாது என்பது சாஸ்திரக் கொள்கையாகும். ஒரு சில நன்மைகளைத் தரும்; மற்றும் சில தீமைகளை விளைவிக்கும். நீண்ட ஆயுளைப் பெற்று. புத்திர பௌத்திரர்களை அடைந்து, செல்வத்தோடும் இன்பமாகவும் இல்வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற கருத்தோடு ஒரு ஆண் மகனுக்கு ஏற்ற ஒரு பெண்ணை எங்ஙனம் பொருத்தமாகத் தேர்ந்தெடுக்கின்றோமோ அங்ஙனமே நன்மைகளைத் தரும் பிரமாணமாகத் தேர்ந்தெடுத்து அந்தப் பிரமாணத்திலேயே ஆலயங்களையும் பிம்பங்களையும் கட்டவேண்டும் என்பதே இதன் உட்கருத்தாகும். நன்மை தரும் அளவை நிர்ணயிப்பதற்கு கையாளப்படும் இலக்கணம் அல்லது சூத்திரம் ஆயாதி லக்ஷணம் அல்லது ஆயாதி சூத்திரம் எனப்படும்.

'ஆயம்' என்பது வரவு அல்லது லாபமாகும். ஒரு பிரமாணத்தைக் கைக்கொள்வதால் ஏற்படும் லாபம், நஷ்டம் முதலியவற்றைக் கூறும் சூத்திரமாகையால் ஆயாதி—ஆயத்தை முதலாக ஆதியாகயுடைய—சூத்திரம் எனப் பெயர் பெற்றது.

ஆயாதி சூத்திரங்கள் பல வகைப்படும். ஆறு வகையான விஷயங்களை மட்டும் கொண்டுள்ளது ஷடாயாதி என்றும். பத்து விஷயங்களை மட்டும் எடுத்து ஆள்வது தசாயாதி என்றும், பதினாறு அம்சங்களை ஆராய்வது ஷோடஸ ஆயாதி அல்லது பூர்ணாயாதி என்றும். சொல்வது ஒரு மரபு. ஆயாதி சூத்திரங்கள் ஐந்து வகைப் படும் என்றும் அவை முறையே, 1. பூர்ண ஆயாதி. 2. அம்ச ஆயாதி. 3. அதம ஆயாதி. 4. அதமாதம ஆயாதி

5. நிதன ஆயாதி—என்று விஶ்வகர்மீயம் என்ற சிற்பசாஸ்த்திரம் குறிப்பிடுகிறது. பூர்ண ஆயாதி என்பது பதினாறு விஷயங்களையும். அம்ச ஆயாதி என்பது பத்து விஷயங்களையும், அதம ஆயாதி என்பது பத்து விஷயங்களையும், நிதன ஆயாதி என்பது ஆறு விஷயங்களையும் எடுத்து ஆள்பவையாகும்.

இனி ஆயாதி சூத்திரங்களில் மிகச் சிறியதும், சிறப்புமிக்கதுமான ஷடாயாதியின் விஷயங்களையும் அவற்றை கணித்து பிரமாணங்களின் குண தோஷங்களை எங்கனம் காண்பது என்பதை ஓர் உதாரணத்தினால் இங்கு விளக்குவோம். பிறகு ஒவ்வொரு ஆயாதியும் எடுத்துக் கொள்ளும் விஷயங்களை மட்டும் தொடுத்துக் கூறி ஆயாதிகளின் பெரிய ஆயாதியாகிய ஷோடஶ ஆயாதியை விளக்கி கூறுவோம்.

ஆயாதி ஒவ்வொன்றிலும் எடுத்து ஆளப்படும் விஷயங்களின் பலாபலன் அறியும் முறையில் அநேக நுணுக்கங்களும் வாதங்களும் உண்டு. அவற்றை எடுத்துக் கூறப் புகின் தனி நூல்வடிவில் பெருகும் என்ற ஐயத்தால் முக்கியமான விஷயங்களை மட்டும் இங்கு கூறுகிறேன்.

ஷடாதியில் அடங்கிய ஆறு விஷயங்கள் முறையே.

1. ஆயம்.
2. வியயம்.
3. யோனி.
4. தினம்.
5. வாரம்.
6. அம்சம்—ஆகும்.

ஆயம் வரவு அல்லது லாபத்தையும், வியயம் செலவு அல்லது நஷடத்தையும், யோனி திக்தேவதைகளையும், தினம் நஷத்திரங்களையும், வாரம் கிழமைகளையும் குறிக்கின்றன.

வரவாகிய ஆயம் 12 வகைப்படும். ஒவ்வொன்றின் பெயர் பலனையும் குறிப்பிடுகின்றது. அவை முறையே, சஸ்த்ரம், விருத்தி, வாழ்வு, நன்மை, கண், வளர்ச்சி, வடிவம், மேன்மை, ஐசுவரியம், சுகம், நல்ல வளர்ச்சி, நிறைந்த வருமானம் என்று மானசாரம் என்ற சிற்பநூல் கூறுகிறது.

शस्त्रवृद्धिभरणं शुभावहं,
चक्षुर्वृद्धिरूपं सुमङ्गलम् ।
श्रीकरञ्च शुभदं सुवृद्धिदं
पुष्कलाय रविवत्फलं क्रमात् ॥

சகளாதி காரம் என்ற சிற்ப சாஸ்திரத்தில் ஆயங்களின் பெயர்களை கீழ்க் கண்டவாறு காண்கிறோம். அவை முறையே, யோகம் (அதிர்ஷ்டம்), போகம் (சுகானுபவம்), சம்பிராப்தி (கிடைத்தல்), வீரம் தான்யம், தனம், சுகம், தருமம், ஞானம் யோகம், சித்திதம் (சித்தியைக் கொடுப்பது), அர்த்த தாயகம் (செல்வத்தைக் கொடுப்பது.

योगं भोगं च सम्प्राप्तिं वीरं धान्यं धनं सुखम् ।
धर्मं ज्ञानं च योगं च सिद्धिदं चार्थदायकन् ।
द्वादशायतनामानि यथार्थं तत्फलानि वै ॥

செலவாகிய வியயம் பத்து விஷயங்களை பற்றியது. அவை முறையே புக்தி, முக்தி, சுபதம் (சுபத்தை தருவது), ஸம்ருத்திகம் (நிறைவை தருவது), ஸம்பதம் (சம்பத்தை தருவது), தனம், மேன்மை, புக்தி நாசம், கலகம், நட்பு—ஆகும். சொற்கள் காட்டும் பொருளே பலனாகும் ஆயம் அதிகமாகவும் வியயம் குறைவாகவும் இருத்தல் சுபத்தைக் கொடுக்கும். வியயம் அதிகமாகவும் ஆயம் குறைவாகவும், அல்லது இரண்டும் சமமாக இருந்தால் சம்பத்தை குறைக்கும்.

आयाधिक्यं व्ययं क्षीणं तत्फलं शुभदं स्मृतम् ।
व्ययाधिकसमं यत्तत सर्वसम्पत् क्षयो भवेत् ॥

யோனி என்பது துவஜம். தூமம், சிம்மம், சுவானம், விருஷபம், கழுதை, கஜம், காகம் ஆகிய திசை அடையாளங்களை குறிக்கும். இந்த யோனிகளை கிருஹ பந்தங்கள் என்று ஒரு சாஸ்திரம் கூறுகிறது.

ध्वजो धूम्रश्च सिंहश्च श्वावृषखरएव च ।
गजोऽध्वाक्षस्तथैतानि गृहबन्ध स्स उच्यते ॥

வாஸ்துவித்யா என்ற ஒரு சிற்பநூல் இந்தயோனிகளை திக்தேவதைகள் என்றும் கூறுகிறது.

ध्वजः सिंहो वृषो हस्ती महादिक्देवताऽह्यमूः ।
विदिङ्नाथास्तु धूमः श्वा खरो ध्वाक्ष इति स्मृताः ॥

மனுஷ்யாலய சந்திரிகா என்ற நூல் யோனியை கிருஹங்களின் பிராணன் என்று சிறப்பித்துக் கூறுகிறது.

योनिः प्राणाएव धाम्नां यदस्मात्,
ग्राह्यः तत्तद्योग्ययोनि प्रभेदः ॥

எட்டு யோனிகளில் துவஜம், சிம்மம், விருஷபம், கஜம் ஆகியவை சுப யோனிகள் என்றும் மற்ற நான்கு யோனிகளை அசுபயோனிகள் என்றும் கொள்ளுதல் வேண்டும். சுபயோனிகள் நான்கில் துவஜயோனி பெரிதும் விரும்பப் படுத சிறந்ததும் ஆகும்.

தினம் என்பது அசுவதி முதலான 27 நக்ஷத்திரங்களையும் வாரம் என்பது ஞாயிறு முதலான 7 கிழமைகளையும் குறிக்கும்.

அம்சம் என்பது தஸ்க்கரன், புக்தி, சக்தி, தன்யன், நிருபன், கிலீபன், நிர்பீதி, தரித்ரன், பிரேஷ்யன் (சேவகன்) இவர்களுக்குரிய குணத்தை தரும். இந்த 9 அம்சங்களில் தஸ்க்கர அம்சம், கிலீப அம்சம், தரித்ர அம்சம் ஆகிய மூன்றும் நீக்கத்தக்கவை. மற்றவை கொள்ளத் தக்கவை.

இனி ஆயாதி கணிக்கும் முறையை 2 உதாரணங்களின் மூலம் எடுத்துக்காட்டி அதன்பின் பூர்ண ஆயாதி கணித சூத்திரங்களைக் கவனிப்போம்.

ஓர் ஆலயம் கட்டப்பட்டிருப்பதாகவும், அதில் ஸ்தாபித்து வழிபடத்தக்க ஒரு மூர்த்தத்தின் அளவை பொருத்தமாக கண்டுப் பிடிக்க வேண்டியதாகவும் அதனை செய்விப்பவர் விசாக நக்ஷத்திரத்தில் ஜெனித்தவராகவும் ஊரின் நக்ஷத்திரமாகிய வாஸ்து நக்ஷத்திரம் சித்திரை யென்றும் கொள்ளுவோம்.

மூர்த்தத்தின் உயர அளவை 11 முறைகளில் பெறலாம். அவை முறையே

1. லிங்க மானத்தால்
2. கெர்ப்ப மானத்தால்
3. துவார மானத்தால்
4. அதிஷ்டான மானத்தால்
5. பாத மானத்தால்
6. ஹஸ்த மானத்தால்
7. தால மானத்தால்
8. எஜமான உதயமானத்தால்
9. பேராங்குல மானத்தால்
10. மானுங்குல மானத்தால்
11. மாத்ராங்குல மானத்தால் —

என்று பிம்ப மானம் 11 வகையாகும். இதில் ஏதாவதொரு மானத்தை சிற்பி எடுத்தாள வேண்டும்.

உதாரணமாக மானுங்குல பிரமானத்தை கையாளுவதாகவும் அவ்வளவில் 17 அல்லது 18 அங்குலம் பொருத்தமுடையதாக உள்ளதா என்பதை இங்கு சோதிப்போம்.

கைக்கொண்ட அளவுகளாகிய 17, 18 ஆகிய எண்களில் இருந்து ஒருவகை நக்ஷத்திரம் கணிக்கப்படும். இதனை நக்ஷத்திரம் என்று குறிப்பிடுதல் மரபு. கைக் கொண்ட எண்ணை 8-ஆல் பெருக்கி 27-ஆல் வகுத்து வரும் மீதி வரும் எண் அசுவதி முதலான 27 நக்ஷத்திரங்களைக் காட்டும். உதாரணமாக மீதம் 1-ஆனல் அசுவதியையும், 3-ஆனுல் கார்த்திகையையும், 5-ஆனுல் மிருகசீருஷத்தையும், 25-ஆனுல் பூரட்டாதியையும் மீதம் இல்லாவிடில் ரேவதியையும் குறிக்கும்.

சோதனைக்கு எடுத்துக்கொண்ட 17 என்ற எண்ணை 8-ஆல் பெருக்கி 27-ஆல் வகுத்தால் மீதி 1. எனவே இது அசுவதியை குறிக்கும். இஃது 17 என்ற எண்ணின் ஆயாதி நக்ஷத்திரம் ஆகும். இதேபோல் 18 அங்குலத்திற்கு கிடைக்கும் மீதி 9. இந்த எண்ணுக்கு ஆயில்யம் நக்ஷத்திரமாகும்.

இங்ஙனம் ஆயாதி நக்ஷத்திரம் கண்டு பிடிக்கப்பட்ட பின் கர்த்தாவின் ஜென்ம நக்ஷத்திரம் தொடங்கி ஆயாதி நக்ஷத்திரம் வரை எண்ணி தினப் பொருத்தம் பார்த்தல் வேண்டும். எந்த நக்ஷத்திரமிருந்து தொடங்குகிறதோ அதிலிருந்து 9-வது நக்ஷத்திரம் முடிய உள்ள நக்ஷத்திரங்கள் யாவும் முதல் பிரிவு அல்லது பர்யாயத்தை சேர்ந்தது யென்றும் 10 முதல் 18-வது நக்ஷத்திரம் வரை உள்ள நக்ஷத்திரங்களை 2-வது பர்யாயத்தை சேர்ந்தவை யென்றும் 19 முதல் 27 வரையுள்ள நக்ஷத்திரங்கள் 3-வது பர்யாயத்தை சேர்ந்தவையென்றும் அறிதல் வேண்டும். இங்ஙனம் ஒவ்வொரு பர்யாயத்திலும் வரக்கூடிய நக்ஷத்திரங்களுக்கு வரிசையாக பலன்களும் உண்டு. அவை முறையே ஜென்மம், சம்பத், விபத்து, க்ஷேமம், பிரத்யரம், சாதகம், வதம், மைத்திரம், பரம மைத்திரம்— ஆகும். ஒவ்வொரு சொல்லின் பொருளே பலனுகும். கர்த்தா நக்ஷத்திரம் முதல் ஆயாதி நக்ஷத்திரம் வரை எண்ணியது முதலாவது, இரண்டாவது, அல்லது மூன்ருவது பர்யாயத்தில் இருப்பின் அப்பர்யாயத்தில் எத்தனையாவது என்பதையறிந்து அதற்குரிய பலனை நோக்கி தள்ளுதல் அல்லது கொள்ளுதல் வேண்டும்.

உதாரணத்தில் கொண்ட கர்த்தா நக்ஷத்திரமாகிய விசாகத்திலிருந்து ஆயாதி நக்ஷத்திரம் 2-வது பர்யாயத்தில் 4-வதாகிய க்ஷேமதாரையை காட்டு

கிறது. எனவே 17 அங்குல பிரமாணம் கொண்ட மூர்த்தம் எஜமானர்க்கு க்ஷேமத்தை தரும் என்பது உணர்த்தப் படுகிறது. பிறகு வாஸ்து நக்ஷத்திரமாகிய சித்திரையிலிருந்து ஆயாதி நக்ஷத்திரமாகிய அசுவதி வரை எண்ணினுல் ஆயாதி நக்ஷத்திரம் 2-வது பர்யாயத்தில் 6-வதாகிறது. இது சாதகதாரையைக் குறிக்கிறது. எனவே கர்த்தாவிற்கும் ஊராகிய வாஸ்துவிற்கும் மிகப் பொருத்தம் உடையது, என்று மதித்தல் வேண்டும். மற்ருெரு அளவாகிய 18-அங்குலத்திற்கு கிடைத்த ஆயாதி நக்ஷத்திரம் 3-வது பர்யாயத்தில் மூன்ருவதாகிய 'விபத்'தாரையை குறிப்பதால் இவ் வளவில் செய்து வழிபடும் மூர்த்தம் அசுபபலன்களை விளைவிக்கும் என்பதை உணர்ந்து இதனை நீக்குதல் வேண்டும். இதனை தாரா பலன் என்றும் சொல்வதுண்டு. இப்பலனைக் கொண்டே முதல் சோதனைச் செய்து பிறகு மற்ற அம்சங்களை கவனித்தல் மரபு.

பிற விஷயங்களை கீழ்க்கண்டவாறு கணித்துத் தீர்மானிக்க வேண்டும். ஒவ்வொரு விஷயத்தையும் ஆயாதி எண்ணையே ஆதாரமாகக் கொண்டு கணிக்க வேண்டும்.

ஆயாதி எண்ணை 8-ஆல் பெருக்கி 12-ஆல் வகுத்து வரும் மீதம் ஆயபலனையும்

ஆயாதி எண்ணை 9-ஆல் பெருக்கி 10-ஆல் வகுத்து வரும் மீதம் வ்யய பலனையும்

ஆயாதி எண்ணை3-ஆல் பெருக்கி 8-ஆல் வகுத்து வரும் மீதம் யோனியையும்

ஆயாதி எண்ணை 9-ஆல் பெருக்கி 7-ஆல் வகுத்து வரும் மீதம் வார பலனையும்

ஆயாதி எண்ணை 4-ஆல் பெருக்கி 9-ஆல் வகுத்து வரும் மீதம் அம்ச பலனையும்—தரும்.

உதாரணத்தில் கொண்ட 17க்கு பிற பலன்களை பின்வருமாறு.

ஆயம் :—$17 \times 8 \div 12 = 11\ \frac{4}{12}$ மீதி 4; வீரம் அல்லது சுபவாஹம்.

வஹயம் :—$17 \times 9 \div 10 = 15\ \frac{3}{10}$ மீதி 3 சுபதம்.

ஆயம் அதிகமாகவும் வியயம் குறைவாகவும் இருத்தல் வேண்டும் என்பது விதி.

யோனி :—$17 \times 3 \div 8 = 6\ \frac{3}{8}$ மீதி 3; சிம்ம யோனி.

வாரம் :—$17 \times 9 \div 7 = 21\ \frac{6}{7}$ மீதி 6; சுக்ர வாரம்.

அம்சம் :—$17 \times 4 \div 9 = 7\ \frac{5}{9}$ மீதி 5; ராஜ அம்சம்.

மேற்கண்ட பலன்களை கவனிக்கும் போது எல்லாம் சுபமானதாக இருக்கின்றன. எனவே 17 அங்குல பிரமாணம் உடைய மூர்த்தம் விசாகத்தில் தோன்றிய கர்த்தாவுக்கும், வாஸ்துவுக்கும் நன்மையை தரவல்லது என்பது பெறப்படுகிறது. இந்தப் 17 என்ற எண் 17 அங்குலமாகவோ, 17 முழமாகவோ, 17 தாளமாகவோ, 17 மாத்ராங்குலமாகவோ இருக்கலாம். என்பது சூத்திர ரகசியமாகும். இத்தகைய நற்பலன்களை 18 என்ற எண்ணிலிருந்து கிடைப்பதில்லை. எல்லா பிரமாணங்களும் நன்மையான பலன்களைத் தருவது இல்லை. ஒரு சில எண்கள் நன்மைகளையும், மற்றும் சில எண்கள் தீமைகளையும் காட்டும். ஒருவருக்கு பொருத்தமான ஆயாதி எண் மற்ருெருவருக்கு பொருத்தமாகவும் பொருத்தம் இல்லாமலும் இருக்கலாம். பொருத்தமான அளவுகளை சிற்பியானவர் கணித்து, பலனறிந்து தேர்ந்தெடுத்தல் வேண்டும். தோராயமான அளவை முதலாவதாக தேர்ந்தெடுத்தல், இடம், பொருள் ஆகிய வற்றைப் பற்றியதாகும்.

சிற்ப சாஸ்திரத்தில் கூறப்பட்ட ஆயாதி விஷயம் மிக விரிவும், எண்ணற்ற விதிகளும் விதிவிலக்குகளும் நுணுக்கங்களும் நிறைந்தவை. அவற்றை இங்கு குறிப்பிடின் மிக விரிவடையும் என்பதை எண்ணி சுருக்கமாக ஆயாதி வழிமுறைகளை மட்டும் குறிப்பிட்டுள்ளேன். இனி பூர்ண ஆயாதியில் அடங்கிய 16 அங்கங்கள் அல்லது அம்சங்களை கவனிப்போம். அவ்விஷயங்கள் முறையே

1.	ஆயம்	9.	ராசி
2.	விரயம்	10.	வயது
3.	யோனி	11.	பூதம்
4.	தினம்	12.	குணம்
5.	வாரம்	13.	சூத்திரம்
6.	அம்சம்	14.	நேத்ரம்
7.	வம்சம்.	15.	கணம்
8.	பக்ஷம் (திதி)	16.	யோகம்.

பூர்ண ஆயாதியை ஒரு புருஷ வடிவமாக கருதி அவ் வடிவத்தில் பூர்ண ஆயாதியின் விஷயங்களை பொருத்திக் காட்டி தத்துவமாக கூறுவதுண்டு. இதனை தேக ஆயாதி என்றுச் சொல்வது. ஆயத்தை பூதமான உடலாகவும், விரயத்தை சுவா

சமாகவும், யோனியை வாகனமாகவும், நக்ஷத்திரத்தை சிரசாகவும், வாரம், பக்ஷம் ஆகியவற்றை இரு கைகளாகவும், வம்சம், அம்சம் ஆகியவற்றை இரு கால் களாகவும், வயதை ஆயுளாகவும், யோகம், கணம், குணம் ஆகியவற்றை அந்தந்த பலனுகவும், சந்திரனைத் திருஷ் டியாகவும், சூத்திரத்தை பிராணனுகவும் இத்தத்துவம் வர்ணிக்கிறது.

மேற்குறிப்பிட்ட பூரண ஆயாதியில் வரும் 16 விஷயங்களில் முதல் 6 விஷ யங்கள் ஏற்கனவே ஷடாயாதியில் விளக் கப்பட்டவை. எனவே எஞ்சியுள்ள 10 விஷயங்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவை எவற்றை குறிக்கின்றன என்பதை யும் அவற்றை கணிக்கும் விதிகள் பலன்கள் ஆகியவற்றையும் நோக்கு வோம்.

வம்சம் என்பது பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ஆகிய 4 பிரிவுகளைக் குறிப்பிடும். திதி, பிரதமை முதலிய 15 திதிகளாகும். ராசி மேஷம் முதல் மீனம் வரையுள்ள 12 ராசிகளை குறிக்கும். பூதம், பிருதிவி, அப்பு, வாயு, தேயு, ஆகா சம் ஆகிய பஞ்ச பூதங்களையும், குணம், சாத்விக, ராஜஸ தாமச குணங்களையும், கணம் தேவ, மானுஷ, ராக்ஷஸ கணங்க ளையும் குறிக்கும். [இக்குணங்களை தாக்ஷிணுக்னி குணம், கார்ஹபத்தியாக்னி குணம், ஆஹவனியாக்னி குணம் என்றும் சொல்வதுண்டு.] சூத்திரம் என்பது ராஜன், பாலன், விருத்தன், குமாரன், மரணம் ஆகிய 5 நிலைகளை குறிக்கும். நேத்ரம் என்பது ஏகநேத்ரம், துவி நேத் ரம் ஆகியவற்றையும் யோகம் என்பது அமிர்தயோகம், சித்தயோகம், மரண யோகம் ஆகிய மூன்றையும் குறிப்பிடும். இங்ஙனம் பூர்ண ஆயாதி ஆயம் முதல் யோகம் வரை 16 விஷயங்களை கவனிக்கி றது.

இனி ஒவ்வொன்றையும் எங்ஙனம் கண்டுபிடித்தல் வேண்டுமென்பதை நோக்குவோம்.

முன்னர் கூறிய ஷடாயாதியில் ஆயம், விரயம், யோனி, தினம், வாரம், அம்சம் ஆகிய 6 விஷயங்களை கண்டறியும் முறையைக் கூறினேம். எனவே எஞ்சி யுள்ள வம்சம் முதல் யோகம் வரை அட அடங்கிய 10 விஷயங்களை எடுத் துக்கொள்வோம். ஆயாதி எண்ணை 9-ஆல் பெருக்கி 4-ஆல் வகுத்து வரும் மீதம் 1 ஆனுல் பிராமண வம்சம். 2-ஆனுல் க்ஷத்திரிய வம்சம், 3-ஆனுல் வைசிய வம்சம், 4-ஆனுல் சூத்திர வம் சம்; ஆயாதி எண்ணை 9-ஆல் பெருக்கி 30-ஆல் வகுத்து வரும் மீதம் பிரதமை முதல் 30 திதிகளை குறிப்பிடும். ராசி கண்டுப் பிடிப்பதற்கு ஆயாதி எண்ணை 4-ல் பெருக்கி 12-ஆல் வகுக்க வேண்டும். ஒன்று முதலான மீதங்களுக்கு மேஷம் முதல் மீனம் வரையுள்ள ராசிகளாகும்; ஆயாதி எண்ணை 27-ஆல் பெருக்கி 100-ஆல் வகுத்து வரும் மீதம் வயதாகும். வயதை குறிக்கும் எண்ணை 10 மடங்காக் கிக்கொண்டு வயதின் அளவை சொல்ல வேண்டும். உதாரணமாக 8 மீதம் வரு மானுல் 80 வயதையும், 90 வருமானுல் 900 வயதையும், 99 வருமானுல் 990 வயதையும் காட்டுகிறது என்றுச் சொல் வது மரபு. ஆயாதி எண்ணை 5-ஆல் வகுக்க மீதம் வரும் எண் முறையே பிருதிவி முதலான பஞ்ச பூதங்களையும் காட்டும். ஆயாதி எண்ணை 3-ஆல் வகுக்க மீதம் வரும் எண் முறையே சாத்விக, ராஜஸ, தாமஸ குணங்களையும் உணர்த்தும். சூத்திரம் கண்டறிய அசு வதி நக்ஷத்திரம் முதல் ஆயாதி நக்ஷத்தி ரம் வரை எண்ணி வந்த எண்ணை 5-ஆல் வகுக்க ஏற்படும் மீதம் ஒன்றுக்கு பாலன், இரண்டிற்கு குமாரன், மூன்றிற்கு ராஜன், நான்கிற்கு விருத்தன், ஐந்திற்கு மரணம் என்று கொள்ள வேண்டும்.

அடுத்து திருஷ்டி, அல்லது கண் பார்க் கும் முறையை ஆராய்வோம். ஆயாதி யில் கிடைக்கும் வாரத்திற்கு என்ன நக்ஷ த்திரம் என்று முதலில் கண்டுபிடிக்க வேண்டும். பானு வாரத்திற்கு ரோகிணி யென்றும், சோமவாரத்திற்கு புனர்பூச மும், மங்களவாரத்திற்கு மகம் என்றும் புதவாரத்திற்கு ஹஸ்தம் என்றும், குரு வாரத்திற்கு விசாகம் என்றும், சுக்கிர வாரத்திற்கு மூலம் என்றும், சனிவாரத் திற்கு திருவோணம் என்றும் ஏற்க வேண்டுமென்று சிற்பநூல் கூறுகிறது.. பிறகு ஆயாதியில் வரும் வார நக்ஷத்தி ரமிருந்து ஆயாதி நக்ஷத்திரம் வரை எண்ணி வரும் எண் 1 முதல் 9க்குள்ளா னுல் ஏக நேத்ரம் எனவும், 10 முதல் 21 க்குள்ளானுல் த்வி நேத்ரம் என்றும், 22 முதல் 27க் குள்ளானுல் நேத்ரம் இல்லை யென்றும் அறிதல் வேண்டும்.

கணம் கண்டு பிடிக்க . ஆயாதியில் வரும் நக்ஷத்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆயாதியில் வரும் நக்ஷத்தி ரம் அசுவதி, மிருகசீருஷம், பூசம், புனர் பூசம், சுவாதி, ஹஸ்தம், திருவோணம்,

ரேவதி, அனுஷம் ஆகிய இவைகளில் ஒன்ருனல் தேவகணம் என்றும், பூரம், பூராடம், உத்திரட்டாதி, ரோகிணி, பரணி, உத்திரம், உத்திராடம், பூரட்டாதி, திருவாதிரை ஆகிய இவற்றில் ஒன்ருனல் மானுஷகணம் என்றும், கார்த்திகை, மகம், கேட்டை, மூலம், விசாகம், சதயம், அவிட்டம், சித்திரை, ஆயில்யம் ஆகிய இவற்றில் ஒன்ருனல் ராக்ஷஸ கணம் என்றும் கொள்ளவேண்டும்.

யோகம் கண்டுபிடிக்க ஆயாதி நக்ஷத்திரம், ஆயாதி வாரம் இவற்றை கருத்திற் கொண்டு பஞ்சாங்கத்திற் குறிக்கப்பட்ட அட்டவணையிலிருந்து அவற்றுக்குரிய யோகத்தை அறிதல் வேண்டும்.

மேற்கூறிய வண்ணம் ஆயாதி விஷயங்களை கணித்து அவற்றிற்குரிய பலன்களையறிந்து நல்ல பலன்களை தரும் பிரமாணத்தைக் கொண்டு பிராசாதம், பிம்பம், குளம், கிணறு, கிராமம், நகரம், பட்டணம், முதலியன அமைத்தல் வேண்டும் என்று சிற்ப சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஆலய கட்டிட நிர்மாணத்தில் கெர்ப்பக்கிருஹ பிரமாணத்திற்கும், கெர்ப்பக் கிருஹ துவாரத்திற்கும், இதர மண்டபங்களுக்கும், பரிவார கோவில்களுக்கும், பிராகாரங்களுக்கும், கோபுரங்களுக்கும், த்வஜஸ்தம்பத்திற்கும், கிணறு, குளம் ஆகியவற்றிற்கும் கைக்கொள்ளும் பிரமாணம் ஆயாதி சூத்திரங்களால் ஸ்புடம் பண்ணப்படல் வேண்டும்.

வெவ்வேறு வித ஆயாதியை வெவ்வேறு காரியங்களுக்கு பின்பற்றல் வேண்டும். அம்ச ஆயாதியானுல் கிருஹம், ஆலயம் இவற்றிற்கும் அதம ,அதமாதம ஆயாதிகளை பௌத்த ஆலயங்கள் விஷயத்திலும் நிதன ஆயாதியை குளம், கிணறு விஷயத்திலும், ஷடாயியை பிரதிமை விஷயத்திலும் உபயோகித்தல் வேண்டும். மேற்சொன்ன எல்லாவற்றிற்கும் பூர்ண ஆயாதியை கொள்ளலாம் என்றும் கிருஹம், ஆலயம், பிரதிமை ஆகிய விஷயத்தில் பூர்ண ஆயாதியை உபயோகித்தல் மிகவும் விசேஷம் என்று விஸ்வகர்மீய சாஸ்திரம் கூறுகிறது.

கர்பக்ரஹ அந்தராள அர்த்த மண்டப நிர்மாண விதி

எம். செல்லக்கண்ணு ஸ்தபதி (பழநி)

தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் வசிப்பதற்கு அழகோடும், அளவோடும் கட்டப்படும் கட்டடத்திற்கு ப்ராசாதம் என்றும், பலவித அளவுகளோடும், பலவித தானங்களோடும் கட்டப்படும் கட்டடத்திற்கு விமானம் என்றும் கூறப்படும்.

இமாலயம் முதல் கன்யா குமரிவரை உள்ள பிரதேசங்களை மூன்று பிரிவாகக் கொண்டு அவைகளில் அமைக்கும் விமான பேதங்களாவன: சாத்விக தேசமாகிய இமயம் முதல் விந்திய பர்வதம் வரை நாகரம், ராஜஸதேசமாகிய விந்திய பர்வதம் முதல் கிருஷ்ணு நதிவரை திராவிடம், கிருஷ்ணு நதிமுதல் கன்னியா குமரிவரை வேஸரம், இவ்வாறு நாகர - திராவிட - வேஸர விமான அமைப்புக் கூறப்படுகிறது. இவ்வகை விமானங்கள் விஷ்ணுவாதி சிவ மூர்த்தங்கட்கு உரியனவாம்.

உபானுதி ஸ்தூபிபர்யந்தம் சதுரமாகச் செய்யப் படுவது நாகரமாகும். வேதிகை முதல் எட்டு பட்டமாகச் செய்யப்படுவது திராவிடம் ஆகும். கண்டத்திலிருந்து விருத்தமாகச் செய்யப்படுவது வேசரம் ஆகும். நாகரம் பிரும்மகாந்தம் என்றும், திராவிடம் விஷ்ணுகாந்தம் என்றும் வேசரம் ருத்ரகாந்தம் என்றும் பெயர் பெறும்.

மஹாங்கம், அங்கம், உபாங்கம், பிரத்யங்கம் என்று அங்கம் நான்கு வகைப்படும். கர்ப்பகிருஹம் மஹாங்கம் என்றும், அர்த்த மண்டபம் அங்கம் என்றும், மகர மண்டபம் முதலானவை உபாங்கம் என்றும் பிராகாரங்கள் பிரத்யங்கம் எனவும் பொதுவான அங்கம் சொல்லப்படுகிறது.

கர்ப்பகிரஹம் சிரசாகவும், அந்தராளம், முகம், கண்டமாகவும், அர்த்த மண்டபம் மார்பாகவும், மஹாமண்டபம் வயிறுகவும், பிராகாரங்கள் முழங்கால் அணுக்காலாகவும், கோபுர த்வாரம் பாதமாகவும் கிடந்த அங்கம் கூறப்படுகிறது.

அதிஷ்டானத்தை மஹாங்கம் என்றும் கால் உயரத்தை அங்கம் என்றும், பிரஸ்தானத்தை உபாங்கம் என்றும், சிகரத்தை பிரத்யங்கம் என்றும் கர்ப்பக்ருஹத்தின் நின்ற அங்கம் கூறப்பட்டுள்ளது.

உபானம் பாதகமாகவும், ஜெகதி கணுக்காலாகவும் குமுதகம் முழங்காலாகவும், கண்டம் தொடையாகவும், பட்டிகை இடுப்பாகவும் வேதிகை நாபியாகவும் கடல் உயரம் வயிருகவும், உத்திரம் ஸ்தன்யமரகவும் சுபோதகம் மார்பாகவும், வியாழம் தோள்மட்டமாகவும், வேதிகை கழுத்து மட்டமாகவும் கண்டம் கழுத்தாகவும் தூக்கோடு அதரமாகவும், அல்பநாசிகள் காதுகளாகவும் சந்திர பிம்பம் கண்களாகவும், பண்டிகை சிரசாகவும், பத்மம் லலாடமாகவும், ஸ்தூபி சிகையாகவும் கர்ப்பகிருஹத்தின் நின்ற அங்கம் விசேஷித்துக் கூறப்பட்டுள்ளது.

அல்ப பிரசாதம்: மூன்று நான்கு முழம் தொடங்கி, 11, 12 முழம் வரை எட்டு விதமாகும்.

மத்யம பிரசாதம் 13, 14 முழம் தொடங்கி 21, 22, முழம் வரை பத்து விதமாகும். 23, 24, முழம் தொடங்கி 35, 36 முழம் வரை மஹாபிரஸாதமாகும் என்று விஸ்வகர்மீயத்தில் கூறப்படுகிறது.

சாந்திகம், பௌஷ்டிகம், ஜயதும், அத்புதம், சர்வ காமியம் என்று பிரசாதம் உயரத்தால் ஐந்து வகை.

3, 4 முழம் கொண்டது சாந்திகம் என்றும்; 5, 6 முழம் உயரம் கொண்டது பௌஷ்டிகம் என்றும்; 7, 8 முழம் உயரம் கொண்டது ஜயதம் என்றும்; 9, 10 முழம் உயரம் கொண்டது அத்புதம் என்றும்; 11, 12 முழம் உயரம் கொண்டது சர்வகாம்யம் என்றும் பிரசாத உயரம் 5 விதமான அளவுகளால் சொல்லப்பட்டிருக்கிறது

பிரசாதத்தின் பெயர்: ஜாதி - சந்த விகல்பம் - ஆபாஸம் என்று ஆலயம்

நான்கு வகைப்படும். முழு முழத்தால் அளக்கப்படுவது ஜாதி ஆலயம், $\frac{3}{4}$ முழத்தால் அளக்கப்படுவது சந்த ஆலயம், $\frac{1}{2}$ முழத்தால் அமைக்கப்படுவது சந்த ஆலயம், அறை முழத்தால் அளக்கப்படுவது விகல்பம், $\frac{1}{4}$ முழத்தால் அளக்கப்படுவது ஆபாஸ ஆலயம் ஆகும்.

ஆலயங்களுக்கு ஆயாதி நிர்ணயப்பதில் ஸ்தானகம், ஆசனம், சயனம் என்று மூன்றுவகை உண்டு. உயரத்தால் ஆயாதி நிர்ணயிப்பது ஸ்தாநகம் என்றும், சுற்றளவால் ஆயாதி நிர்ணயிப்பது சயனம் என்றும் பெயராம். இவற்றுள் ஸ்தானக ஹார்ம்யம் அவசஞ்சிதமென்றும் ஆசன ஹர்ம்யம் சஞ்சிதமென்றும், சயன ஹர்ம்யம் அபசஞ்சிதமென்றும் கூறப்படுகிறது (மானசாரம்)

சமசதுரம், சமவட்டமான விமானம் புருஷ விமானம் என்றும் நீண்ட சதுரம், நீண்ட வட்டமான விமானம் ஸ்திரீ விமானம் என்றும் பெயராம் (மானசாரம்)

பிரஸாத உத்ஸேதம்: பிரஸாத விஸ்தாரத்தால் உபான முதல் ஸ்தூபிவரை உயரம் கூறப்பட்டது. பிரஸ்தாரத்திற்கு மேல் விமானத்தின் அளவு விஸ்தாரத்தால் $1\frac{1}{4}$ கொண்டது சாந்திகம்; $1\frac{1}{2}$ கொண்டது பௌஷ்டிகம்; $1\frac{3}{4}$ கொண்டது ஜயதம்; 2 கொண்டது அத்புதம்; $2\frac{1}{4}$ கொண்டது சர்வகாம்யம் ஆகும்,

அந்த்ராஸம்: கர்ப்ப க்ரஹத்திற்கும் அர்த்த மண்டபத்திற்கும் மத்தியில் அதிஷ்டான கும்ப பஞ்சத்தோடு கூடிய அந்த ராஸம் செய்வது.

அர்த்த மண்டபம்: பிரசாதத்திற்கு முன்னுல் அமைவது அர்த்த மண்டபமாகும். பிராசாத விஸ்தாரத்தால் ஒரு அம்சம். முக்கால் அம்சம், அறை அம்சம். அர்த்த மண்டபத்தின் விஸ்தாரமாகும். சமஅளவு அர்த்த மண்டபத்திற்கு அந்தராஸம் சேர்க்கப்படவேண்டும். குறைந்த அம்ஸத்திற்கு அந்தராஸம் விலக்கப்படவேண்டும்.

மகாமண்டபம்: மூல ஹர்ம்ய விஸ்தாரத்தால் $1\frac{1}{2}$, $1\frac{3}{4}$, 2, $2\frac{1}{2}$, 3, $3\frac{1}{2}$, $3\frac{3}{4}$, பாகம் மஹாமண்டபத்திற்கு அளவு சொல்லப்பட்டிருக்கிறது. நிருத்த மண்டபம் (விஸ்வகர்மீயம்)

மகாமண்டப விஸ்தாரத்தினுல் $1\frac{1}{2}$, $1\frac{3}{4}$, 2, $2\frac{1}{2}$, $2\frac{3}{4}$, 3, அம்ஸம்வரை நிருத்த மண்டபத்தின் அளவு கூறப்பட்டிருக்கிறது.

ஏகதலம்: (மானஸாரம்) கால்பிரவாய் விஸ்தாரத்தை இரட்டித்து 8 பாகம் செய்து 1 பாகம் அதிஷ்டானம், 2 பாகம் கால் உயரம் 1 பாகம் பிரஸ்தரம் 1 பாகம் கழுத்து (கண்டம்) 2 பாகம் சிகரம் 1 பாகம் ஸ்தூபி உயரம்.

இரண்டு நில விமானம் உபாநாதி ஸ்தூபி பரியந்தமான உயரத்தை 11 அம்சம் செய்து அதிஷ்டானம் 1, காலுயரம் 2 பிரஸ்த்தரம் 1. கால் $1\frac{1}{2}$ மஞ்சம் $\frac{3}{4}$, கழுத்து $\frac{1}{2}$, பிண்டிகை $1\frac{1}{2}$ ஸ்தூபி $\frac{3}{4}$ ஆக சொல்லப்பட்டிருக்கிறது. மற்ருேர்விதம்,

உபாநாதி ஸ்தூபி பர்யந்தமான உயரத்தை 15 அம்சம் செய்து அதிஷ்டானம் $1\frac{1}{2}$, கால் உயரம் 3; பிரஸ்த்தரம் $1\frac{1}{2}$, காலுயரம் $2\frac{1}{4}$, மஞ்சம் $\frac{3}{4}$, கழுத்து $1\frac{1}{2}$, பிண்டிகை 3 ஸ்தூபி $1\frac{1}{2}$. ஆக 15 அம்சமாக சொல்லப்பட்டுள்ளது. மற்றும்,

உபாநாதி ஸ்தூபி பர்யந்தமான உயரத்தை 31 அம்சம் செய்து அதிஷ்ட்டானம் 3, கால் உயரம்-6, பிரஸ்த்தரம் 3. கால் உயரம் $4\frac{1}{2}$—மஞ்சம் $2\frac{1}{4}$—கால் உயரம் 3. மஞ்சம் 1. கழுத்து $2\frac{1}{4}$. பிண்டிகை $4\frac{1}{2}$ ஸ்தூபி $1\frac{1}{2}$ இவ்விதமாக மூன்று நில விமானம் கூறப்பட்டுள்ளன.

சாந்திகம் - பௌஷ்டிகம் - ஜெயதம் அத்புதம் சார்வகாமியமும் - விவரமும் கெண்யமும்

ச. மு. கணபதிஸ்தபதி—(பத்ராசலம்)

சாந்திகம், பௌஷ்டிகம், ஜெயதம், அத்புதம், சார்வகாம்யகம் என ஐந்து விதம். இவை கர்ப்பகிருஹத்தினுல் உயரம் கொள்ளும் முறையே யாகும். உபானுதி ஸ்தூபிபர்யந்தம் உயரமாகும். இதன் லக்ஷணம் சில்பசாஸ்திரத்தில் இரண்டாவதாகிய விஸ்வகர்ம்யம் என்னும் சில்ப சாஸ்திரத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

கர்ப்பகிருஹ அகலத்தை 7 பாகம் செய்து 10 பாகம் உயரம் கொள்வது சாந்திகம் என்றும், $1\frac{1}{2}$ பாகம் உயரம் கொள்வது பௌஷ்டிகம் என்றும், $1\frac{3}{4}$ பாகம் உயரம் கொண்டது ஜெயதம், என்றும், 2 பாகம் உயரம் கொண்டது அத்புதம் என்றும், 3 பாகம் உயரம் கொண்டது சார்வகாமிகம் என்றும் பெயராம். இதுவே சாந்திகம், பௌஷ்டிகம், ஜெயதம், அத்புதம், சார்வகாமிய உயரம் கொள்ளும் முறையாகும். இந்த விஷயம் காஸ்யபத்தில் $1\frac{1}{4}$, $1\frac{1}{2}$, $1\frac{3}{4}$, 2 $2\frac{1}{4}$ என்றும் சொல்லப்படுகிறது. இனி சாந்திகம் முதல் சார்வகாமியம் வரை அதிஷ்டானுதி ஸ்தூபி வரையுள்ள உயர கெண்யத்தை விவரிக்கிறேன்.

3 நில கெண்யமானம்

இதன் கெண்யத்தை முறையே சொல்கிறேன். சாந்திக அளவின் விவரம்.

உயரத்தை 24 பாகம் செய்து

அதிஷ்டானம்	கூறு	2
பிரஸ்தரம்	,,	2
1-ம் நிலமஞ்சம்	,,	$1\frac{1}{2}$
2-ம் நிலபிரஸ்தரம்	,,	$1\frac{1}{4}$
கண்ட உயரம்	,,	1
ஸ்தூபி	,,	1
கால் உயரம்	,,	4
1-ம் நிலஉயரம்	,,	$3\frac{3}{4}$
2-ம் நிலஉயரம்	,,	$3\frac{1}{2}$
வேதியல்	,,	$\frac{1}{2}$
பண்டி (சிகரம்)	,,	$3\frac{1}{2}$
ஆக கூறு		24

இம்மாதிரி அளவினைக் கொண்டதற்கு சாந்திக விமானம் என்று பெயர்.

2. பௌஷ்டிக விமானம்

அதிஷ்டானம்	கூறு	2
பிரஸ்தரம்	,,	2
1-ம் நிலமஞ்சம்	,,	$1\frac{3}{4}$
2-ம் நில மஞ்சம்	,,	$1\frac{1}{4}$
கண்டம்	,,	1
ஸ்தூபி	,,	$1\frac{1}{4}$
பாதம்	,,	4
1-ம் நிலஉயரம்	,,	$3\frac{3}{4}$
2-ம்நிலஉயரம்	,,	$3\frac{1}{2}$
வேதிகை	,,	$\frac{1}{2}$
சிகரம்	,,	3

ஆக கூறு 24 இது பௌஷ்டிக விமானம்.

3. ஜெயதம்

உயரத்தை 27 பாகம் செய்து

அதிஷ்டானம்	கூறு	2
பிரஸ்தரம்	,,	2
1-ம் நிலபிரஸ்தரம்	,,	$1\frac{3}{4}$
2-ம் நிலபரஸ்பரம்	,,	$1\frac{1}{2}$
கழுத்து	,,	2
ஸ்தூபி	,,	$1\frac{1}{4}$

பாதம்	,,	4
1-ம் நில உயரம்	,,	4
2-ம் நில உயரம்	,,	$3\frac{1}{2}$
வேதிகை	,,	1
சிகரம்	,,	4
ஆக கூறு		27

இது ஜெயத விமானத்தின் கெண்யம்

4. அத்புத விமானம்

உயரத்தை 42 கூறுகள் செய்து

அதிஷ்டானம்	$3\frac{1}{2}$
மஞ்சம் கூறு	$3\frac{1}{2}$
1-ம் நிலமஞ்சம்	3
2-ம் நிலமஞ்சம்	$2\frac{1}{2}$
கண்டம்	2
ஸ்தூபி	2
பாதம் கூறு	7
1-ம் நிலம்	$6\frac{1}{2}$
2-ம் நிலம்	6
வேதியல்	1
ஸ்தூபி	5
ஆக கூறு	42

இது அத்புத விமானத்தின் கெண்யம்

5. சர்வ காம்யம்

உயரத்தை 48 கூறுகள் செய்து

அதிஷ்டானம்	4
பிரஸ்தரம்	4
1-ம் நிலமஞ்சம்	$3\frac{1}{2}$
2-ம் நிலமஞ்சம்	3
கண்டம்	2
ஸ்தூபி	2
பாதஉயரம் கூறு	8
1-நில உயரம்	$7\frac{1}{2}$
2-ம் நில உயரம்	7
வேதியல்	1
சிகரம்	6
ஆக கூறு	48

இவை சார்வகாம்யக விமான கெண்ய மாகும்.

காஞ்சிக் கலைவிழா

கே. எம். ரங்கசாமி (இன்ஃபா விசேஷ நிருபர்)

சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருந்த வரையில் நம் நாட்டைப் பற்றிய எல்லாவற்றிலும் மக்களுக்கு அக்கறை இருந்தது. சுதந்திரம் வந்தபின் அவர்கள் கவனம் வேறு பல திசைகளில் திரும்பித் தங்கள் பண்பாட்டைப் புறக் கணிக்கத் தொடங்கினர். ஒரு நாகரிகத் திற்குப் புறத்தாக்குதலைவிடச் சொந்த மக்களின் புறக்கணிப்பு அதிகத் தீங்கு விளைவிக்கும். நம் கலைகளும் கலாசாரமும் அலட்சியத்தினாலேயே அழிந்துவிடும் அபாயம் ஏற்பட்டது.

இதுபற்றி அரசியல் தலைவர்கள் கவலைப் பட்டார்கள். கலை, கலாசார மறு மலர்ச்சி பற்றியும் தேசீய ஒருமைப் பாட்டைப் பற்றியும் மேடைகளில் பேசினார்கள். ஆனால் அந்தப் பேச்சுக்கள் மக்களின் ஒரு காதில் விழுந்து மறு காது வழியாக வெளியே சென்று கொண்டிருந் தது. நம் பண்பாட்டில் மக்கள் மீண்டும் அக்கறை கொள்ளச் செய்வதற்கு உருப் படியாகச் செய்யக் கூடியது இன்ன தென்று யாருக்கும் தெரியவில்லை.

நம் நாட்டுக் கலாசார வாழ்வில் இத்தகைய நெருக்கடி ஏற்பட்ட காலங் களில் சமூகத்திற்கு வழிகாட்டி வந்திருப் பவர்கள் முனிவர்களும் தவயோகிகளும் தான். பாரதீயப் பண்பாடு செய்த பாக்கியத்தினால் தற்போதைய நெருக் கடிக் காலத்திலும் அத்தகைய ஒரு தபஸ்வி நம்மிடையே வாழ்ந்து வருகிறார் கள். நம் கலாசாரத்திற்குப் புத்துயிரளிக்க, பேசுவதைத் தவிர வேறு என்ன செய்வ தென்று மற்றவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால் பரப் பிரும்மத்தினிடம் மனத்தை லயிக்கச் செய்து மோனநிலை எய்திய ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதி பதிகளுக்கு அந்த வழி தெரிந்தது.

1962-ல், ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகள் நாட்டிலுள்ள ஆகம, சில்ப கலைஞர் களையும் சாஸ்திரப் பண்டிதர் களையும், ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த இளையாத்தங்குடியில் கூட்டினார். அவர்களைக் கொண்டு, பண்டிதர்களுக் கும் பாமரர்களுக்கும் புரியும் வகையில் சாஸ்திர சர்ச்சைகள் நடத்தச்செய்தார். மாலை நேரங்களில், நம் பண்பாட்டின் பிரத்யட்ச வடிவங்களாகிய புராதனக் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தார். தமிழ் நாட்டின் கலாசார வாழ்க்கையில் அன்றே ஒரு புது மலர்ச்சி தோன்றியது.

அடுத்த வருஷம் இந்த விழா நாரா யண புரத்திலும், அதற்கடுத்த வருஷம், தென்னாட்டுக் கலாசாரத்தின் தலைநகர மாகிய காஞ்சியிலும் நடந்தது. இவற்றில் காஞ்சிக் கலைவிழாவை மட்டுமே காணும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது. இந்த விழாவை நேரில் காண்பதற்குமுன் நான் கற்பனை செய்துகொண்டிருந்த காட்சி ஒன்று. நேரில் கண்ட திருவிழாக் காட்சி முற்றிலும் வேறு.

காஞ்சியில் கண்டதென்ன

சென்னையில் பல வருஷங்களாக சங்கீத வித்வத் சபை, இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி, தமிழிசைச் சங்கம் முத லிய ஸ்தாபனங்கள் நடத்திவரும் கலை விழாக்களைப்போல் அதுவும் ஒன்றாக இருக்குமென்று தோன்றியது. ஆனால் இதை நேரில் கண்ட பிறகுதான் அத்த கைய ஒரு விழா சமீபகாலத்தில் நடந்த தில்லை என்பது தெரிந்தது. காஞ்சியில் கண்டது சென்னை விழாக்களில் கூடுவது போன்ற ரசிகர் கூட்டம் மட்டுமல்ல; ரசனைப் பெருங்கடலே அங்கு கொந்த ளித்தது.

அந்த விழாவை கண்ட பிறகுதான், ஜனங்களைக் கவர்ந்து இருக்கும் வலி மையை நம் நாட்டுக் கலைகள் இழந்துவிட வில்லைஎன்ற நம்பிக்கைப் பிறந்தது. அங்கு கண்ட காட்சிகள் ''ஜனரஞ்சகமானவை'' என்று கருதப்படும் நிகழ்ச்சிகள் நிறைந்த சினிமாப் படங்களல்ல. பல நூற்றாண்டு களாக நம் நாட்டு மக்கள் ரசித்துப் பய னடைந்து வரும் புராதன கிராமியக் கலைகள். பாட்டும் கூத்தும் நிறைந்த அப் பட்டமான நாட்டுக் கலைகள். இந்தப் ''பட்டிக்காட்டு'' நிகழ்ச்சிகளைக் காண யாராவது வருவார்களா என்றுகூடச்

சிலர் நினைத்திருக்கலாம். ஆனால் அவற்றைக் காணவந்த கூட்டத்திற்குப் பந்தல் போதவில்லை!

இந்தியப் பண்பாட்டின் அஸ்திவாரமே கண்ணுக்குத் தெரியும் அர்சாவதாரத்தின் மூலம், காணமுடியாத பிரும்மத்தை அறிய முயல்வதுதான். ஆகையால் நம் கலாசார வாழ்க்கையில் கோயில் கட்டிடக் கலை, தெய்வத் திருவுருவங்களைத் தோற்றுவிக்கும் சிற்பக்கலை, பக்தியை வளர்க்கும் வழிபாட்டு முறைகளான ஆகம சாஸ்திரங்கள் முதலியவை முக்கிய இடம் பெறுகின்றன. அதைப் பிரதிபலிக்கும் முறையில் இந்த விழாவிலும் தினமும் அவை பற்றிய சர்ச்சைகள் முதலில் நடைபெற்றன. சிவாசாரியர்களும் வைகானஸ, பாஞ்சராத்ர பட்டாச்சாரியர்களும் இவற்றில் பங்கு கொண்டனர். இவர்களை ஒரே மேடையில் சந்தித்து அமைதியான முறையில் விவாதிக்கும்படிச் செய்ததே ஆசாரிய ஸ்வாமிகளின் மஹத்தான சாதனை. வேறு யாராவது இத்தகைய விவாதத்திற்கு ஏற்பாடு செய்திருந்தால் இவ்வளவு பேரும் வந்திருப்பார்களா, வந்து இவ்வளவு ஒழுங்காக விவாதத்தை நடத்தியிருப்பார்களா என்பதே சந்தேகம். அவர்களுடைய சர்ச்சைகள் பொது மக்களுக்கு நல்ல பயனளிப்பவையாக இருந்தன. ஆகம முறைகள் வெளித் தோற்றத்தில் எவ்வளவு வேறுபட்டுக் காணப்பட்டாலும் அவற்றின் அடிப்படைத் தத்துவமும் நோக்கமும் ஒன்றே என்பது அவர்கள் வாயிலாகவே வெளியாயிற்று.

இந்தியச் சிற்பங்களின் பெருமையைப் புகழாத கலா ரசிகர்கள் இல்லை. அந்த அழகு வடிவங்களைப் படைப்பதற்குப் பல நுட்பமான இலக்கண விதிகள் உண்டு. அவை அடங்கிய சிற்ப சாஸ்திரச் சுவடிகள் கட்டுக்கட்டி, பல ஸ்தபதிகளின் வீடுகளில் பரணை மேல் போடப்பட்டிருந்தன. பல தலைமுறைகளாக அவற்றைப் பிரித்துப் பார்த்தவர்களில்லை. அவற்றில், பூச்சிகளால் அரிக்கப்பட்டவை போக மிச்சமிருந்தவை இந்த விழாவின் போதுதான் வெளிக்கொண்டு வரப்பட்டன. “இந்தச் சுவடிகளை நாங்களே இப்பொழுதுதான் முதல் முறையாகப் பிரித்துப் பார்த்தோம்” என்று பல ஸ்தபதிகள் கூறினார்கள். இதுவரை அவற்றைப் படித்துப் பார்க்கும்படி அவர்களைத் தூண்டுவாரில்லை. இப்படியே இன்னும் சில ஆண்டுகள் விட்டு வைத்திருந்தால், தெய்வங்கள் குடியிருக்கும் கோயில்களை நிர்மாணித்த இவர்கள் அணைகள் கட்டப்போயிருப்பார்கள்; விக்கிரகங்கள் வார்த்த அவர்களின் கைகள் இயந்திர உறுப்புக்கள் வார்த்துக் கொண்டிருக்கும். இண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நம் முன்னோர்கள் கப்பலோட்டியது பற்றிப் பெருமைப்படுவது போல் இந்தக் கலைகள் பற்றியும் பழம் பெருமை பேசித் திருப்தியடைய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

தீர்க்கதரிசியான ஆசார்ய ஸ்வாமிகள் இந்த நிலையை எதிர்பார்த்துத்தான் ஸ்தபதிகளை அழைத்து பழஞ்சுவடிகளைப் புரட்டிப் பார்க்கச் செய்தார்; அவை பற்றி விவாதித்துச் சந்தேகங்களைத் தெரிவித்துக்கொள்ளச் சொன்னார். தங்கள் மதிப்பைச் சமூகம் மீண்டும் உணரத் தொடங்கிவிட்டது என்பதை அறிந்த சிற்பக் கலைஞர்கள் பேரானந்தம் அடைந்தனர். அவர்களைக் கண்டபொழுது, சோழ, பல்லவ விஜய நகர மன்னர்கள் காலங்களிலும் கலைஞர்கள் இப்படித்தான் நிமிர்ந்து நடந்திருப்பார்கள் என்று நினைக்கத் தோன்றியது.

சிற்பக் கலை மீண்டும் புத்துயிர் பெற வேண்டுமானால் அதற்குச் சொற்பொழிவுகளும் விவாதங்களும் மட்டும் போதாது. செயலில் ஏதாவது செய்தாக வேண்டும். இந்த உண்மையை மற்றெல்லாரையும் விட நன்றாக உணர்ந்தவர் ஆசார்ய ஸ்வாமிகள். ஆகையால் இந்த விழாவிலேயே சிற்பக்கலை வகுப்பு ஒன்றைத் துவக்கி வைத்தார். நான்கு சிறுவர்களுக்கு வித்யாரம்பம் செய்விக்கப்பட்டது. எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் மஹான்களில் ஒருவரின் ஆசியுடன் கலைப் பயிற்சியைத் துவக்கிய இச் சிறுவர்கள் பெரும்பாக்கியசாலிகள். எதிர்காலத்தில் இவர்கள் இணையற்ற கலைஞர்களாக விளங்கப் போகின்றனர் என்பதில் சந்தேகமில்லை.

சொற்பொழிகள்

காலை, பிற்பகல் நிகழ்ச்சிகளில் அறிஞர்கள் பலர் சொற்பொழிவுகளும் நிகழ்த்தினர். இந்த விழாவில் அயல்நாட்டினரும் கலந்து கொண்டதால் அது சர்வதேசத் தன்மையே பெற்றுவிட்டதென்று கூற வேண்டும். நம் சிற்பக் கலையின் பெருமை பற்றியும், ஒரிசாவைச் சேர்ந்த கோனாரக் என்ற இடத்தில் உள்ள சூரியன் கோயில் சிற்பங்கள் பற்றியும் ஆலிஸ் போனர் என்ற ஸ்விஸ் மாது இரு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இவர் இந்தியாவிலேயே சுமார் இருபத்தைந்து ஆண்டு

களாகத் தங்கியிருந்து சிற்பக் கலை ஆராய்ச்சி செய்பவர்.

அதேபோல் புதுவையில் உள்ள இந்திய கலாச்சாரக் கழகத்தைச் சேர்ந்த ஃபிலியோஸா என்ற பிரஞ்சு அறிஞர் யோக சாஸ்திரம் பற்றியும் சிற்பக்கலை பற்றியும் கருத்தாழம் நிறைந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

கலை நிகழ்ச்சிகள்

இந்த விழாவிலேயே படித்தவர்கள், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள், முதியோர், இளைஞர்கள், குழந்தைகள் முதலிய அனைவரையும் கவர்ந்து இழுத்தவை தினமும் மாலை நேரத்தில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகள்தாம். புராதான கிராமியக் கலைகள் அனைத்தும் இதில் இடம் பெற்றன. பழைய பாணியில் அமைந்த பாரத சொற்பொழிவுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். அதைத் தொடர்ந்து கரகம், காவடி, பொம்மலாட்டம், ஒட்டம் துள்ளல் சண்டமேளம், யக்ஷகானம், புர்ர கதா, வில்லுப்பாட்டு முதலிய நிகழ்ச்சிகள் நடந்தன. ஜீவனற்ற சினிமாப் படங்களைப் பார்த்து அலுத்த மக்களுக்கு இவற்றைக் காண்பது ஒரு புது அனுபமாக இருந்தது. கவனிப்பாரற்று மறைந்து கிடக்கும் இந்தக் கலைஞர்கள் தங்கள் திறமையைக் காட்ட இந்த விழா ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது. சாத்தூர் ஸ்ரீ. ஜி. பிச்சுக் குட்டியின் வில்லுப் பாட்டையும், மதுரை ஸ்ரீ பெரிய சாமியின் கரக ஆட்டத்தையும் குடந்தை ஸ்ரீ மணி ஐயரின் பொம்மலாட்டத்தையும் கண்டு உணர்ச்சி வசப்படாதவர்கள் இருந்திருக்க முடியாது. இந்தக் கலைகள் நம்மோடு பிறந்து நம் ரத்தத்தில் ஊறிப் போனவை. ஆகையால் நம் மக்கள் வாழ்க்கையின் எந்த மட்டத்தில் இருப்பவர்களாயினும் அவர்களுக்கு இவை யுணர்ச்சி யூட்டுகின்றன. வளர்ச்சி அடைந்த மற்றெல்லாக் கலைகளுக்குமே ஆணிவேர் போன்றவை இந்தப் புராதனக் கலைகள். இவற்றை நீரூற்றி வளர்க்காவிட்டால் மற்றக் கலைகள் காய்ந்து உதிர்ந்துவிடும். பின்னர் நாம் பெருமைப் படுவதற்கு ஒன்றுமிராது. இதனுல்தான் கிராமியக் கலைகளுக்காகவே ஆசார்ய ஸ்வாமிகள் தனி விழா நடத்துகிருரென்று தோன்றுகிறது.

விழாவுக்கு சென்னை சர்க்காரின் அற நிலைய இலாகா முழு ஆதரவு அளிக்காமலிருந்தால் இவ்வளவு பெரிய வெற்றி கிடைத்திருக்குமா என்பது சந்தேகம். அற நிலையக் கமிஷனர் ஸ்ரீ. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் இதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். உதவிக் கமிஷனர் ஸ்ரீ. கே. கே. மேனன் அடக்கத்துடன் பின்னணியிலே இருந்து நடவடிக்கைகளை நடத்திவந்த போதிலும், அவர் செய்து வந்த ஒப்பற்ற சேவையைப் பொது மக்கள் கவனிக்கத் தவறவில்லை. அவர் ஆசார்ய ஸ்வாமிகளின் கண்களாகவும் கரங்களாகவும் இருந்து செயல் பட்டார் என்ருல் மிகையாகாது.

சர்ச்சைகள் ஒழுங்காக நடைபெற பெரிதும் காரணமாயிருந்தவர், காஞ்சி ஸ்ரீ மடத்தின் உத்ஸவ மூர்த்தி போல் தேஜோ மயமாக விளங்கும் புதுப் பெரியவாள். அவருக்கு உதவியாக யிருந்தவர் அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாச்சாரியார். மறைவிலேயே இருந்து கொண்டு விழா நடவடிக்கைகள் அனைத்தையும் நிர்வகித்தவர் குளித்தலை அட்வகேட் அண்ணுத்துரை ஐயங்கார்: ஆசார்ய ஸவாமிகளின் திருவுள்ளதை அறிந்து பணியாற்றும் ஒரு சிலரில் அவர் ஒருவர்.

இந்த விழாவில் வேறு யாரைக் கண்டிருந்தாலும் கவனிக்கத் தவறியிருந்தாலும் திருச்சியிலிருந்து வந்து, ஓடி ஓடிப் புகைப் படமும் சினிமாப் படமும் எடுத்துக் கொண்டிருந்த ஜே. சடகோபனை மட்டும் யாராலும் கவனிக்காமல் இருந்திருக்க முடியாது. சுவாமிகள் புரியும் செயல்களையும், திருவாய் மலர்ந்து அருளும் பொன் மொழிகளையும் அப்படியே பதிவுசெய்து வருகிருர் அவர்.

காஞ்சி கலைவிழாப் பந்தலில் நடந்த நிகழ்ச்சிகள் அத்தனையையும் சுருக்கமாகச் சொல்வதென்ருல்கூட அது ஒரு தனி நூலாகிவிடும். அந்த ஒரு வாரமும் கலைவிழாப் பந்தல் மட்டுமின்றிக் காஞ்சி மானகரமே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. எங்கு சென்ருலும் இந்த விழாவைப் பற்றிய பேச்சுத்தான். ஜாதி மத வேற்றுமையின்றி மக்கள் அனைவரும் விழாவில் வந்து கலந்துகொண்டனர். மக்களிடையே ஊறிக்கிடக்கும் பண்பாட்டின் வெளித் தோற்றமாக இந்த விழா அமைந்தது.

1. தோல் பொம்மலாட்டம். 2. ரிஷப நடனம். 3. தாய்லாந்தைச் சேர்ந்த கலைஞரின் கதக்களி நடனம். 4. கரக ஆட்டம். 5. புர்ரகதா (ஆந்திரா).

6. கஜல் விளையாட்டு. 7. தாயம்பகா (கேரளா) 8. சண்டமேளா (கேரளா)
9. பொம்மலாட்டம். 10. பாலா கதா (ஓரிஸ்ஸா) 11. டாக்டர் பிச்சைக்குட்டி பார்ட்டியாரின் வில்லுப்பாட்டு.

12. சுபஸ்ரீ பார்ட்டியாரின் வில்லுப்பாட்டு. 13. ஓட்டம் துள்ளல் (கேரளா)
14. யக்ஷகானம் (கர்நாடகம்) 15. பாகவத ப்ரவசனம். 16. கும்ப கரகம்.

சுவிட்ஜர்லாந்தைச் சேர்ந்த
மிஸ் ஆலிஸ் போனர், கொனாரக்
கோயிலைப்பற்றிப் பேசுகிறார்.
டாக்டர் வே. ராகவன் மொழிபெயர்க்கிறார்

பூனாவைச் சேர்ந்த ஸ்ரீ ஆப்தேயின்
சொற்பொழிவை அக்னிஹோத்ரம்
ராமாநுஜ தாதாசாரியார் மொழி
பெயர்க்கிறார்.





பாண்டிச்சேரியில்
ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும்
பிரெஞ்சுக்காரர், பிலியோஸா பேசுகிறார்.

கல்வெட்டு கூறும் சிற்பிகள்

ரா. நாகசுவாமி

காஞ்சீபுரத்திலிருந்து சுமார் 20 கல் தொலைவில் உத்திரமேரூர் என்ற ஓர் ஊர் உள்ளது. அது மிகவும் பழம் புகழ் வாய்ந்த ஊராகும். அங்கு பல்லவ மன்னனான தந்திவர்மன் காலத்தில் சுந்தரவரதப் பெருமாளுக்கு ஓர் கோயில் கட்டப்பட்டது, அதில் உள்ள ஓர் கல்வெட்டு.

अस्यालंकारमानं च यथा लक्षणसंयुतम्
यश्चैनं वेत्ति सकलं स वै वास्तुविदां वरः ।

என்று குறிப்பிடுகிறது. இதன் 'பொருள் இந்தக் கோயிலினுடைய லக்ஷணங்கள் பொருந்திய அலங்காரங்களையும், அளவுகளையும் எவன் அறிகிறானோ அவன் வாஸ்து வித்தையை (கோயிற் கலை) அறிந்தவர்களில் சிறந்தவனாகிறான்.' அக்கல்வெட்டில் மேலும்

एवं वास्त्वभवत् महत्प्रविगतं नाम्ना च जात्यादिना
येनास्मिन् बहुभिः यथागमविदैः ग्रामे प्रयोगान्वितैः ।
श्रीमत्पाटकवासिना कृतधिया तक्ष्णा सदा वाग्मिना
तेनेदं परमेश्वरेण महता श्रीवास्तुनो भास्करः ॥

என்று காணப்படுகிறது. 'பாடகபுரவாசியும், சிறந்த அறிவாளியும் எப்பொழுதும் சத்ய சந்தனுமான ஸ்ரீபரமேச்வரப் பெருந்தச்சனால் இந்தக் கிராமத்தில் வாஸ்துக்களில் எல்லாம் சூரியன் போல இந்தக் கோயிலானது ஆகமங்களில் கூறப்பட்டுள்ள பிரயோகங்களுக்கு ஒப்ப கட்டப்பட்டு ஜாதியாலும் பெயராலும் சிறந்து விளங்கிற்று' என்று அதன் பொருள். இது சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு இன்னம் நல்ல நிலையில் நிற்கும் கோயிலாகும். இக்கல்வெட்டிலிருந்து பல்லவர் காலத்தில் ஆலயங்கள் ஆகமரீதியாக கட்டப்பட்டன என்று திட்டவட்டமாக அறிகிறோம். அக் கோயில்களை கட்டும் கலைஞர்களை தச்சன் என்று தமிழ் நாட்டில் அழைத்தனர் என்று அறிகிறோம். இக்கோயிலைக் கட்டியவன் பரமேச்வரத் தச்சன் என்று அறிகிறோம்.*

தக்ஷன் என்ற தமிழ் சொல்லானது 'தக்ஷன்' என்ற சம்ஸ்கிருத சொல்லின் திரிபு சங்க இலக்கியங்களில் இதுவே தக்கன் என்று வழங்கியுள்ளது. 'தக்ஷன்' என்ற சொல் 'தக்ஷ்' (तक्ष्) என்ற தாதுவிலிருந்து வந்ததாகும். (तक्ष्) என்றால் செதுக்குதல் என்று பொருள்.

तक्षणात् तक्षकः स्मृतः

செதுக்குவதால் தக்ஷன் என்று பெயர். நம் பண்டைய நூலான தொல்காப்பியத்தில் சொல்லதிகாரத்தில்

---

* பரமேச்வரப் பெருந்தச்சன் பாடகபுரத்தைச் சேர்ந்தவன் என்று கல்வெட்டுக் கூறுகிறது. பாடகபுரம் எது என்று எனக்கு முதலில் புலப்படவில்லை. காஞ்சியில் மூன்றும் சதஸ்ஸை ஒட்டி வைத்திருந்த கண்காட்சிக்கு நம் பரமாசார்யாள் வருகைதந்த போது பெரியவாளிடம் இக்கல்வெட்டைப் பற்றி குறிப்பிட்டேன். பெரியவாள் சிரித்துக் கொண்டே 'பாடகபுரம்' என்றால் எது என்று கேட்டார்கள். அதுதானே தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தேன். தெரியவில்லை என்று தடுமாறினேன். புன்னகை பூத்துக் கொண்டே இந்தக் காஞ்சீபுரத்தின் ஒரு பகுதிக்குத்தான் 'பாடகம்' என்று பெயர் என்று அருள்பாலித்தார் அண்ணல்.

"நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின்
பெயரே வினைப்பெயர் உடைப் பெயர்.."

என்ற சூத்திரத்திற்கு உரை எழுதும் இளம்பூரணர், தச்சன் என்ற சொல் வினையால் வரும் பெயர் என்று அறிகிறோம்.

ருக் வேதத்தில் தக்ஷன் என்ற சொல் மரத்தொழில் செய்பவனைக் குறிக்கிறது. ரதங்களையும் மற்ற வாகனங்களையும் செய்பவனாக அவன் கூறப்பட்டுள்ளான். சிறந்த மரச்சிற்பங்களையும் அவன் செய்தான் என்று அறிகிறோம். மழு (परशु) அவனுடைய ஆயுதங்களில் ஒன்றாக கூறப்பட்டுள்ளது. வாஸ்து புருஷன், வாஸ்தோஷ்பதி என்று கருதப்படும். த்வஷ்டா தேவர்களின் தச்சனாகக் கூறப்படுகிறார் யஜுர் வேதத்தில்

तक्षभ्यो रथकारेभ्यश्च

என்று தச்சன், ரதகாரன் என்ற சொல்கள் உபயோகப் படுத்தப்பட்டுள்ளன. பரமசிவன் ஓர் மாபெரும் தச்சன். அவரிடமிருந்துதான் கட்டிடக் கலையே தோன்றியது. ருக் வேதத்தில் தச்சனது கருவியாக கருதப்படும் பரசுவானது, பரமசிவனது ஆயுதமாக உள்ளது. இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சதபதப் பிராம்மணத்தில் தக்ஷன் என்ற குருவினுடைய கருத்தை ஜீவலனசலகி என்பவர் மறுத்ததாக அறிகிறோம். வேத காலத்திலும் அதற்கு பின்வரும் மரம் தான் கட்டிடத்திற்கு முக்ய பொருளாக இருந்ததை அறிவோம்.

தமிழ் இலக்கியங்களில் சிற்ப கலைஞர்கள் பற்றி பல குறிப்புகள் காணப்படுகின்றன. சங்க காலத்திய பத்துப் பாட்டில், கடியனூர் ருத்ரங்கண்ணனார் எழுதிய பெரும்பாணாற்றுப் படையில்,

" தக்கச்சிறா அர் நச்சப்புனைந்த
ஊரா நற்றேருட்டிய புதல்வர் "

தச்சுத்தொழில் வல்லோர், மற்றோர் மெச்சும்படி செய்தமைத்த தேர் பொம்மைகளை சிறுவர்கள் பெருமிதத்துடன் உருட்டி சென்றனர் என்று அறிகிறோம். நெடுநல்வாடையில் தந்தத்தாலான சிறந்த கட்டிலை செதுக்கும் வல்லோர் சீராக அமைந்தனர் என்று

" பொருதொழி நாகமொழியெயிறரு
கெறிந்து
சிருஞ்செம்மையூ மொப்பவல்லோன்
கூருளிக் குயின்ற வீரிலையிடை
யிடுபு........" (117-120)

கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் பல கோயில்கள்.

" அமரர்தருக்கோட்டம், வெள்யானைக்
கோட்டம் புகர்
வெள்ளை நாகர்தம் கோட்டம்,
பகல்வாயில்
